Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 96 • 11.06.2017

இலங்கையின் முதல் தர தமிழ் வார இதழில் உங்கள் வணிக விளம்பரங்கள் நியாயமான விலைகளில் இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## தமிழ்தின போட்டி குளறுபடிகள்

## எனது தலைவர் சம்பந்தன் ஐயாதான்

அதிர வைக்கிறார் அனந்தி

அமைச்சர்கள் விசாரணையில் குறைபாடுகள்

# அவசரப்பட்ட முதல்வர்; அரைகுறை அறிக்கை!

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி;
யாழ்ப்பாணம்.
077 722 6247

கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664

சசிகா
லேணர்ஸ்



சசிகா லேணர்ஸ் தனது மற்றும் ஒரு கிளையை யாழ் நகரில் திறந்துள்ளது.

இல. 82/C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004

# நல்லூர் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.



இல 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**வி.ஜெயந்தி**

தொலைபேசி: **077 973 3183, 021 227 1468**

# KTT travels

## கொழும்பு - யாழ்ப்பாணம்



இளவாலை இருந்து பண்டத்தரிப்பு ஊடக மானிப்பாய் வீதி ஊடக யாழ்ப்பாணம்

உங்கள் முற்பதிவுக்கு எங்களை அழையுங்கள்

யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227

65 uduvil Road manipay.

# Free IELTS seminar

எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 10.07.2017, 11.07.2017 விசேட IELTS கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதுவரை 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு IELTS கற்பிக்கப்பட்டு அதி உயர் சித்தி பெற பயிற்சிகள் வழங்கப்பட்டது.

**இவ் seminar மூலம் வகுப்புகளில் இணையும் மாணவர்களின் IELTS EXAM payment இன் 25% நிறுவனமே வழங்கும்.**

**ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்.**

**கடந்த 7 வருட காலமாக யாழ் மண்ணின் பிரபல IELTS விரிவுரையாளர் MRS.R.ANUSHANTHY என்பவரால் விரிவுரை முன்னெடுக்கப்படும்.**



உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு
076 41 90 327, 077 13 633 89

**LONDON METROPOLITAN COLLEGE**
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்
**PH NUMBER : 021 753 8395**

# Nivithra

Beauty Barlour & Training Academy


## இலவச அழகு கலைப் பயிற்சி

(நிபந்தனைகளிற்குட்பட்டது)

நிவித்ரா அழகுக் கலைப் பயிற்சி நிலையத்தின் புதிய இலவச அழகுக் கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

Personal Grooming
Advance
Beauty Therapy
Diploma

என மூன்று பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் 25.06.2017 திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளவும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



340 K.K.S Road, Jaffna    Telephone 0777 712604



# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPZ | TOPAZ TAILORING | TOPZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna Tel 021 222 4743 Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road Jaffna Tel 021 222 4643 Email : topazagm@gmail.com | No 195, Power House Road Jaffna Tel 021 222 4933 021 221 9889 |



## முஸ்லீம் பெண்களிற்கும் சேலைகட்டிய மன்னார் மாவட்ட செயலகம்

மன்னார் மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் முஸ்லீம் பெண்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளதாககுற்றச்சாட்டுஎழுந்துள்ளது. முஸ்லீம்களின் கலாசார உடையான அபாயா, ஈஷ்காப் அணிந்து எடுத்த புகைப்படங்களில் மாற்றம் செய்யப்பட்டு, சேலையுடன் நிற்பது போன்ற புகைப்படங்கள் வெளியாகியுள்ளதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

மே மாதம் 19ம் திகதி புனரமைக்கப்பட்ட மன்னார் மாவட்ட செயலகத்தின் திறப்புவிழா நடந்தது. இந்த நிகழ்வின்போது மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் குழுப்படம் எடுத்துள்ளனர். முஸ்லீம் உத்தியோகத்தர்கள் தமது கலாசாரத்தின்படி அபாயா, ஈஷ்காப் அணிந்து படம் எடுத்துள்ளனர்.

எனினும், அந்த படங்களில் மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. முஸ்லீம் பெண்களின் உடல்கள் அகற்றப்பட்டு, சேலைகட்டிய வேறு பெண்களின் உடல் பொருத்தப்பட்டு, அனைவரும் சேலை கட்டி நிற்பதை போன்ற படங்கள் வெளியாகியுள்ளன. தமது கலாசார உடைகளை அகற்றி, சேலை கட்டிய உடல்களை இணைப்பது பற்றி யாரும் தம்முடன் பேசவில்லையென்றும் முஸ்லீம் பெண்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## விசாரணையில் கொதித்த கோத்தா!

இரகசிய பொலிசாரால் கோத்தபாய ராஜபக்ச அண்மையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது தெரிந்ததே. இந்த விசாரணைகளின் போது கோத்தபாய முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவில்லையென்ற தகவலை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ளது. பொலிஸ் உயரதிகாரிகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களை அந்த ஊடகம் வெளியிட்டுள்ளது.

முன்னைய விசாரணைகளின்போது கோத்தபாய கடுமையாக கோபமடைந்துள்ளார். கடந்த விசாரணையின்போதும் அவர் கோபமடைந்துள்ளார். பாதுகாப்பு செயலராக இருந்து அதிகாரிகளை ஆட்டிப்படைத்த அவரை, அதிகாரிகள் விசாரணை செய்வது சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

எனினும், கோத்தபாயவின் கோபத்தை தணிக்க முயன்ற அங்கிருந்த உயரதிகாரி விசாரணையாளர்கள் தமது கடமையை செய்கிறார்கள், அவர்களிற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என கேட்டுக்கொண்டுள்ளார். எனினும், இருபது நிமிடங்கள் வரை எதற்கும் பதிலளிக்காமல் மௌனமாகவே இருந்துள்ளார். எனினும், விடாப்பிடியாக நின்ற விசாரணையாளர்கள் எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டாலும் தமது கேள்விகளிற்கு பதிலளிக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர். இந்த இழுபறியால் விசாரணை இன்னொரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஹக்கீம் அட்டாளைசேனை வருகிறாராம்!

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்வரும் 16ம் திகதி அட்டாளைச்சேனைக்கு விஜயம் செய்யவுள்ளார். அட்டாளைச்சேனையில் நடக்கும் இப்தார் நிகழ்வில் கலந்துகொள்ளவே ஹக்கீம் வருவதாக அட்டாளைச்சேனை மத்தியகுழு அறிவித்துள்ளது. ஹக்கீமின் அட்டாளைச்சேனை விஜயம் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

அட்டாளைச்சேனைக்கும் முஸ்லீம் காங்கிரசின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தேசியப்பட்டியல் உறுப்பினராக அட்டாளைச்சேனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் நியமிக்கப்படுவார் என ஏற்கனவே மூன்றுமுறை ஹக்கீம் வாக்களித்திருந்தார். எனினும் அது காற்றில் கரைந்து விட்டது.

அட்டாளைச்சேனையில் காங்கிரசின் தூணாக இருந்த மர்ஹூம் மசூர் சின்னலெப்பைக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்படுமென மேடைகளில் ஹக்கீம் வாக்களித்திருந்தார். எனினும், பின்னர் அதைஅவர் நிறைவேற்றவில்லை. மூன்றாவது முறையாகவும், அட்டாளைச்சேனைக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்படுமென ஹக்கீம் வாக்களித்திருந்தார். எனினும், அதைமீறி ஹக்கீமின் நெருங்கிய நண்பரான சல்மான், மனைவியின் உறவுமுறை பெண்ணை திருமணம் செய்த எம்.எஸ்.தௌபீக்கிற்கும் தேசியப்பட்டியல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அதிருப்தி அட்டாளைச்சேனை முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இருந்துவரும் நிலையிலேயே, எதிர்வரும் 16ம் திகதி ஹக்கீமின் வருகை இடம்பெறுகிறது.

ஹக்கீமின் விஜயத்தின்போது தேசியப்பட்டியல் விவகாரத்தை கிளறவிருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத சில அட்டாளைச்சேனை பிரமுகர்கள் எம்மிடம் தெரிவித்தனர். எவ்வாறாயினும், தேசியப்பட்டியல் விவகாரத்தால் அட்டாளைச்சேனையில் எழுந்துள்ள அதிருப்தியை தணிப்பதே ஹக்கீமின் விஜயத்தின் நோக்கமென கருதப்படுகிறது.

வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்குதமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் இடையூறாக இருப்பதாக குற்றம்சாட்டியுள்ளார்

## வல்வெட்டித்துறையில் பாடசாலையில் குழப்பம்!

வல்வெட்டித்துறை இந்து தமிழ் கலவன் பாடசாலையில் சில ஆசிரியர்களின் செயற்பாட்டால் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதென அறிய முடிகிறது. குழப்பம் விளைவிக்கும் ஆசிரியர்களை இடமாற்றுமாறு கோரி பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர் போராட்டத்தில் ஈடுபடும் முஸ்தீபில் இருப்பதாகவும் அறிய முடிகிறது.

இந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் மாணவனை தாக்கி காயப்படுத்திய விவகாரம் நீதிமன்ற வழக்கு விசாரணையில் உள்ளது. இன்னொரு ஆசிரியர் தனக்கு வழங்கப்பட்ட வகுப்பு பொறுப்பாசிரியர் பொறுப்பை ஏற்காமல் குழப்பம் விளைவிப்பதாக பாடசாலை நிர்வாகத்தால் குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இவர்கள் இருவரையும் இடமாற்றம் செய்யுமாறு பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர் தொடர்ச்சியாக கோரிக்கைவிடுத்து வருகின்றனர். அண்மையில் வடமராட்சி கல்வி வலய அதிகாரிகள் பாடசாலைக்கு விஜயம் செய்து, மாகாண கல்வியமைச்சிற்கு அறிக்கையும் சமர்ப்பித்துள்ளனர்.

இதற்குள் விசமிகளின் தூண்டுதலால் பாடசாலை அதிபரை இலக்கு வைத்து அதிபர் மீது கல்வீச சில மாணவர்கள் முயன்றுள்ளனர். பின்னர் அவர்கள் அடையாளம்காணப்பட்டதைதொடர்ந்து, தமது செயலிற்கு எழுத்துமூல மன்னிப்பு கேட்டுள்ளனர்.

பாடசாலை நிர்வாகத்தை குழப்ப சில ஆசிரியர்கள் திட்டமிட்டு செயற்படுவதாக பாடசாலை நிர்வாகம் குற்றம் சுமத்துகிறது. குழப்பம் விளைவிக்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டுமென வலியுறுத்தியே போராட்டம் நடத்தவே முஸ்தீபுகள் நடப்பதாக தெரிய வந்துள்ளது.

## கண்மூடியிருந்த கல்வி அமைச்சர்!

வடமாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல்குற்றச்சாட்டை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் கல்வியமைச்சர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. குருகுலராஜாவின் நிர்வாக ஆளுமைத்திறன் குறைபாடே அவர் மீதான குற்றச்சாட்டுக்களிற்கு காரணமென்றும், கல்வியமைச்சின் செயற்பாடுகளை அவர் நுணுக்கமாக கவனிப்பதில்லையென்றும் கூறப்படுகிறது.

இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்த சம்பவமொன்றை குறிப்பிட்டுள்ளனர். யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அண்மையில் மாவட்ட செயலகத்தில் நடந்தது. இலங்கை இராணுவத்தினரால் பனை மரத்தின் புத்திகூர்மை என்ற கண்காட்சியொன்று அண்மையில் நடத்தப்பட்டிருந்தது. இந்த கண்காட்சியை பார்வையிட பாடசாலை மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டிருந்தனர். இதற்கு கல்வியமைச்சு எப்படி அனுமதி கொடுத்தது என்ற கேள்வியை வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எழுப்பினார்.

கண்காட்சிக்கு கல்வியமைச்சு அனுமதியளித்த சம்பவத்தை கல்வியமைச்சர் அறிந்திருக்கவில்லை. எனினும் இதற்கான அனுமதியை கல்வியமைச்சின் செயலாளர் வழங்கியிருந்தார். இதன் பின்னரே, படையினரின் நிகழ்வுகளிற்கு பாடசாலை மாணவர்களை அழைத்து செல்வதில்லையென மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மௌனம் காக்கப்போகும் தமிழரசுக்கட்சி!

வடமாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தில் அமைதியாக இருப்பதென வடமாகாணசபையில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர். கட்சி தலைமையின் அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மீதான முதல்வரின் விசாரணை அறிக்கையை உறுப்பினர்களிற்கு வழங்கி, உறுப்பினர்களின் கருத்தறியும் நடவடிக்கையில் முதல்வர் ஈடுபட்டுள்ளார். கடந்த 06ம் திகதி நடந்த வடமாகாணசபை அமர்வில் முதல்வர் அறிக்கையை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், முதல்வர் அந்த அமர்வில் கலந்து கொள்ளவில்லை. மறுநாள், அமர்வில் அறிக்கையை வெளியிடுவதாக அறிவித்திருந்தார்.

மறுநாள் (07) அறிக்கை வெளியாகுமென்றது ஏறத்தாள உறுதியான நிலையில், அன்று காலையில் தமிழரசுக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களிற்கு அவசர கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. தமிழரசுக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு மாகாணசபை உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டை மாகாணசபைக்குள் முதலில் எழுப்பியது தமிழரசுக்கட்சியை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் சிலர்தான். மாகாணசபை அமர்வுகளின்போதும் இந்த விவகாரத்தில் அவர்கள் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டை விசாரணை செய்ய முதல்வர் குழு அமைத்து, அறிக்கையும் சமர்பிக்கப்பட்டுள்ளது. இந்த சமயத்தில் அமைதியாக இருந்து, முதல்வரின் நடவடிக்கையை அவதானிப்பதென கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. விசாரணைக்குழுவின் குறைபாடுகள் பற்றி கூட்டத்தில் குறிப்பிடப்பட்டபோதும், அதை மாகாணசபையில் பேசினால் தமிழரசுக்கட்சியை சேர்ந்த அமைச்சர் குருகுலராஜாவை பாதுகாக்க முயற்சிப்பதான குற்றச்சாட்டு எழலாமென்பதால் அமைதியாக இருக்குமாறு கட்சி தலைமையால் உறுப்பினர்களிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## பதவிவிலக விரும்பும் குருகுலராஜா!

வடமாகாண அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியாகி சர்ச்சை ஏற்பட்டதையடுத்து, கல்வியமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக முடிவெடுத்துள்ளார் த.குருகுலராஜா. தமிழரசுக்கட்சி தலைவருக்கு தனது முடிவை எழுத்துமூலம் அறிவித்துள்ளார். தன்மீது சுமத்தப்பட்டுள்ள ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை முறையான விசாரணைமூலம் நிரூபிக்க வேண்டுமென்றும், அதுவரை கல்வியமைச்சர் பொறுப்பிலிருந்து விலகியிருக்க விரும்புகிறேன் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கட்சி தலைமை இந்த விவகாரத்தில் தலையிட விரும்பவில்லையென தெரிகிறது. விசாரணைக்குழுவை முதல்வர் நியமித்துள்ளதால், அவர் என்ன முடிவெடுக்கிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாமென கட்சித்தலைமை குருகுலராஜாவிற்கு தெரிவித்துள்ளதாக அறிய முடிகிறது.



# போவோமா ஊர்கோலம்?

## குடும்பத்துடன் பட்ஜெட் சுற்றுலா செல்லத்தக்க இடங்கள்

தனி செல்வம்

நம்மவர்கள் அவ்வளவாக ஊர் சுற்றுபவர்கள் அல்ல. அனேகமானவர்களுடன் பேசினால் சுற்றுலா செல்வதை பெரிய விடயமாக கருதுவது தெரிகிறது. பணமுள்ளவர்கள், வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்தான் சுற்றுலா செல்லலாமென நினைக்கிறார்கள். அதற்கு காரணம் சுற்றுலா செல்ல அதிக பணம் தேவையென்ற அவர்கள் அபிப்பிராயம்.

உண்மையில் சுற்றுலா செல்ல அதிக பணம் தேவையில்லை. குறைந்த செலவில் மனதிற்கு இதமான சில பயணங்களை இங்கு பட்டியல்படுத்தியுள்ளோம். குறைந்த செலவில் குடும்பத்துடன் போகக்கூடிய இடங்கள் இவை. எப்பொழுதும் வீடு, அலுவலகம் என ஒரு வட்டத்தில் சுற்றிக்கொண்டிருக்காமல், ஒரு மாறுதலுக்காக ஏதாவதொரு பயணத்தை செய்து பாருங்கள்.

### திருகோணமலை

இப்படி பொதுவாக குறிப்பிட்டுள்ளோம். திருகோணமலையில் பல சுற்றுலாதலங்கள் உள்ளன. குறைந்த விலையில், நிறைந்த மகிழ்ச்சிக்குரிய இடங்கள் உள்ளன. தமிழர்கள் கணிசமாக உள்ள இடமென்பதால் வயதானவர்கள், புதிதாக செல்பவர்கள் தயக்கமின்றி சென்று வரலாம். குறைந்த விலையில்




அறைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இதில் கொஞ்சம் அவதானம் தேவை. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் இடங்கள், சீசனில் சென்றால் அம்போ ஆகிவிடும். உள்ளூர்காரர்கள் இருக்குமிடங்ககளில் அறைகளை எடுங்கள். வீணாண சிரமங்களை தவிர்க்க, சுற்றுலா முகவர்களின் மூலம் அறைகளை முன்பதிவு செய்யலாம். வார இறுதி நாட்களை மொத்தமாக ஒதுக்கிவைத்துவிட்டு திருகோணமலைக்கு போகலாம்.

கொஞ்சம் ஆன்மீகத்தனமான பேர்வழிகள் என்றால் கோணேஸ்வரர் கோயில், கன்னியா வெந்நீரூற்றுக்களிற்கு போகலாம். படகுப்பயணத்தின் மூலம் கோணேஸ்வர மலையின் பின்புறமாக பயணிக்கலாம். புராதன கோயிலின் எச்சங்கள், ஆங்கிலேயரின் பிரெட்ரிக் கோட்டையின் எச்சங்களை பார்வையிடலாம். தேவநம்பியதீசன் காலத்தில் அமைக்கப்பட்ட வெல்கம் விகாரையும் வரலாற்று ஆர்வமுடையவர்களிற்குரிய இடம். இந்த விகாரையை அமைக்க தமிழ் மன்னர்களும் நன்கொடை வழங்கினார்கள் என்பது கூடுதல் சுவாரஸ்ய தகவல்.

திருகோணமலையில் இயற்கையாக அமைந்தது சீன வளைகுடா. ஆங்கிலேயர் அங்குதான் தளமமைத்திருந்தனர். 2ம் உலகப்போரில் உயிரிழந்தவர்களின் சமாதியொன்றும் அங்குள்ளது.

திருகோணமலை என்றதும் நிலாவெளிதான் எல்லோருக்கும் நினைவு வரும். நிலாவெளிக்கு செல்பவர்கள் அறை எடுப்பதில் அவதானமாக இருக்க வேண்டும். நிலாவெளியில் அறை எடுக்காமல் அருகில் எங்காவதும் எடுக்கலாம். நிலாவெளியின் அழகிய கடற்கரை புதியதொரு அனுபவத்தை தரும். படகுப்பயணம் செல்லாம். ஒரு முழுநாள் பயணத்திற்கும் உகந்த இடம்.

இப்பொழுது திருகோணமலையில் கடற் சுற்றுலா பிரபல்யமடைந்து வருகிறது. மேஷக்ரோபர் மாதங்களில் திமிங்கிலம், டொல்பினை பார்வையிட கடலுக்கு அழைத்து செல்கிறார்கள். கடற்படையினர்தான் இதை ஏற்பாடு செய்கிறார்கள். அதனால் பாதுகாப்பு கவலைகள் வேண்டியதில்லை.

### நுவரெலியா

நுவரெலியா, கண்டி, பதுளை பகுதிகளை உள்ளடக்கிய ஒரு சுற்றுலாவை திட்டமிடலாம். இணையத்தின் மூலம் அறைகளை முன்பதிவு செய்யலாம். ஆனால் அனேகமாக இரண்டாயிரம் ரூபாய்க்கு அதிக அறைகள்தான் கிடைக்கும். ஆனால் இதைவிட குறைந்தவிலையில் அறைகளை பெறலாம்.

நுவரெலியா எப்பொழுதும் பயணிகளின் சொர்க்கபுரி. வசந்தகால கொண்டாட்ட சமயத்தில்சென்றீர்கள் எனில் அருமையான அனுபவமாக இருக்கும். அதுதவிர உலக முடிவிடத்திற்கு செல்லலாம்.

கண்டியின் அழகு புதிதாக செல்பவர்களிற்கு புத்துணர்வூட்டலாம். தலதா மாளிகை பார்க்க வேண்டிய இடம். இயற்கை ஆர்வலர்களிற்காகவே பொறுமுல்ல காடுகள் உள்ளன.

பதுளை மாவட்டத்தின் அட்புத்தளை ஒரு அழகிய பிரதேசம். தேயிலை தோட்டங்கள், அமைதியான சூழல், நீர்வீழ்ச்சிகள் என அங்கேயேவாழவிரும்பும் சூழலைக்கொண்ட பிரதேசம். நகர்ப்புற நெருக்கடியில், வேலைச்சுமையுள்ளவர்கள் கொஞ்சம் ஓய்வெடுக்க விரும்பினால் முக்கியமாகவைப்பில் கொஞ்சம் காசிருந்தால் அப்புத்தளைதான் முதல் தெரிவு.

மலையேறுதலுக்கு பிரசித்தமான இடம் மலையுச்சிக்கு சென்றால் இலங்கையின் தென்பகுதியில் உள்ள ஹம்பாந்தோட்டை வெளிச்சவீட்டை கூட பார்க்கலாம். ஹோர்டன் சமவெளி, ஹக்கல தேசிய பூங்கா, நுவரெலியா மலைகள் என் இங்கிருந்து பார்க்க ஒரு ரம்மியமான உலகம் தெரியும். Ella Jungle Resort என ஒரு விடுதியுள்ளது. இயற்கை அழகை மொத்தமாக குத்தகைக்கு எடுத்ததை போன்ற அமைவிடம். சிறிய மலையொன்றில் காடுகள், அருவிகள், ஓடைகள் என புதியதொரு உலகமது. கிட்டத்தட்ட 150 ஏக்கர் விஸ்திரண காட்டில் அமைந்துள்ள விடுதியது. இங்கு செல்பவர்கள் முன்பதிவு செய்து செல்வதே சிறந்தது.

### புத்தளம்

புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் இப்படியொரு அனுவம் உள்ளதா என மூக்கில் விரலை வைப்பீர்கள். மீன்பிடி கிராமமான கல்பிட்டியில் ஒரு கடற்கரை பயணம் உள்ளது. டிசம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் ஆழ்கடலில் வாழும் திமிங்கிலம், டொல்பின் போன்ற மீனினங்கள் இந்த கடலால் புலம்பெயர்ந்து செல்கின்றன. படகுப்பயணங்கள் மூலம் இந்த அழகிய காட்சியை காணலாம்.

போகும்வழியில் சிலாபம் கடற்கரைக்கு மாலைகளில் சென்றால், விதவிதமான கடலுணவு பொரியல்கள் கிடைக்கும். குறைந்த விலையில், அலாதியான சுவையில் கிடைக்கும். கல்பிட்டியை தனியான சுற்றுலாவிற்காக ஒதுக்காமல் மன்னாரையும் இணைக்கலாம். குறைந்த செலவில் அதிகதூரம் பிரயாணிக்கும் சுற்றுலா பிரதேசம் இது. மன்னாரில் முக்கிய கடற்சுற்றலா மையமொன்று உருவாகி வருகிறது. தலைமன்னாருக்கும் இந்தியாவிற்கும் இடையலான ஆதாம் பாலம் (தீடை) சுற்றுலா பயணிகளிற்கு விருப்பத்திற்குரிய இடமாக உள்ளது. இளைஞர் குழுக்கள் குறைந்த செலவில் சுற்றுலா செல்வதற்கு இதை பயன்படுத்தலாம்.

### ஹபரண

கொஞ்சம் பணமிருந்தால் ஹபரண பயணத்தையும் திட்டமிடலாம். ஹபரணவிற்கு செல்வதற்கு முன்னர் பயணத்தை நன்கு திட்டமிடுவதன் மூலம் செலவை கட்டுப்படுத்தலாம். சிகிரியா குன்று, தம்புள்ள குகைகோயில், மின்னேரியா, எக்கோ பார்க் உள்ளிட்ட வனவிலங்கு பூங்காக்கள் என பார்ப்பதற்கு நிறைய இடங்கள் உள்ளன. வரலாற்றிடங்களை பார்க்க விரும்புபவர்கள் சிகிரியா, தம்புள்ள, பொலன்னறுவ பகுதிகளிற்கு செல்லலாம்.

கொஞ்சம் இயற்கை பிரியர்கள் என்றால் தேசிய வனவிலங்கு பூங்காவிற்கு செல்லாலம். காட்டு பயணத்திற்கான வாகனங்கள் நகரத்தில் நிறைந்துள்ளன. எல்லோரும் சொல்லிவைத்ததைபோல ஒரே கட்டணம்தான் அறவிடுகிறார்கள்.

ஹபரண யானைகளின் நகரம். யானைகள் காட்டுக்குள்ளால் கடந்து செல்லும் இடங்களில் எல்லாம் விடுதிகள் உள்ளன. கட்டணம்தான் அதிகம். பணத்தை பற்றி கவலைப்படாதவர்கள் இங்கு செல்லாம்.



# இந்த மாகாணசபையே வேண்டாம்!

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல்குற்றச்சாட்டை விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியாகிவிட்டது. அந்த அறிக்கையில் இரண்டு அமைச்சுக்கள் தொடர்பாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளான விவசாய, கல்வி அமைச்சர்கள் தவிர்ந்து, அரசசேவையில் உள்ள கல்வியமைச்சின் செயலாளரையும் அந்த பதவியில் இருந்து விலக்க வேண்டுமென அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபை தமிழர்களின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வல்ல. தமிழர்களின் அரசியல் உரிமைக்கோரிக்கை யானைப்பசியாக இருந்தால், வடமாகாணசபை சோளப்பொரி. மாகாணசபை அதிகாரங்களை ஏற்பதில்லையென்ற தமிழர் தரப்பின் நீண்டகால விடாப்பிடியின் ஒரே காரணம் மாகாணசபை முறைமை வெறும் கோதாக இருந்ததே. மகிந்த ராஜபக்சவால் முதலமைச்சராக்கி அழகு பார்க்கப்பட்ட, முன்னாள் குழந்தைப்போராளியான பிள்ளையானே மாகாணசபையின் அதிகாரமற்ற முறைமையை குறித்து மூக்கால் அழுதுவிட்டுத்தான் வீட்டுக்கு சென்றார். எனினும், விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னரான காலத்தில் ஏற்பட்ட அரசியல்சூழலை தமிழர் தரப்பால் சமாளிக்க முடியவில்லை. கிடைத்தவரை இலாபம் என பிரிக்கப்பட்ட வடக்கு மாகாணசபை தேர்தலை எதிர்கொண்டு வெற்றியும் பெற்றுவிட்டது.

வடமாகாணசபையால் என்ன செய்ய முடியுமென கேட்டால், ஒன்றும் செய்ய முடியாதென்றுதான் பதில் சொல்லலாம். பெரிய அரசியல் இலக்குகளுடன் போராடுபவர்களின் பார்வையில் அப்படித்தான் தெரியும். அப்படி தெரியாவிட்டால், அவர்கள் தமது பயணத்தில் சறுக்கிவிடுவார்கள். வடமாகாணசபையாலும் சிலவற்றை செய்யலாம் என உணரும் இன்னொரு தரப்பினரும் உள்ளனர். அரசியல் உரிமைக்கு அப்பால், போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு அவசர உதவிகளை மாகாணசபைக்குள்ள அதிகாரத்தினூடாக செய்யலாமென்பது அவர்கள் வாதம்.

மாகாணசபையை பொறுப்பேற்றபோது தமிழ்தேசிய கூட்டமைப்பு road map ஒன்றை உருவாக்கியிருக்க வேண்டும். இனப்பிரச்சனை தீர்வு விவகாரங்களை எப்படி அணுகுவது?, பொறுப்பேற்றுள்ள உள்ளூர் நிர்வாகங்களை எப்படி கையாள்வது? பாராளுமன்ற பிரதிகள் செய்ய வேண்டியது என்ன? உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் செய்ய வேண்டியதென்ன என்பது குறித்த தெளிவான வரைபடம் தயாரித்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. விளைவு, சம்பந்தன் தொடங்கி சந்தியில் போஸ்ரர் ஒட்டுபவர் வரை எல்லோரும் அரசியல் பிரச்சனைகளைதான் பேசுகிறார்கள். உள்ளூர் நிர்வாகத்தை கவனிக்க வேண்டியவர்கள், அதைவிடுத்து அரசியல் தீர்வுக்காக மட்டும் உழைப்பவர்களாக தம்மை காட்டிக்கொள்கிறார்கள். இதனால், தமிழ்தேசிய கூட்டமைப்பின் கையிலிருக்கும் உள்ளூர் நிர்வாகங்கள் சரியாக இயங்க முடியவில்லை. இதன் முதல் உதாரணம், வடக்கு மாகாணசபை.

இதுதான் மாகாணசபையின் முதலாவது தோல்வி.

இப்பொழுது இரண்டாவது தோல்வி நிகழ்ந்துள்ளது அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டால். இரண்டு அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது, அவர்கள் ஊழல் புரிந்தார்கள் என்பதால் தோல்வி நிகழ்ந்ததாக கூறவில்லை. அப்படி நிகழ்ந்திருந்தால் அது அவமானம்தான். உரிமைக்காக போராடும் இனமான நமக்கு, ஏராளம் இழப்புக்கள், குருதி சிந்தல்களின் பின் கிடைத்த இந்த முதலாவது மாகாணசபை ஊழல் பெருச்சாளிகளின் கூடாரம் என்ற அவப்பெயர் வேண்டாம். ஆனால் இதற்கெல்லாம் முன்னதாக நாம் பேச வேண்டிய விடயங்கள் உள்ளன.

முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட இந்த விசாரணைக்குழுவின் அறிக்கையை இறுதியானதாக கொள்ள முடியாத பலவீனங்களை கொண்டிருக்கிறது. ஓய்வுபெற்ற நீதிபதிகள், மூத்த அரசசேவை நிர்வாகியை கொண்ட இந்த குழு, கிட்டத்தட்ட நீதிமன்ற விசாரணை பாணியில் விசாரணைகளை நடத்தி முடித்திருக்கிறது. இந்த முறையே தவறானது. சுயாதீன தேடல்களுடன் விசாரணைக்குழு செயற்பட்டிருக்க வேண்டும். ஐங்கரநேசன், குருகுலராஜா மீது மட்டும் குற்றச்சாட்டு இருக்கவில்லை. ஏனைய இருவர் மீதும் குற்றச்சாட்டு இருந்தது.

போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்தது. வாக்குமூலம் அளிப்பவர்களின் தகவல்களை வைத்து உருவாக்கப்பட்ட அறிக்கை இது. குற்றம் சுமத்திய சிலர், வாக்குமூலமளிக்க அழைக்கப்பட்ட சிலர் சமூகமளிக்கவில்லை. இதுவே, மற்றைய அமைச்சர்கள் மீதான விசாரணை திட்டமிட்டு தவிர்க்கப்பட்டதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவது.

மற்றையவர்கள் மீதான விசாணைகள் உள்நோக்கத்துடன் தவிர்க்கப்பட்டதாகவே வைத்துக்கொண்டால் கூட, மற்றவர்கள் ஊழல் செய்தார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டால் அதை சகித்துக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் நமக்கு எப்பொழுதும் ஒரு குற்றவாளி தேவையென்ற மனநிலையை தவிர்க்க வேண்டும். மாகாணசபை ஊழலை வெளிக்கொணரப் போகிறோமா? அனைத்து ஆதாரங்களையும் திரட்டி முழுமையான விசாரணை அறிக்கை தயாரிக்கவல்ல ஒரு குழுதான் அவசியம். அமைச்சர்கள் ஊழல் செய்திருந்தால் அது, மாகாணசபையை பொறுப்பேற்ற தமிழர்களிற்கு இரண்டாவது தோல்வி. இதற்கான பரிகாரத்தை தீவிரமாக தேடிக்கொண்டிருக்கிறோம். முதலாவது தோல்வியை பற்றி யாரும் பேசுவதில்லை. அதையும் பேச, பரிகாரம் தேட இதுதான் சரியான சந்தர்ப்பம்.

மாகாணசபையில் இருக்கும் கட்சிகளை விட, அதற்குள் இருக்கும் அணிகள் அதிகம். குறுகிய அரசியல் நோக்கங்களிற்காக அணிகளாக பிரிந்து மல்லுக்கட்டி, அதனை அரசியல் அணிகளின் கூடாரமாக மாற்றிவைத்திருக்கிறார்கள். ஒரு அணியை கவிழ்க்க மற்ற அணி திட்டம் தீட்டுவதிலேயே காலத்தை கழிக்கிறது. இவர்களால் தமிழர்களிற்கான ஒரு வெற்றிகரமான நிர்வாக அலகை உருவாக்க முடியாது. இதற்கான பொறுப்பை ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முற்றிலும் புதியதொரு மாகாணசபையே நமக்கு தேவை!




**சுசந்திகா ஜெயசிங்க**
**– முன்னாள் தடகள வீராங்கனை**

விளையாட்டு அமைச்சில் ஆலோசகராக என்னை நியமித்தார்கள். நான் வேலை செய்யாமல் சம்பளம் பெறுவதாக விளையாட்டுதுறை அமைச்சர் சொல்கிறார். நான் என்ன செய்ய வேண்டுமென சொல்லவில்லை. எனது திறமையை விளையாட்டு அமைச்சு பயன்படுத்தவில்லை. ஒலிம்பிக் பதக்கத்தை ஏலம் விட்டபின் அவுஸ்திரேலியாவில் நான் தங்கிவிடப்போவதாக விளையாட்டு அமைச்சர் சொல்கிறார். அவருக்கு சேறடிக்க மட்டும்தான் தெரியும். அமெரிக்காவிற்கும் சென்று நான் வாழலாம். எல்லா நாடுகளிற்கும் செல்லும் வீசா எனக்கும் பிள்ளைக்கும் உள்ளது. இலங்கையில் எனது திறமைக்கு மதிப்பில்லையென்றால் நான் பதக்கம் வென்ற அவுஸ்திரேலியாவிற்கே சென்று கூலி வேலை செய்து பிழைப்பேன்.



**சி.தவராசா**
**– எதிர்க்கட்சி தலைவர், வடமாகாணசபை**

அரசஅதிகாரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டால், அவர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டுத்தான் விசாரணை நடக்கும். அரச சேவையிலேயே இந்த நடைமுறை பின்பற்றப்படுமாக இருந்தால், பொதுவாழ்வில் இருப்பவர்கள் கூடுதல் கண்ணியத்துடன் நடக்க வேண்டும். அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளதென்றால், அவர்கள் உடனடியாக பதவியிலிருந்து விலகுவதுதான் முறை. அதன்பின் விசாரணை நடத்தப்பட்டு, குற்றமற்றவர்கள் என்றால் மீண்டும் பதவிக்கு வரலாம். அவர்கள் அப்படி செயற்பட்டால், அவர்களிற்காக நானும் குரல்கொடுப்பேன்.



**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
**– தமிழ்தேசிய மக்கள் முன்னணி**

சிறிலங்கா பாராளுமன்றகுழுவொன்று பெல்ஜியத்திற்கு போனபோது சிறிதரனும் போயிருந்தார். அவர் இப்பொழுது சொல்கிறார், தான் ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை கோருவதற்காக போகவில்லை என்று. கற்கை சுற்றலா ஒன்றிற்காக சென்றதாகவும், தமது பயணவேலைகள் முடிந்ததும், மாலையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சென்ற அரசதரப்பு பிரதிநிதிகளே ஜிஎஸ்பி பிளசிற்காக வாதாடினார்கள் என்றும் சிறிதரன் சொல்கிறார். ஒரு வாதத்திற்கு அவர் சொல்வதை ஏற்றுக்கொள்வோம். அப்படி நடந்திருந்தால், சிறிதரனும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்திற்கு போய் ஜிஎஸ்பி சலுகையை கொடுக்க வேண்டாம் என்றல்லவா பேசியிருக்க வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் அதற்காக வாதாடிக்கொண்டிருந்தார்கள். சிறிதரன் ஏன் அதை செய்யவில்லை?



**பொ.ஐங்கரநேசன்**
**– விவசாய அமைச்சர், வடமாகாணசபை**

மாகாணசபைமுறை இனப்பிரச்சனைக்கான தீர்வல்ல. நீண்ட நெடிய போராட்டத்தால் கிடைத்த சிறிய அதிகார அலகு. எமக்கு தரப்பட்ட இந்த சிறிய அதிகார அலகிற்குள் நின்று செயற்பட நான் மாகாணசபைக்கு வரவில்லை. இந்த தளத்திலிருந்து மேலெழுந்து இனப்பிரச்சனை தீர்வின் அடுத்த கட்டத்திற்கு நாம் போக வேண்டும். எங்கெங்கு அந்த அதிகாரமுறையை தள்ளிக்கொண்டு வெளிக்கிளம்ப முடியுமோ அங்கு அதை செய்வேன். இதற்காக என்னை தூக்கில் தொங்கவிட்டாலும் கவலையில்லை.



**ஜி.ரி.லிங்கநாதன்**
**– வடமாகாணசபை உறுப்பினர்**

நான் இரண்டு தடவை விசாரணைக் குழுவிடம் சென்றேன். அந்தக் குழுவின் விசாரணை அறிக்கை சரி என 90 வீதம் நான் ஏற்றுக் கொள்கின்றேன். எனது கடமையை நான் செய்து விட்டேன். இனி முதலமைச்சர் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாம் அவர் கையில் உள்ளது. நான் பதவியைப் பெறுவதற்காக இதைச் செய்யவில்லை. எனக்கு விவசாய அமைச்சு பதவி தருவதாகவும் இதுவரை என்னுடன் எவரும் பேசவும் இல்லை. அப்படி தருவதாக இருந்தால் நான் எனது கட்சியுடனும், எனது ஆதரவாளர்களுடனும் கலந்துரையாடிய பின்பே முடிவை எடுப்பேன். எனது தனிப்பட்ட கருத்து எனக்கு விவசாய அமைச்சர் பதவி தேவையில்லை.

## நகைச்சுவை

வடமாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை அறிக்கை கடந்த 07ம் திகதி வடமாகாணசபையில் சமர்பிக்கப்பட்டது. இதன்போது உரையாற்றினார் வடக்கு எதிர்கட்சி தலைவர் சி.தவராசா. இதன்போது கொதித்துபோன புளொட் பிரதிநிதி ஜி.ரி.லிங்கநாதன், "ஆடு நனைகிறதென ஓநாய் அழுகிறதாம்" என கொட்டித்தீர்த்தார். இதில் வேடிக்கை என்னவென்றால், அமைச்சர்களிற்கு எதிரான சாட்சியத்திற்கு தவராசாவை அழைத்துக்கொண்டுதான் லிங்கநாதன் சென்றிருந்தார்.

## கைதட்டல்

அமைச்சர்களின் மீதான குற்றச்சாட்டு அறிக்கை மாகாணசபை உறுப்பினர்களிடம் கையளிக்கப்படுவதற்கு முதல்நாள். அறிக்கை விபரம் மெல்ல கசிந்திருந்தது. அமைச்சர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என வலியுறுத்த சில கட்சிகளின் தலைவர்கள், முக்கிய எம்.பிக்கள் முதல்வரை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர். முழுநாளும் யாருடைய அழைப்பையும் முதல்வர் ஏற்கவில்லை. புறஅழுத்தங்கள் இல்லாமல் வெளிப்படையாக விசாரணை நடந்து, அறிக்கை வெளியாக வேண்டுமென்பதில் முதல்வர் காட்டிய அக்கறையை பாராட்டியே ஆக வேண்டும்.

## குழப்பம்

முஸ்லிம் சமூகத்தின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்களிற்கும் எனக்கும் எந்த தொடர்புமில்லையென முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கேத்தபாய கூறியுள்ளார். தற்போதைய சம்பவங்கள் பற்றித்தான் அவர் பேசியுள்ளார். முன்னர் நடந்தவை பற்றி அவரும் சொல்லவில்லை. யாரும் கேட்கவுமில்லை.



தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



ஐங்கரநேசன்

# அவசரப்பட்ட முதல்வர்; அரைகுறை அறிக்கை!

## விசாரணைக்குழு அறிக்கையின் குழப்பங்கள்!

நம்மாழ்வார்

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி, அதிகார துஷ்பிரயோக, பாரபட்சம், ஊழல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை, கடந்த 07ம் திகதி வட மாகாணசபை உறுப்பினர்களிற்கு வழங்கப் பட்டுள்ளது. அதற்கு முன்னரே உள்ள டக்கத்தில் தவறுகளுடன் சில ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அமைச்சர் ஒருவரே விதிமுறையையும், நம்பிக்கையையும் மீறி அந்த அறிக்கையை கசியவிட்டார் என்ற தகவல்கள் பரவியிருந்தது குறிப்பிடத்தக்கது.

விசாரணைக்குழுவின் அறிக்கை கசிய ஆரம்பித்ததில் இருந்து, பரபரப்பு பற்றிக்கொண்டது. யார் யார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது? என்னென்ன குற்றங்கள் கண்டறியப்பட்டது? என்ற விபரத்தை அறிய மக்கள் மிகுந்த ஆவலை வெளிக்காட்டினார்கள். சமூக வலைத்தளங்களில் இது தொடர்பான விவாதங்கள் தீவிரம் பெற்றிருந்தன. மேலோட்டமான தகவல்களின் மூலம் உருவாக்கிய கருத்துக்களின் அடிப்படை யில், குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் இருவரும் பதவிவிலக வேண்டுமென்ற கருத்து சமூகவலைத்தளங்களில் தீவிரம் பெற்றிருந்தது.

அமைச்சர்களின் விசாரணை அறிக் கையை மாகாணசபையில் சமர்ப்பித்து வடக்கு முதல்வர் உரையாற்றிபோது உங்களில் குற்றமற்றவர்கள் முதற்கல்லை எறியுங்கள் என்றார். இதனால்தானோ என்னவோ அன்று யாரும் வாய் திறக்கவேயில்லை!

அறிக்கை பற்றிய விவாதத்தின்போது குற்றமற்றவர்கள் முதற்கல்லை எறியலாம் என்றால் சட்டரீதியான ஓட்டைகள் இல்லாமல், தவறான தரவுகள் இல்லாமல், பூரணப்படுத்தப்பட்ட அறிக்கையாக அது இருக்கவேண்டியது அத்தியாவசியமானது. அது நடந்ததா?

இந்த கேள்வியுடன் தேடல்களை செய்தபோது, எமக்கு கிடைத்தது பேரதிர்ச்சியான முடிவுகளே. விசாரணைக்குழுவின் அறிக்கையில் தவறான தரவுகள், பிழையான ஊகத்தினடிப்படையிலான முடிவுகள் என்பவற்றுடன், இனப்பிரச்சனையுடன் தொடர்புபடுத்தி மாகாணசபையை விளங்கிக்கொள்ளும் தன்மையும் இல்லாமலிருந்தது வெளிப்பட்டது. வடக்கு முதலமைச்சர் நியமித்த இந்த குழு அடிப்படையில் முறையற்றது. எனினும், வழக்கமான எடுத்தேன் கவிழ்த்தேன் பாணி நிர்வாக முடிவுகளைபோல இந்த விசாரணைக்குழுவை அமைத்து, வேலியில் போன ஓணானை வேட்டிக்குள் பிடித்து விட்டுள்ளார் முதல்வர்.

அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு இருந்தால் அதை முறையான குழுவின் மூலம் விசாரணை செய்ய வேண்டும். ஆனால் அமைக்கப்பட்டதோ தவறான குழு.

### ஏன் தவறான குழு?

ஒரு குற்றச்சாட்டை விசாரணை செய்பவரும், குற்றம்சாட்டப்பட்டவரும் அதே குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் முன்னர் சம்பந்தப்பட்டிருக்ககூடாது. சம்பந்தப் பட்டிருந்தால், அந்த விசாரணை அறிக்கை நியாயமானதென கருத முடியாது.

ஆனால் இந்த விசாரணைக்குழுவில் அப்படியான நடைமுறை பின்பற்றப் படவில்லை.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக இருந்த கூ.பி.டி.பி செயற்பாட்டாளர் பொ.பிரேமதாஸவை கூட்டுறவு திணைக்களம் பதவி நீக்கியிருந்தது. அப்பொழுது பிரேமதாஸ் தொடுத்த வழக்கில், அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.பரமராஜா. வடமாகாணசபை சார்பில் ஆஜரானவர் வடமாகாணசபையின் சட்ட ஆலோசகர் சி.வரதராசா.

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசுபட்டது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்துவரும் வழக்கில் வடமாகாணசபையின் சார்பில் ஆஜரானவர். அப்பொழுது வடக்கு விவசாய அமைச்சரிற்கு எதிராக நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. பின்னர், சட்டத்தரணி மாற்றப்பட்டார். அதன்பின், வழக்கிலிருந்து விவசாய அமைச்சர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இப்பொழுது முதல்வரால் நியமிக்கப் பட்ட விசாரணைக்குழுவில் வழக்கு தொடுனர் சி.வரதராசா. விசாரணைக்குழு உறுப்பினர்களில் ஒருவர் எஸ்.பரமராஜா. மேலே சொன்ன விவகாரங்கள் எல்லாம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட அதிகாரியாக பணியாற்றி ஓய்வுபெற்றவரும் குழுவில் அங்கம் வகிக்க வேண்டுமென குறிப்பிட்டு செ.பத்மநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஓய்வுபெற்ற அரச அதிபர் என ஊடகங்களில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஓய்வுபெற்ற சமயத்தில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராக பணியாற்றியவர். பின்னர் இதே அமைச்சில் திட்ட இயக்குனராகவும் பணியாற்றினார்.

இதைவிட, இன்னொரு கோணத்திலும் இதை அணுகலாம். அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு ஒருவகையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உள்கட்சி விவகாரம். அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டுமாக இருந்தால், கட்சிக்குள்ளாலும் அதை ஆராய்ந்திருக்கலாம். நிர்வாகசேவை மூப்பு, சட்ட புலமையுள்ள பலர் தமிழ்தேசிய கூட்டமைப்பில் உள்ளனர். அல்லது கட்சி சார்பு அடையாளங்கள் இல்லாதவர்களை இணைத்திருக்க வேண்டும். ஆனால், இந்த குழுவில் அங்கம்வகித்த ஒருவரது மனைவியின் சகோதரியின் மகள்தான் வடக்கு சுதந்திரக்கட்சி எம்.பி ஒருவரது மனைவி. விசாரணைக்குழுவில் அங்கம் வகித்தவர் எந்த கட்சி உறுப்பினராக இல்லாதபோதும், விசாரணை அறிக்கைக்கு அரசியல் அர்த்தம் கற்பிக்கப்படும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

### பதத்திற்கு சில சோறுகள்

இந்த அறிக்கையில் விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் என ஆரம்பிக்கும் பகுதியில் 4.7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5 லட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை என்ற உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது "கௌரவ முதலமைச்சரும் இந்த நிகழ்வுக்கு சமூகமளித்திருந்ததாக பொதுமக்கள் குழுவிடம் நேரடியாக தெரிவித்துள்ளனர்" என்ற வசனம் இடம்பெறுகிறது. உண்



குருகுலராஜா

பொதுமக்கள் என யாரோ கூறிய ஒரு தகவலை விசாரணைக்குழு ஆதாரா மாக கொண்டு முடிவுக்கு வருமாக இருந்தால், விசாரணைக்குழு எடுத்த மற்றைய முடிவுகளும் இப்படியான தவறானவையாக இருக்காதென்பதற்கு உத்தரவாதம் உண்டா?

மையில் இந்த நிகழ்வில் முதல்வர் கலந்துகொள்ளவில்லை.

பொதுமக்கள் என யாரோ கூறிய ஒரு தகவலை விசாரணைக்குழு ஆதாரா மாக கொண்டு முடிவுக்கு வருமாக இருந்தால், விசாரணைக்குழு எடுத்த மற்றைய முடிவுகளும் இப்படியான தவறானவையாக இருக்காதென்பதற்கு உத்தரவாதம் உண்டா?

ஐங்கரநேசனிற்கு எதிராக வழக்கு தொடுனர் சுமத்திய குற்றச்சாட்டுக்களை வரிசைப்படுத்திய பின், விசாரணைக்குழு பின்வருமாறு குறிப்பிடுகிறது குற்றச் சாட்டுக்களை முன்வைத்த திரு.ஜி.ரி.லிங்க நாதன், திரு.பிரேமதாஸ், திரு.ரஞ்சன் ஆகியோரும் சமூகமளித்து, கௌரவ அமைச்சருக்கு எதிராக அவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்களை பெறுவதற்கும் அதன்மூலம், விசாரணைக் குழுவுக்கு தெளிவை ஏற்படுத்துவதற்கும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால் அறிக்கையில் குறிப்பிட்டபடி விவசாய அமைச்சரிற்கு முன்னிலையில் பிரேமதாஸ் சமூகமளித்து, சாட்சிய மளித்திருக்கவில்லையென்பதே உண்மை யாகும்.

இதேபோல, இந்திய முதலீட்டாளரான ராம்என்பவர் மூங்கில்செய்கைக்கு அனுமதி கோரிய விவகாரத்தை விசாரணைக் குழு சரியாக அணுகவில்லை. சட்ட புத்தகங்களை மட்டுமே வைத்துக்கொண்டு குழு முடிவெடுத்ததா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. ஏனெனில், தற்போதைய சட்ட ஏற்பாடுகள் மட்டுமே சூழலை பாதுகாக்க போதுமானதல்ல. உதாரணமாக சீமெந்து உற்பத்திக்கு சுண்ணாம்புகல் அகழ்வதற்கு சட்டரீதியான தடைகள் இல்லை. ஆனால், சுண்ணாம்புகல்லை அகழ்வதால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். துறைகளிற்கு பொறுப் பான அமைச்சர்கள் இயற்கை வளங் களை பாதுகாக்கும் நோக்குடன், சூழல் சமநிலையை குலைக்காத விதத்தில் அபிவிருத்தியை செய்யும் பொறுப்புள் ளவர்கள். ஒருவகையில் பார்த்தால், ஐங்கரநேசன் அதைதுணிந்து செய்துள்ளார் என்றும் அர்த்தப்படுத்தலாம்.

மூங்கில் வளர்ப்பிற்கான அனுமதியை நிராகரித்தது ஐங்கரநேசனென முறைப் பாட்டாளர்கள் குறிப்பிட்டபோதும், மாவட்ட செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புகுழு கூட்டத்திலும் மூங்கில் வளர்க்க அனுமதி வழங்குவதில்லையென முடிவெடுக்கப்பட்டது.மூங்கிலிற்குபதிலாக சீமைக்கிளுவையை பயிரிட அனுமதி வழங்கலாமென்றும் முதலீட்டாளர்களிற்கு

கொள்வனவு செய்யப்பட்ட 06 பவுசர்கள் விவசாய அமைச்சின் கீழ் வைத்திருப்பதை. எனினும், காற்றாலைகளை அமைத்த நிறுவனங்கள் பிரதம செயலாளருடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் விவசாய தேவைகள், சுற்றாடல் தேவை களிற்கும், அவசியம் ஏற்படுமிடத்து வறட்சி நிவாரணத்திற்கும் பயன்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப் படையில் அவை விவசாய அமைச்சில் பயன்படுத்தப்படுகின்றன.

இதேபோல Beta power நிறுவனம் வழங்கிய 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விவசாய கிணறுகள் சம்பந்தமாக, முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென குழு பரிந்துரைத்துள்ளது. ஆனால் இப்படியானதொரு பரிந்துரைக்கு முன்னர், இந்த விடயத்தைஎப்படி கையாள்கிறார்கள் என்பதை விவசாய அமைச்சரையோ, அல்லது அமைச்சு கணக்காளர், மாகாண கணக்காளர் ஊடாக அந்த திட்ட முறையை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். விசாரணைக்குழு அதை செய்யவில்லை.

### பார்த்தீனிய பார்வை

இதேபோல, யாழ்கோ பாற்பண்ணை தலைவர் நியமன விவகாரத்தை முழுமை யான பரிமாணத்தில் விசாரணைக்குழு அணுகியதா என்ற கேள்வி எழுகிறது. முன்னாள் தலைவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது, அரசியல் நியமனம் பெற்றிருந்தார் என கிளம்பிய குற்றச்சாட்டுக்கள் மற்றும் புதிய நிர்வாகத்தில் யாழ்கோ பெற்றிருந்த வளர்ச்சி கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். முன்னாள் தலைவர் பதவி

மாற்றம் உள்ளது. இந்த நடவடிக்கையில் நிதி முறைகேடு இருந்தால் அதை ஆதாரபூர்வமாக குறிப்பிடுவதே பொருத்தம். அதை தவிர்த்து, பார்த்தீனிய ஒழிப்பிற்கு செலவிட்ட பணம் வீண் விரயமென கொள்கை முடிவுகளை விமர்சிப்பது, இந்த திட்டம் தோல்வியடைந்த திட்டமென இப்பொழுதே வரையறுப்பது பொருத்த மானதா என்ற கேள்வியும் உண்டு.

### கல்வியிலும் உண்டு உதாரணங்கள்


கல்வியமைச்சரின் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒன்று யூனியன் கல்லூரி அதிபராக வரதனை நியமித்தது. வடமாகாணசபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரனால் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

யூனியன் கல்லூரி அதிபர் வெற்றிடம் ஏற்பட்டபோது, நேர்முக தேர்வுசபை நடத்திய நேர்முகத்தில் வரதன் முதலிடம் பிடித்தார். நந்தீஸ்வரன் இரண்டாமிடத்தை பெற்றுள்ளார். இரண்டாமிடத்தை பெற்றவரை நியமிக்குமாறு வலிகாமத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான தமிழரசுக்கட்சி தலைவர் ஒருவர் கோரியிருக்கிறார். எனினும் வரதன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தரம் வீவீ ஐ சேர்ந்தவர் என்பதில் விதிமீறல் நிகழ்ந்திருப்பில் ஏற்றுக்கொள்ளளலாம். ஆனால், கல்வி விடுமுறையில் (study leave) உள்ளவரை அந்த பதவிக்கு நியமிக்க முடியாதென தாபனவிதி கோவையில் குறிப்பிடப்படவில்லை.


வடமராட்சி வலய கல்விப்பணிப் பாளராக இருந்த நந்தகுமார் இடமாற்றப்பட்டதில்விதிமீறல்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொறுப்பும் கல்வியமைச்சரிற்கு இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோல, கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் அதிபராக கடமையாற்றி யவர் சிறுமியொருவருடன் தகாத முறையில் நடக்க முற்பட்ட விடயத்தில், கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளர் மற்றும் அதிபரை காப்பாற்ற கல்வியமைச்சர் முயன்றார் என கருத வாய்ப்பில்லை. காரணம், அவர்கள் இருவரும் அரசியல் ரீதியாக கல்வியமைச்சரின் எதிர்முகாமை சேர்ந்தவர்கள். வலயக்கல்விப் பணிப் பாளரின் விசாரணை முறையாக நடந்ததை


சத்தியலிங்கம்


தவராசா - சரவணபவன் - இந்தியதூதர் நடராஜன்


டெனீஸ்வரன்

குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் மூங்கில் நிலத்தின் கீழுள்ள நைதரசன் வாயுவை உறிஞ்சி எடுத்துவிடக்கூடியது. சீமைக்கிளுவையில் இந்த அபாயம் இல்லை.

மூங்கில் விவகாரத்தில் ஐங்கரநேசன் இலஞ்சம் வாங்கியதற்கு, கேட்டதற்கு எந்த சான்றுமில்லை. மூங்கில் பயிரிட அனுமதி கோரிய ஒருவரை, ஆவணங்களுடன் நேரில் வருமாறு அழைத்ததை, இலஞ்சம் வாங்க முயற்சிப்பதாக அபிப்பிராயப்பட முடியாது.

வைரமுத்துவின் வருகையை களியாட்ட விழாவாக குழு வரையறுத்துள்ளது. தென்னிந்திய கலைஞர்களை அழைத்து வந்து நடத்தப்படும் ஆடல்,பாடல் நிகழ்வு களை குழுவினர் எப்படி வரையறுப் பார்கள்?

விவசாய அமைச்சர் மீது சில உறுப் பினர்களால் நீண்டகாலமாக சுமத்தப்பட்டு வந்த . குற்றச்சாட்டு காற்றாலை அமைப்பதில் ஊழல் செய்தார் என்பது. எனினும், விசாரணைக்குழு அதற்கான சாட்சியங்கள் இல்லையென தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் இதில் அமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, காற்றாலை அமைத்த Beta power நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத்தில்

நீக்கம் செய்யப்பட்ட இரண்டு வருடங்களின் பின்னர்தான் குற்றப்பத்திரம் சமர்பிக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், விசார ணைகளை முடித்து அதன் அறிக்கையையே அப்பொழுது சமர்ப்பித்ததாக யாழ்கோ நிர்வாகிகள் குறிப்பிடுகிறார்கள்.

பார்த்தீனியம் ஒழிப்பு திட்டம் பற்றி குழு விசனம் தெரிவித்திருக்கிறது. ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் வெற்றியடையாத சூழலில், புதிதாக 5 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் பலனற்ற, நிதி வீண் விரயமானதென குழு கருதியுள்ளது. உண்மையில் பார்த் தீனியத்தை முழுமையாக அழிப்பது உடன டியாக சிரமமானது. Glyphosate என்ற கிருமிநாசினிதான் பார்த்தீனியத்தை முழுமையாக அழிக்கவல்லது. ஆனால் இலங்கையில் அது பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது.ஆகவே முழுமையான பார்த்தீனிய அழிப்பென்பது பொதுமக்கள் விழிப்புணர்வில்தான் தங்கியுள்ளது. 2014 இற்கு முன்னர் பார்த்தீனியம் தொடர்பாக மக்கள் அறிந்திருந்ததற்கும், 2014இல் பார்த்தீனிய ஒழிப்பு திட்டத்தின் பின் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த விழிப்புணர்விற்குமிடையில் நிறைய

**வைரமுத்துவின் வருகையை களியாட்ட விழாவாக குழு வரையறுத்துள்ளது. தென்னிந்திய கலைஞர்களை அழைத்து வந்து நடத்தப்படும் ஆடல்,பாடல் நிகழ்வு களை குழுவினர் எப்படி வரையறுப்பார்கள்?**

ஆனால், அவரது முன்னைய நியமனமே முறையற்றது, அரசியல் செல்வாக்கால் நிகழ்ந்ததென விசாரணைக்குழு கண்ட றிந்துள்ளது. முன்னைய ஆட்சியில் அதிகாரமையங்களின் தயவில் அந்த பதவிக்கு வந்ததாகத்தானே குழு கருதுகிறது. இப்படியான சீர்கேடுகளுடன் இயங்கிய கல்வி நிர்வாகத்தை சீர்செய்யும் பெரிய

கல்வியமைச்சர் கண்காணிக்க தவறிய குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.


எனினும், விசாரணைக்குழுவின் அறிக்கைப்படி கல்வியமைச்சின் செயலாளரின் நடவடிக்கைகள், முடிவு களில் கல்வியமைச்சர் தலையிடுவதில்லை, தெரிந்துகொள்வதில்லை என்று பொருள் கொள்ள முடியும். எனினும், இதே விதமான நடத்தை விவசாய அமைச்சர் விவகாரத்தில் வேறுவிதமாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர் அளவிற்கு அதிக மாக தலையிடுகிறார், அது அதிகார துஷ்பிரயோகமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தவராசாவிற்கு தார்மீக தகுதி உண்டா?

குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்கள் பதவி விலக வேண்டுமென வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தவராசா இப்பொழுது திடீர் புனிதராகியுள்ளார். எதிர்க்கட்சி தலைவராக எதிர்ப்பது சரிதான். ஆனால் இதை வலியுறுத்தும் தார்மீக தகுதி அவருக்கு உள்ளதா?

வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் நந்தகுமாரின் நியமனம் உள்ளிட்ட பலமுறை கேடான நியமனங்கள் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 9-ம் பக்கம்...



சீ.யோகேஸ்வரன்


# ஹலோ... மக்கள் பேசுகிறோம்!

## உங்கள் அழைப்பிற்கு பதிலளிக்கும் எம்.பிக்கள் பட்டியல்!

### இந்தவாரம் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்


ஞா.ஸ்ரீநேசன்


வியாழேந்திரன்


அமீர் அலி


அலி சாகிர் மௌலானா

தீபம் குழு

ஒருவர் பாராளுமன்ற தேர்தலில் வெற்றியடைய நிறைய பணம் செலவிட வேண்டும். விருப்புவாக்குமுறை ஏற்படுத்திய சீரழிவு இது. பணமிருந்தால்தான் தேர்தலில் வெற்றியடையலாம். இதனால் நல்லவர்கள், மக்களிற்கு சேவைசெய்ய வேண்டுமென்ற உண்மையான அர்ப்பணிப்புள்ளவர்கள், அநீதிக்கெதிரான போர்க்குணம் கொண்டவர்கள் அரசியலிற்கு வருவதில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் பணமொன்றே தகுதியாகிவிடுகிறது. அரசியலின் சீரழிவிற்கு இதுதான் பிரதான காரணம்.

பணம், அதிகாரம் உள்ளவர்கள் தம்மை பற்றிய நல் அபிப்பிராய பிம்பங்களை இலகுவாக மக்கள் மத்தியில் உருவாக்கிவிடுகிறார்கள். உங்களிற்காக வாழ்கிறேன்ஞ் அரசியலிற்கு வந்ததே உங்களிற்காகத்தான்ஞ் எனக்கு பதவியில் ஆசையில்லை, இனத்தின் விடிவுக்குத்தான் இந்த பதவியில் இருக்கிறேன் என தேர்தல் சமயத்தில் அடித்து விடுவார்கள். அதை அப்படியே நம்பியவர்கள், பாதி நம்பியவர்கள் என பல தரப்பினர் இருப்பார்கள். தேர்தலின் பின், நாம் வாக்களித்தவர்களிடம் எதற்காகவாவது போக வேண்டுமென நினைப்பவர்களிற்காக இந்த பகுதி.

நாம் வாக்களித்தவர் நமது வரவிற்காகத்தான் வாசலில் காத்திருக்கிறார்... எனது அழைப்பிற்காகத்தான் தொலைபேசியை வைத்துக்கொண்டிருக்கிறார் என்பது மாதிரி யோசிப்பவர்களை சற்று எச்சரிக்கை செய்ய இந்த பகுதி உதவும். மக்கள் பிரதிநிதிகள் என்பவர்களை எப்படி தொடர்புகொள்வதென தெரியாமல், அவர்களை தொடர்பு கொள்ளலாமா என்பதே தெரியாமல் இருப்பவர்களிற்கு வழிகாட்டவும் இந்த பகுதி உதவலாம்.

www.parliament.lk இது இலங்கை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் அமைந்துள்ள இந்த தளத்தில், பாராளுமன்றம் தொடர்புபட்ட அத்தனை விபரங்களும் பதிவேற்றப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சுய விபரங்களும் பதிவேற்றப்பட்டுள்ளன. அவர்களின் தொலைபேசி இலக்கமும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்றம் அமர்வு நாட்களில், பாராளுமன்ற அமர்வு அல்லாத நாட்களில் என இரண்டு தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நமது மக்கள் பிரதிநிதிகளுடன் மக்கள் பேசலாமா? நினைத்த மாத்திரத்தில் யாரை சந்திக்கலாம்? இப்படியான பட்டியல் ஒன்றை யாழ் ,வன்னி தேர்தல் தொகுதியை வைத்து கடந்த இரண்டு வாரங்களாக வெளியிட்டோம்.

வெவ்வேறு இலக்கங்களில் இருந்து அவர்கள் குறிப்பிட்டுள்ள இலக்கங்களை தொடர்பு கொண்டோம். கடந்த பதினைந்து நாட்களாக மேற்கொண்ட முயற்சிகளிலிருந்து, யாரை சுலபமாக தொடர்பு கொள்ளலாம், யாரை சிரமப்பட்டு தொடர்பு கொள்ளலாம், யாரை தொடர்பு கொள்ள முடியாதென்ற ஒரு பட்டியலை உருவாக்கியுள்ளோம். இந்த வாரம் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்.

**அமீர் அலி**

முதலாமிடத்தில் இருப்பவர் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் அமீர் அலி. அனேகமாக எப்பொழுது தொலைபேசியில் அழைத்தாலும் அவருடன் பேச முடிகிறது. எந்த சிரமமும் கிடையாது. வழக்கமான தமிழ் அரசியல் தலைவர்களிடம் இல்லாத இயல்பிது. பாராளுமன்ற அமர்வு நாட்களில் அனேகமான மக்கள் பிரதிநிதிகளை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாது. ஆனால் அமீர் அலி விதிவிலக்கு. நெருக்கடியான சமயங்களில் பதிலளிக்க முடியாவிட்டால் பின்னர் அவராக அழைப்பேற்படுத்துகிறார்.

பாராளுமன்ற அமர்வு இல்லாத நாட்களில் ஓட்டமாவடியில் உள்ள அலுவலகத்தில் மக்களை சந்திக்கிறார். தமிழ் பிரதேசங்களிற்குள் வருவதில்லை என்ற விமர்சனம் உள்ளது. எனினும், ஓட்டமாவடி அலுவலகத்திற்கு செல்பவர்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்கிறார்.

**அலி சாகிர் மௌலானா**

இரண்டாம் இடத்தில் இருப்பவர் முஸ்லீம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா. எப்பொழுது அழைத்தாலும் தொடர்பு கிடைக்குமென்ற உத்தரவாதம் தர முடியாது. ஆனால் பெரும்பாலான சமயங்களில் அழைப்பை ஏற்கிறார். நமது முயற்சியில் ஓரிரு தடவைகளில் அழைப்பை ஏற்படுத்தினார். தொடர்பு கொள்வதில் அதிக சிரமமில்லாதவர் என்ற அபிப்பிராயம்தான் பொதுமக்களிடமும் உள்ளது. ஏறாவூரில் உள்ள அலுவலகத்தில் அனேகமாக சந்திக்க முடிகிறது. முடியாதவர்களும் சில முயற்சியின் பின் பார்த்துவிடலாம். கிட்டத்தட்ட முஸ்லிம் மக்களின் எம்.பியாகத்தான் இவர் செயற்படுகிறார். தமிழ் மக்களும் அவ்வளவாக இவரது தொடர்பு எல்லைக்குள் வருவது குறைவு.

**வியாழேந்திரன் (அமல்)**

இந்த பட்டியலில் மூன்றாமிடத்தில் இருப்பவர் வியாழேந்திரன். தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பி. மட்டக்களப்பு நகரத்தில் உள்ள அலுவலகத்தில் அனேகமாக சந்திக்க முடிகிறது. பாராளுமன்ற அமர்வுகள், தனிப்பட்ட பயணத்தில் இருப்பதை விட, மற்றைய நாட்களில் அலுவலகத்திற்கு தவறாமல் வருகிறார். மாவட்டத்தில் எந்த பகுதியில் பிரச்சனை என்றாலும் முதல் ஆளாக போய் நிற்கிறார். பிரச்சனையில் முன்னுக்கு நிற்பது, அதிரடி பேச்சுக்கள் என தமிழ்தேசிய போர்முலாவுக்குள்ளால் அரசியல் செய்து ஸ்கோர் செய்துகொண்டிருக்கிறார். ஆனால் தொடர்பாடலில் கோட்டை விடுகிறார். இளைஞராக இருப்பது, இளைஞர்கள் அவருடன் இருப்பது என்ற சாதகங்கள் தொடர்பாடலில் தாக்கம் செலுத்துவதாக தெரியவில்லை. அனேகமான சந்தர்ப்பங்களில் அழைப்புக்கள் நிராகரிக்கப்படுகின்றன. சிரமத்தின் மத்தியிலேயே தொடர்பு கொள்ள முடிகிறது. இந்த குறையை தவிர்த்தால், மட்டக்களப்பில் எம்.பி ஆசனமொன்றை நீண்டகாலத்திற்கு இவர் பட்டா எழுதி வைத்துக்கொள்ளலாம்.

**ஞா.ஸ்ரீநேசன்**

நான்காம் இடத்தில் இருப்பவர் தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பி ஸ்ரீநேசன். அவரை தொடர்புகொள்ளலாமா இல்லையா என்பதற்கான பதிலை சொல்வதும் ஒன்றுதான், சூதாட்டத்தில் பணத்தை கட்டுவதும் ஒன்றுதான். சில சமயங்களில் உடனே கிடைக்கிறது. சில சமயங்களில் கிடைக்கவே மாட்டாது. நமது முயற்சியொன்றில் முதலாம் முறையே அழைப்பை ஏற்றார். மற்றும் சில முயற்சிகளில் அழைப்பை ஏற்கவில்லை.

மட்டக்களப்பு மாமாங்கம் ஆலயத்தின் முன்னால் உள்ள அலுவலகத்தில் அனேகமாக இருப்பார். எல்லா நாட்களிலும் சந்திக்க முடியுமென்ற உத்தரவாதம் தர முடியாது. இருக்கும் நாளை உறுதிசெய்துவிட்டு செல்வதால் சிரமங்களை குறைக்கலாம். கூட்டமைப்பின் சக எம்.பிக்கள் போல அல்லாமல், இவர் மக்களிற்குள் அதிகமாக செல்வதும் குறைவு.

அரசதுறையில் இருந்து அரசியலிற்கு அண்மையில் வந்தவர். மக்கள் சந்திப்புக்கள், தொடர்பாடலில் உள்ள பலவீனம் அரசியல் அனுபவமின்மையை வெளிப்படுத்துகிறது. அவசியம் மாற்றிக்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள்.

**சீ.யோகேஸ்வரன்**

இந்த பட்டியலில் இறுதி இடத்தில் இருப்பவர் தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பி யோகேஸ்வரன். சித்தன் போக்கு சிவன் போக்கு என்பார்களேஞ் தொடர்பாடலில் யோகேஸ்வரனின் நிலை அதுதான். பாராளுமன்ற இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்திற்கு அழைத்தால், இந்த இலக்கம் தற்காலிகமாக பாவனையில் இல்லையென மறுமுனையில் பதில் வருகிறது. அவரது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஊடகத்துறையினரின் மத்தியில் மட்டும் புழக்கத்தில் உள்ளது. அந்த இலக்கத்துடனும் எப்பொழுதும் தொடர்பு கொள்ள முடிவதில்லை. சில சமயங்களில் அழைப்பை ஏற்பார், சில சமயங்களில் ஏற்க மாட்டார் என்கிறார்கள். எல்லாம் காற்றுவாக்கில் உலாவும் கதைகள்தான். ஏனெனில், நாம் பலமுறை முயன்றும் பலனிருக்கவில்லை.

மட்டக்களப்பு நகரத்தில் இவரது வீடு, அலுவலகம் இரண்டும் ஒன்றாக உள்ளது. அங்கு சுலபமாக நேரில் சந்திக்க முடிகிறது. தனிப்பட்ட பயணங்கள், பாராளுமன்ற அமர்வு நாட்கள் தவிர்ந்த நாட்களில் அங்கு சந்திக்க முடிகிறது. சுலபமாக சந்திக்க முடியும் எம்.பிக்கள் பட்டியல் தயாரித்தால் நிச்சயம் முன்னிலைக்கு வரக்கூடியவர். எனினும், தொடர்பாடலில் மொத்தமாக கோட்டைவிட்டு, அதிருப்தியை சம்பாதிக்கிறார். இவரது இந்து அடையாளம், அதை தீவிரமாக வெளிப்படுத்திக் கொள்வது முஸ்லிம் மக்களை சற்று தள்ளியே வைத்துள்ளது. இந்துக்களின் எம்.பி என்பது மாதிரியான அடையாளத்தை தவிர்த்தால் நல்லது.

7-ம் பக்க தொடர்ச்சி...

அந்த ஆட்சியின் பங்காளியாக, வடக்கு நிர்வாகத்தை கவனித்த ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினர் அவர். அந்த சமயத்தில் வழங்கப்பட்ட முறைகேடான நியமனங்கள் தொடர்பான, அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பான சுயவிமர்சனங்களை பகிரங்கமாக செய்திருக்கிறாரா? அப்படி இல்லையெனில், எல்லாவற்றையும் எதிர்க்கும் வழக்கமான எதிர்க்கட்சி தலைவரின் குரலாக மட்டும்தானே அவரது குரலை கருதலாம்.

### முதல்வரின் தவறான முடிவு

கொள்கை (policy) சார்ந்த விவகாரங்களிலும் இந்தகுழு தலையிட்டுள்ளது. உண்மையில் அப்படி செய்வது முறையற்றது. கொள்கை, நிர்வாக செயற்பாடுகளில் அரச அதிகாரியொருவரை விசாரணை செய்வதைபோல மக்கள் பிரதிநிதிகளை விசாரணை செய்வது முறையற்றது. இலங்கையின் மரபான அரசியல் கலாசாரத்தில் இல்லாதது. நமது அரசியல் கலாசாரத்தில் இல்லாத ஒரு விடயத்தை முதல்வர் முயற்சித்திருக்கிறார் என்றளவில் பாராட்டலாம். ஆனால், அதை சரியாக செய்து முடிக்காதது அவரது செயலை முட்டாள்த்தனமானதாக்கியுள்ளது.

அமைச்சர்களான மக்கள் பிரதிநிதிகள் மீது முதல்வர் விசாரணை செய்யப்போகிறார் என்றால், அதை மிக இரகசியமாக செய்திருக்க வேண்டும். அந்த அறிக்கை வெளியில் கசியாமல் பார்த்து கொண்டிருக்க வேண்டும். உண்மையில் ஊழல் நடந்ததா என்பதை கண்டறிந்தால் அதை வெளிப்படுத்த தயங்க வேண்டியதில்லை. கணக்காய்வு அறிக்கைகள் இல்லாமல், முழுமையான ஆய்வுகள் இல்லாமல் ஊழலை கண்டறிய முடியாது. அப்படி செய்து, அதை பகிரங்கப்படுத்தியிருக்க வேண்டியதே முதல்வர் செய்திருக்க வேண்டியது. ஆனால், முதல்வர் நம்பிக்கையினடிப்படையில் பகிர்ந்த அறிக்கையை அமைச்சர் ஒருவர் வெளியில் கசியவிட்டு, வடமாகாண நிர்வாகத்தையே ஆட்டம்காண வைத்துவிட்டார்.

இந்த விடயத்தில் முதல்வர் புத்திசாலித்தனமாக நடக்கவில்லையென்றே தெரிகிறது. சாதாரணமாக கையாண்டிக்க வேண்டிய பிரச்சனையை சிக்கலாக்கியுள்ளார். ஒன்றில் அமைச்சர்கள் பதவி விலக்கப்படலாம். அப்படியானால், விசாரணைக்குழுவை அவர்கள் சட்டரீதியாக கேள்விக்குட்படுத்தலாம். ஆனால் அமைச்சரவை மாற்றத்தில் ஏதுவும் செய்ய முடியாது. விவகாரம் நீதிமன்றத்திற்கு போய் பதவிநீக்கப்பட்ட அமைச்சர்களிற்கு சார்பாக தீர்ப்பு வந்தால், முறையற்ற பதவிநீக்கமென்ற பழிச்சொல்லிற்கு முதல்வர் ஆளாகலாம்.

அமைச்சர்களை பதவிநீக்க மறுத்தால், குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்களை பாதுகாக்கிறார் என்ற வரலாற்றின் பழிச்சொல்லிற்கு ஆளாவார். முதல்வர் இனி எதை குழப்ப போகிறார்?





வவுனியா வடக்கு பிரதேசசபையின் புதிய அலுவலகக் கட்டிடம் மற்றும் காலாச்சார மண்டபம் என்பவற்றின் திறப்பு விழா அண்மையில் நடந்தது. வவுனியா வடக்கு பிரதேசசபையின் செயலாளர் திரு.க.சத்தியசீலன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு கல்வியமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.
## தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

London metropolitan college

வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 96**

Full Name :......................................

Address :......................................

Nic :......................................


Phone Number :......................................

## கடந்த மே மாதம் நடைபெற்ற தீபம் பரிசு போட்டியில் வெற்றி பெற்ற வாசகர்கள் விபரம்

| பெயர் | விலாசம் |
|---|---|
| பரமான்கன் பிரகலாதன் | தாழங்குடா, ஆரயம்பதி |
| L.கவிஸ்ரன் | EXE' அலுவலகம், மட்டக்களப்பு |
| தேவநாதன் கிருபானந் | ஏழாலை தெற்கு, சுன்னாகம் |
| அம்பலவாணர் பாலச்சந்திரன் | சொத்வசம், திட்டிப்புலம், தெல்லிப்பளை |
| திருமதி. பரமேஸ்வரி சரவணமுத்து | இல.8 - 4/3, கம்டென் ஒழுங்கை, கொழும்பு 06 |
| சுப்ரமணியம் புண்ணியசீலன் | இல.31 2/3, கொழும்பு 06 |
| கோபாலப்பிள்ளை பத்மயன் | சரஸ்வதி வித்யாலயம் ஒழுங்கை, மயில்யோடை, கரவெட்டி வடக்கு, கரவெட்டி |
| கணபதிப்பிள்ளை சாமிநாதப்பிள்ளை ராஜ்குமார் | இல.71, 1ம் குறுக்கு வீதி, வவுனியா |
| S. நிரோசன் | நிறைவளம், சுன்னாகம் வீதி, புத்தூர் |
| இரத்தினசிங்கம் செல்வலிங்கம் | திடல்வளவு, நவிண்டில், கரவெட்டி. |

மேற்படி போட்டியில் வெற்றியாளர்களுக்கு விக்கி LEARNERS வழங்கும் 2500 ரூபா பெறுமதியான கூப்பன் உங்கள் விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.


நிகழ்ச்சி ஒன்றில் ஒப்பனையில் இருக்கும் கலைஞர்களை முதல்வர் எம்.ஜி.ஆர். வாழ்த்துகிறார்.


வி.எஸ்.ராகவனுக்கு விருது வழங்குகிறார் எம்.ஜி.ஆர்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# உரிமைக்குரல்!

**எம்ஜிஆர்.** படங்களின் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன், படத்தில் நடிக்க இருக்கும் நடிகர், நடிகையர் யார் என்பதை தேர்வு செய்யும் பொறுப்பை பெரும்பாலும் அவரிடமே தயாரிப்பாளர்கள் விட்டுவிடுவது வழக்கம். எம்.ஜி.ஆர் குறிப்பிடும் நடிகர்கள் பட்டியலில் முக்கியமாக இடம்பெறுபவர் பண்பட்ட நடிகரான வி.எஸ்.ராகவன்.

எம்.ஜி.ஆரின் 100வது படமான 'ஒளி விளக்கு' படத்தில்தான் முதன்முதலில் அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு வி.எஸ்.ராகவனுக்குக் கிடைத்தது. அதன்பிறகு, 'எங்கள் தங்கம்', 'சங்கே முழங்கு','உரிமைக்குரல்' உட்பட எம்.ஜி.ஆர் நடித்த கடைசி படமான 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரை பல படங்களில் அவரோடு வி.எஸ்.ராகவன் நடித்துள்ளார்.

எம்.ஜி.ஆர் படங்களில் நடிக்க நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆர்வம் காட்டுவார்கள். காரணம், மற்ற படங்களில் கிடைப்பதை விட, அவர் நடிக்கும் படங்களில் கூடுதலான சம்பளம் கிடைக்கும். அதோடு, பேசியபடி சக கலைஞர்களுக்கு பணம் கொடுக்கப் பட்டுவிட்டதா என்பதை எம்.ஜி.ஆர் உறுதிப்படுத்திக் கொள்வார்.

'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தில் நடிக்க வி.எஸ்.ராகவனுக்கு குறிப்பிட்ட தொகை சம்பளமாக நிர்ணயிக்கப் பட்டது. படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, சம்பளத்தை குறைத்துக் கொள்ளுமாறு தயாரிப்பு தரப்பில் இருந்து வி.எஸ்.ராகவனுக்கு கோரிக்கை விடப்பட்டது. அவருக்கோ தர்மசங்கடம். தனது நிலையை கவிஞர் வாலியிடம் கூறினார். உடனே, வாலி ஒரு யோசனை கூறினார்.


சங்கே முழங்கு' படத்தில் எம்.ஜி.ஆருடன் வி.எஸ்.ராகவன்.

அந்த யோசனையை வி.எஸ்.ராகவன் செயல்படுத்தினார். வாலியின் யோசனைப் படி தயாரிப்பு தரப்பிடம் வி.எஸ்.ராகவன் ஏவிய அஸ்திரம் இதுதான். "என் சம்பளம் எம்.ஜி.ஆரின் ஒப்புதலோடு முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர் முடிவு செய்த தொகையைவிட குறைவாக நான் வாங்கிக் கொண்டால் அவர் வருத்தப்படுவார். அவருக்கு நான் என்ன பதில் சொல்வது?" என்றார். மறுபேச்சு இல்லாமல் ஏற்கெனவே பேசிய சம்பளமே அவருக்கு கிடைத்தது.

வி.எஸ்.ராகவனின் தாயார் உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். தாயாரை கவனித்துக் கொள்வதற்காக மருத்துவமனையில் வி.எஸ்.ராகவன் இருந்தபோதுதான் இயல், இசை, நாடக மன்றத்துக்கு கவுரவச் செயலாளராக அவரை எம்.ஜி.ஆர் நியமித்தார்.

அந்த சமயத்தில் எம்.ஜி.ஆரின் உதவியாளர் ஒருநாள் திடீரென வி.எஸ். ராகவன் வீட்டுக்கு வந்து அவரிடம் ஒரு பெரும் தொகையை கொடுத்து, "உங்கள் தாயாரின் மருத்துவ செலவுக்காக எம்.ஜி.ஆர் கொடுக்கச் சொன்னார்" என்றார். அதை ஏற்க மறுத்த வி.எஸ். ராகவன், "இந்தப் பணத்துக்கு இப்போது அவசியம் இல்லை. என்னோட நன்றியைத் தெரிவித்து பணத்தை திருப்பி அவர்கிட்ட கொடுத்துடுங்க" என்றார்.

'நாம் கொடுக்கும் பணத்தை மறுக்கிறாரே? நம்மை வி.எஸ்.ராகவன் நெருக்கமாக நினைக்கவில்லையோ?' என்று எம்.ஜி.ஆருக்கு அவர் மீது வருத்தம். அரசின் இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் என்ற முறையில் முதல்வர் எம்.ஜி.ஆரை சந்தித்தபோது வி.எஸ். ராகவன் தனது நிலையை விளக்கினார்.

"உங்களுக்குத் தெரியாதது இல்லை. என் தாயாரின் மருத்துவ செலவுக்கு நான் கேட்காமலேயே பெரிய தொகையை கொடுத்து அனுப்பினீர்கள். என் தாயாருக்கு உடல்நிலை சரியாகிவிட்டது. வீட்டுக்கு வந்துவிட்டார். இனி மருத்துவ செலவு கிடையாது. அப்படியிருக்கும்போது, தாயாரின் மருத்துவ செலவுக்காக என்று நீங்கள் அனுப்பிய பணத்தை நான் ஏற்றுக் கொள்வது சரியாக இருக்காது என்பதால்தான் திருப்பி அனுப்பினேன்" என்று வி.எஸ். ராகவன் கூறினார்.

அவரது விளக்கத்தை பொறுமையாகக் கேட்ட எம்.ஜி.ஆர், அவரை மனதார பாராட்டினார். உணர்ச்சிவசப்பட்ட ராகவன், "எனக்கு ஏதாவது கஷ்டம் என்றால் உங்களிடம்தான் வருவேன். வேறு யாரிடம் போவேன்?" என்றதும் எம்.ஜி.ஆர் அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

ஆரம்ப காலத்தில் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் உரமாகக் கொண்டே வளர்ந்த எம்.ஜி.ஆருக்கு சக நடிகர்கள் யாரையும் மற்றவர்கள் கிண்டல் செய்வதோ, குறை கூறுவதோ பிடிக்காது. புதிய நடிகர்களை உற்சாகப்படுத்தி வாழ்த்துவார். வி.எஸ்.ராகவனும் எம்.ஜி.ஆரும் கலந்துகொண்ட ஒரு படப்பிடிப்பு.

காட்சிப்படி மாடிப்படிகளில் இருந்து எம்.ஜி.ஆர் இறங்கி வரவேண்டும். அப்போது, வாசலில் வரும் தபால்காரர் 'சார் போஸ்ட்' என்று கூறி எம்.ஜி.ஆரிடம் தபாலைத் தர வேண்டும். தபால்காரர் வேடத்தில் நடித்தவர் புதுமுக நடிகர். 'சார் போஸ்ட்' என்ற இரண்டே வார்த்தைகள்தான் அவருக்கு வசனம். என்றாலும் பதற்றத்தில் இருந்தார். "தம்பி, எம்.ஜி.ஆரு டன் நடிக்கிறே. ஜாக்கிரதை" என்று இயக்குநர் ப.நீலகண்டன் வேறு எச்சரித்ததில் அவரது பதற்றம் அதிகரித்தது.

படப்பிடிப்புதொடங்கியது. திட்டமிட்ட படி, எம்.ஜி.ஆர் புயலாக மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்தார். பதற்றத்தில் இருந்த தபால்காரராக நடித்த புதுமுக நடிகர், எம்.ஜி.ஆரைப் பார்த்து "சார் போஸ்ட்" என்று சொல்வதற்கு பதிலாக, "சார் பேஸ்ட்" என்று சொல்லிவிட்டார். செட்டில் சிரிப்பலை எழுந்தது. அதை அடக்கியபடி ஒலித்தது எம்.ஜி.ஆரின் குரல். "நிறுத்துங்க. ஒரு நடிகர் தப்பு பண்ணிட்டா இப்படித்தான் சிரிக்கிறதா? நாம எல்லாம் தப்பே பண்ணலையா? யாரையும் கிண்டல் பண்ணாதீங்க" என்று வெடித்தார். செட்டில் மயான அமைதி!

பின்னர், அந்த புதுமுக நடிகரை தனியே அழைத்துச் சென்ற எம்.ஜி.ஆர், அவரது தோளில் கைபோட்டபடி, "கவலைப்படாதீங்க. சரியா நடிங்க. உங்களால் முடியும்" என்று உற்சாகப்படுத்தினார். அவர் கொடுத்த ஊக்கத்தில் அந்த நடிகர் சரியாக நடித்தார். ஷாட் ஓ.கே. ஆனது. உணர்ச்சிவசப்பட்டு காலில் விழுந்த நடிகரைத் தூக்கி வாழ்த்திய எம்.ஜி.ஆரின் பண்பைப் பார்த்து வி.எஸ். ராகவன் சிலிர்த்துப் போனார்.

எம்.ஜி.ஆரின் குரல் எப்போதுமே சமுதாயத்தில் ஏளனத்துக்கு உள்ளாகி கடைநிலையில் இருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகத்தான் ஒலிக்கும். அது உரிமைக்குரல்!

தொடரும்...

**எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் கரூர் அருகே புகளூரில் நாட்டிலேயே முதன்முதலாக கரும்புச் சக்கையில் இருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்கப்பட்டது.**

**படப்பிடிப்பு தொடங்கியது. திட்டமிட்ட படி, எம்.ஜி.ஆர் புயலாக மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்தார். பதற்றத்தில் இருந்த தபால்காரராக நடித்த புதுமுக நடிகர், எம்.ஜி.ஆரைப் பார்த்து ''சார் போஸ்ட்'' என்று சொல்வதற்கு பதிலாக, ''சார் பேஸ்ட்'' என்று சொல்லிவிட்டார்.**



# ஆணாதிக்கம் புரையோடி நிற்கும் சிலப்பதிகாரம்

சாதாரண வாழ்க்கையில் மட்டுமல்ல, தமிழிலக்கியங்களிலும், சமூகம் சார்ந்த கொள்கைகளும் கூட பெண்களுக்கு எதிரானவையாக இவர்களை இரண்டாம் பாலினமாக நோக்குகின்றன. தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் கண்ணகியின் வீரத்தையும் தந்து துணிவையும், கற்பையும் எடுத்தியம்பி நிற்கிறது. கண்ணகியை தெய்வமாக வணங்குகின்றனர், சிலை எழுப்புகின்றனர். ஆனால் சிலப்பதிகாரத்தில் ஆணாதிக்கம் மேலாண்மை பெற்று நிற்பதை ஆண்கள் மட்டுமல்ல, பெண்கள் கூட பெரிதுபடுத்துவதில்லை. ஆணின் கற்பு நெறி புறந்தள்ளப்படுகிறது. சிலப்பதிகாரம் தந்த சீத்தலைச்சாத்தனார் ஆணாதிக்கத்தை தக்க வைத்துள்ளார். அதனைச் சற்றேனும் சிந்திக்காத எம்மவர்கள் கண்ணகி மதுரையை எரித்த சம்பவத்தை பெரும்வீரமாகக்கொண்டுவீரப்பெண்மணி என புகழாரம் சூட்டுகின்றனர்.

கல்வியறிவு பெற்று பட்டங்கள் பல பெற்று, சட்டங்கள் இயற்றி வரலாறுகளில் பக்கங்களில் வனப்புடன் அரியணை கொள்கின்றனர். ஆயினும் ஆணாதிக்கத்தின் கொடூரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். தந்தை வழி மரபானது, குடும்பத்தில் தொடங்கி சமுதாயத்தில் பரவி நின்று குவலயம் முழுவதும் ஆணாதிக்கத்தை நெறியாள்கை செய்கிறது. கற்பினை மேன்மைப்படுத்திய உயர்குலத்தில் பிறந்த கண்ணகியை விட்டு விலைமாதர் வழிவந்த மாதவியிடம் சென்ற கோவலனை கண்டிக்கவில்லை. அவனது பெண் தொடர்பு தவறானது என சுட்டிக்காட்டவில்லை. கண்

**தன் கணவன் அநியாயமாக படுகொலை செய்யப்பட்டான் என்கிற செய்தி கேட்டு, வீறிட்டு எழுந்து, சினம் கொண்டு ஓடோடிச் சென்று மன்னனிடம் சென்று வாதிட்டு நீதி கேட்டு மதுரையை எரிக்கிறாள். இங்கு பெண் வீரம் போற்றுதற்குரியது. ஆனால், கணவன் விட்டுச் சென்ற போது ஏன் நீதி கேட்கவில்லை?**

அவன்ஸ்ரீகணவன் என்பவன் எத்தனை பெண்ணுடன் தொடர்பு கொண்டாலும் பேசாமடந்தையாக வாழும் நிலையை ஏன் கண்ணகி கடைப்பிடித்தார்! தன்னை விட்டுச் சென்ற கணவனுக்காக நீதி கேட்டு ஏன் செல்லவில்லை! எந்த பெண்ணும் தாலியைப் பங்கு விடுவதில்லை. தனது கணவனை யாருக்கும் உரிமையாக கொடுக்கமாட்டாள். ஆனால் கண்ணகி எந்தவொரு நடவடிக்கையோ ஆர்ப்பாட்டமோ இன்றி இருந்துள்ளாள். தனக்குள்ளே அழுது வடித்திருப்பாள், புலம்பி ஓய்ந்திருப்பாள். வாழ்வு இருண்டு விட்டதென உணர்ந்திருப்பாள். ஆனால் கணவனுக்காக, தான் சுமங்கலி என்பதை உணர்ந்த மங்கலப் பொருட்கள் (தாலி, குங்குமம், பூ) அணிந்திருப்பாள். அதுமட்டுமல்ல அவன் "குலம் தரும் வான் பொருள் தொலைத்த" போதும் அவனைத் தடுக்கவில்லை.

காலச்சுழற்சியில் ஒருநாள் வெறுங்கையோடு வந்தவனை மாதவியை வெறுத்த நிலையில் 'சிலம்புளது கொண்ட' என்று காற்கொலுசினை அவனுக்கு பணத்துக்காக முதலாகக் கொடுத்து அனுப்புகிறாள். இச்செயலானது அவன் கண்ணகியை தனிமரமாய் விட்டு தாசி வீட்டுக்குச் சென்றதை நியாயப்படுத்துகிறது போல் அமைகிறது. வெறுங்கையோடு வந்தவனை கதவை மூடி வெளியேற்றியிருந்தால் அவள் வீரப்பெண்மணிதான். இங்குதான் ஆணாதிக்கம் நிலை கொள்வதும், பெண்களே ஆணாதிக்கத்திற்கு துணை போவதும் வெளிப்படுகிறது. கணவன் எந்தத் தவறு செய்தாலும் சுட்டிக் காட்டத்தவறுவதும், அவன் கூன், குருடு, செவிடு, சுயமை ரோகியாக இருந்தாலும் அவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று 'புல்லானாலும் புருசன்' என்கிற தத்துவத்தை தக்கவைப்பதும் உறுதியாகிறது.

தந்தைவழிச் சமூகம் விதித்த அடிமைவாதக் கோட்பாடுகளுக்கு அடிபணிந்தாள் கண்ணகி. தன்னைத்தானே அடிமையாக ஆட்படுத்திக் கொள்வதை காண முடிகிறது. இதே பெண் தன் கணவன் அநியாயமாக படுகொலை செய்யப்பட்டான் என்கிற செய்தி கேட்டு, வீறிட்டு எழுந்து, சினம் கொண்டு ஓடோடிச் சென்று மன்னனிடம் சென்று வாதிட்டு நீதி கேட்டு மதுரையை எரிக்கிறாள். இங்கு பெண் வீரம் போற்றுதற்குரியது. ஆனால், கணவன் விட்டுச் சென்ற போது ஏன் நீதி கேட்கவில்லை? மாதவிக்கு 'என் கணவனை உன் கணவனாக்கினாய்' என்கிற உண்மையை இடித்துரைக்க மறுத்தது ஏன்? ஒருநாள் வாழ்ந்தாலும் அவனுக்காக உயிரை விடக்கூட துணிந்த பெண்ணாக பெண்களை நிலைப்படுத்தியிருக்கிறது தமிழிலக்கியம். சிலப்பதிகாரம் என்ற காவிய நிகழ்ச்சி உண்மையானதா? அல்லது புலமை சார்ந்த புத்தி ஜீவியால் புனையப்பட்டதா? என்பது ஒருபுறமிருக்க, ஆணாதிக்க மேலாண்மையை பக்குவப்படுத்தி காவியம் படைத்திருப்பது சிந்திக்க வேண்டியதே.

சிலப்பதிகாரத்தை பெண்ணிய நோக்கில் ஆய்வு செய்யும் போது இதுவரை உலகில் இருந்து வரும் கருத்து மறுக்கப்பட வேண்டிய நிலை உருவாகின்றது. அன்று மதுரையை எரித்து ஆவேசத்துடன் புறப்பட்ட கண்ணகி தான் வந்த பாதைகளை வார்த்தைகளால் சபித்தும், புகழ்ந்தும் வற்றாப்பளை என்னும் இடத்தில் தெய்வமாக நிலை கொண்டதாகவும் ஒரு ஐதீகம் உண்டு. இத்தனை சக்தி கொண்ட பெண் தன் நிகழ்வில் ஏன் ஆணாதிக்கத்திற்கு துணை நின்றார்? அவளது மகிழ்ச்சிக்கெல்லாம் முழுக்குப் போட்டு விட்டு மாதவியிடம் சென்று பூரணப்படுத்தப்படாத உடரின்பத்தை முழுமைப்படுத்தியதை பார்த்தும் பேசாதிருந்தேன்? தன் கணவனுக்கு துன்பம் நேரும் போது குரலையிடும் பெண்ணாக, சபிக்கும்பெண்ணாக,எரிக்கும்பெண்ணாக மாறும் பெண் தவறுகளை தட்டிக்கேட்க மறுத்தது ஏன்? மறுப்பது ஏன்?

ஆக, இங்குதான் பெண் விழிப்புணர்ச்சி பெற வேண்டியது முக்கியத்துவமடைகின்றது. பெண்ணுக்கு மட்டுமே கற்பு என்கிற நிலையை மாற்றியமைத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு பொதுவானது என்று இடித்துரைக்க வேண்டும். ஆணுக்கு ஒழுக்கக்கட்டுப்பாடு இல்லையென ஆர்ப்பரிக்கும் போது, பெண் அதை செவியுற்றும் நாகரீகம், சமூக வரையறை எனக் கருதி பேசாதிருத்தல் மடமையானது. அன்றைய கண்ணகி போல் ஆணின் தவறுக்கு தூபம் இடும் பெண்களாக இருந்து வீதிக்கு வீதி மாதவிகளை உருவாக்காது தவறுகளைச் சுட்டிக்காட்டி உரிமையைப் பெற்று மகிழ்வாக வாழ வேண்டும். பெண்ணியமானது தன் வாழ்வு, தன் இலக்கு என்றும் சுயமாக சிந்தித்து செயற்பட, நியத்தை எதிர்கொள்ள போதிய விழிப்புணர்ச்சி கொடுத்து வருகிறது. கற்புநிலை சொல்ல வந்த பாரதி, இருபாலார்க்கும் அது பொது என சொல்லி வைத்துள்ளார். ஆணாதிக்கத்தை வளர்க்கும் பெண்களாக இல்லாமல் ஆணாதிக்கத்தைக் கொன்று போடும் பெண்களாக மாற வேண்டும் பெண்களே தயாரா.

முற்றும்

உடுவிலூர் கலா
0770724900



# "எனது தலைவர் சம்பந்தன்தான்"

## அதிர வைக்கிறார் அனந்தி

தனி செல்வம்

தமிழ்தேசிய கூட்டமைப்பு, அதன் தலைமை மீது பகிரங்கமாகவே குற்றச்சாட்டுக்களை வைக்கும் "கலககுரல்" அனந்தி சசிதரன். விடுதலைப்புலிகளின் திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவி. வடமாகாணசபை தேர்தலில் அதிக விருப்பு வாக்குபெற்றவர்களில் ஒருவர். அதன்பின் அனந்தியின் அரசியல் "கலக அரசியல்" ஆகி, தமிழரசுக்கட்சியின் மைய நீரோட்டத்தில் இல்லாமலாகி விட்டார். அனந்தியும் முன்னரைபோல அவ்வளவு வலுவாக இப்போது பேசுவதுமில்லை. அனந்தி இப்போது என்ன செய்கிறார்? அவரை சுற்றி இப்பொழுது நடக்கும் சர்ச்சைகள் என பல விடயங்களை அவருடன் பேசினோம்.

**தீபம்: முள்ளிவாய்க்காலில் வடமாகாண சபையின் ஏற்பாட்டில் ஒரு பெரிய அஞ்சலி நிகழ்வு நடந்தது. நீங்கள் சிலர் தனியாக ஏன் இன்னொரு அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்தீர்கள்?**

**அனந்தி:** தனியாக நான் செய்யவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு காலை 9.30 இற்குத்தான் ஆரம்பமாகும் என எங்களுக்கு சொல்லப்பட்டிருந்தது. நாங்கள் 9.25க்கு அங்கு போனோம். நாங்கள் போவதற்கு முதலே ஆரம்பித்து விட்டனர்.







அஞ்சலி நிகழ்விற்கு மக்களை ஏற்றிச்செல்ல மாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் எனக்கொரு பஸ் தரப்பட்டிருந்தது. நான் காலை ஆறு மணிக்கு காரைநகர் போய் மக்களை ஏற்றிக்கொண்டு, வலிகாமத்திற்கு சென்று அங்கும் ஏற்றிக் கொண்டு சென்றேன். எல்லோருமே முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட மக்கள்தான். சும்மா பொழுதுபோக்கிற்கும், கண்காட்சிக்கும் வந்தவர்கள் அல்ல. சொந்தங்களை அந்த மண்ணில் புதைத்து விட்டு வந்தவர்கள். எனவே மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு இது.

2014இல் கைதடியில் வடமாகாண சபையின் முன்னால் விளக்கேற்றிய போது வடமாகாண அவைத்தலைவரின் தூண்டுதலில் கேற்றை மூடினார்கள். பொலிசாரை வரவழைத்து தீபம் ஏற்றிய வாழைத் தண்டை தட்டிவிழுத்தி, காலால் மிதித்தார்கள். அது மகிந்தவின் ஆட்சி. அப்போதும் அச்சுறுத்தலின் மத்தியில் முள்ளிவாய்க்கால் அஞ்சலியை செய்தோம். சிவாஜிலிங்கம்தான் அதை செய்து முடித்தவர். ஆனால் 2017 அஞ்சலிக்கு சிவாஜிலிங்கம் வரும்போது நிகழ்வுகள் முடிந்துவிட்டன. அந்த இடத்தில் தானும் அஞ்சலி செய்ய வேண்டும் என்பதற்காக, ஒரு வாழைக்குற்றியை நட்டு தீபம் ஏற்றி அஞ்சலி செய்து, தனது கருத்தை சொன்னார். இது முரண்பாடான வேலையல்ல. நிகழ்வில் முதலமைச்சர் மட்டும் அஞ்சலி உரையாற்றுவார் என்பதுதான் ரவிகரனின் ஒழுங்கு. ஆனால் அதை பின்னர் மாற்றியமைத்து, சம்பந்தன் ஐயாவும் உரையாற்றினார்.

சகல இடத்திலும் தனிமனிதனாக மிக துணிச்சலுடன் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வை செய்து வந்தவர். இதை அவர் ஏட்டிக்குபோட்டியாக செய்யவில்லை.

**தீபம்: இனப்படுகொலையை நினைவு கூரும் நிகழ்வை தமிழர்கள் ஒற்றுமையாக, ஒன்றாக செய்வதே முறை. தமிழர்களை ஒன்று திரட்டவும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் பயன்படும். இப்படி பிரிந்து பிரிந்து செய்வது அதை பாதிக்காதா?**

**அனந்தி:** இன்னொரு இடத்தில் அஞ்சலியை செய்யவில்லை. அதேயிடத்தில் தான் செய்தோம். வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்த்தால் அது வித்தியாசமாகத்தான் இருக்கும்.

**தீபம்: வடமாகாணசபை தேர்தல் நடந்தசமயத்தில் அனந்தி அலையொன்று அடித்தது. ஆனால் இன்று அந்த ஆதரவு அலை இல்லை போலிருக்கிறதே?**

**அனந்தி:** அப்போது தேர்தல் காலத்தில் போராளியின் மனைவியாக, காணாமல் போனவர்களிற்காக போராடும் பெண்ணாக விடுதலைப்புலிகளின் அனுதாபத்தால் விழுந்த வாக்குகளே தவிர, அவை அனந்திக்கு விழுந்த வாக்குகள் அல்ல. ஆனால் அண்மைக்கால அரசியலை பணமும், பதவியும்தான் தீர்மானிப்பதாக மாறிவிட்டது.

வன்னியில் எல்லா சொத்துக்களையும் இழந்து பணபலமில்லாமல்தான் அரசியல் செய்கிறேன். ஆனால் மக்களிடம் ஏதோவொரு எதிர்பார்ப்பு இருக்கிறது. சலுகைகளை, அபிவிருத்தியை எதிர் பார்க்கும் மக்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை என்னால் செய்ய முடியாமலிருக்கிறது. இதெல்லாம் பின்னடைவுதான். ஆனால் இப்போது மாகாண சபை, பாராளுமன்ற உறுப்பினர்களை பணம்தான் தீர்மானிக்கிறது.

என்னுடைய கொள்கைகளை சார்ந்து உரிமைக்காக குரல்கொடுப்பவர்களிடம் அதே ஆதரவுத்தளம் இருக்கிறது. வடமாகாணசபையில் அனந்தி என்கிற உறுப்பினருக்கு எதையும் செய்துகொள்ளும் அதிகாரமில்லை. ஆனால் இப்போது இருக்கும் அரசியல்வாதிகளில் நல்ல பெயருடன் இருப்பது நான் மட்டும்தான். முன்னர் ஆதரித்தவர்களில் ஐம்பது வீதமானவர்கள் ஆதரித்தாலே எனக்கு வெற்றிதான்.

**தீபம்: தேர்தலின் பின்னரான உங்கள் நகர்வுகள்தான், உங்கள் ஆதரவுத்தளத்தை இல்லாமலாக்கிவிட்டதாக நீங்கள் கருதவில்லையா?**

**அனந்தி:** இல்லை. நான் எப்பொழுதும் மக்களுக்குள் நிற்கிறேன். ஊடகங்களில் எனக்கான ஆதரவுதளம் இல்லாமல் இருக்கலாம். மிகத்தெளிவான சிந்தனையுள்ளவர்கள் இப்பொழுதும் என்னுடன்தான் பயணிக்கிறார்கள். அதனால்தான் தொடர்ந்து உற்சகமாக செயற்பட முடிகிறது. வடக்கிற்கு அப்பால் கிழக்கு, மலையகம் என எனக்கான தளம் விரிந்துள்ளது.

**தீபம்: காணாமல் போனவர்கள், போர்க்குள்ள விவகாரங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பை தொடர்ந்து குறை கூறி வருகிறீர்கள். ஆனால் இந்த விடயத்தில் கூட்டமைப்பு செய்யாத தொன்றையும், கூட்டமைப்பை குறை கூறுபவர்கள் செய்வதில்லை. ஆக, ஜெனீவாவிற்கு போவதொன்றைத்தான் செய்கிறீர்கள். நீங்கள் சிலர் ஜெனீவாவிற்கு போவதால் மட்டுமே இதெல்லாம் நடந்து விடுமா?**

**அனந்தி:** குறைகூற வேண்டுமென்பதற்காக நான் குறைகூறவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்புத்தான் தமிழர்களின் பிரதிநிதிகள். மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி சர்வதேசத்துடன் பேசக்கூடிய ஆற்றலுள்ளவர்கள் சம்பந்தன் ஐயாவும், பாராளுமன்ற உறுப்பினர்களும்தான். அவர்கள்தான் எங்கள் பிரதிநிதிகள். ஐக்கிய தேசியக்கட்சியிடமோ, சுதந்திரக் கட்சியமோ சென்று கேட்க முடியுமா? நமது பிரதிநிதிகளிடம்தான் கேட்கலாம்.

விடுதலைப்புலிகளால் உருவாக்கப் பட்டதே தமிழ்தேசிய கூட்டமைப்பு. 2009 இற்கு முன்னர் ஒரு நிலைப்பாடும், பின்னர் ஒரு நிலைப்பாடும் எடுக்கிறார்கள், தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்க பின்நிற்கிறார்கள் என்பதே எனது நிலைப்பாடு.

யுத்தம் முடிந்ததும், ஒவ்வொரு நாட்டிற்கும் பிரதிநிதிகளை அனுப்பி எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை புரிய வைத்திருக்க வேண்டும். அதை கூட்டமைப்பு செய்யவில்லை. அப்போது நீதியமைச்சராக இருந்த ஹக்கீம், ஐநாவிற்கு சென்று முஸ்லீம்களிற்கு எதிரான வன்முறை பற்றி பேசினார். ஹக்கீம் அமைச்சராக இருந்து கொண்டே நீதி கேட்க முடியுமென்றால், சம்பந்தன் ஐயாவால் ஏன் முடியாது? இதுதான் நான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...





▶ யாழ்ப்பாணம் உரும்பிராய் மயானத்தில் அமைந்துள்ள தியாகி பொன். சிவகுமாரனின் சமாதியில் அரசியல் பிரமுகர்கள், மக்கள் என பல தரப்பினரும் கடந்த 05ம் திகதி அஞ்சலி செலுத்தினர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, மற்றும் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ வவுனியா தரணிக்குளம் ஆரம்ப பாடசாலைக்கு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் இவை வழங்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



▶ மல்லாகம் குடும்ப முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் நடந்தன.



கேட்கும் கேள்வி.

மாகாணசபையில் இருந்துகொண்டு நான் நீதியை கேட்கும்போது, பாராளுமன்றத்தில் இருப்பவர்களால் ஏன் முடியாது? ஐநாவில் நாங்கள் வழங்கிய சாட்சியங்களை பத்து வருடங்களின் பின்னர் வெளியிடுவதாக ஒரு ஒப்பந்தம் உள்ளது. அந்த சமயத்தில் நாங்கள் கொடுத்த சாட்சியங்களை மக்கள் அறியலாம். ஐநாவில் பேச வேண்டியதை பேசிவிட்டதாக கூட்டமைப்பினர் சொல்கிறார்கள். பத்து வருடத்தின் பின் இவர்களின் சாட்சியங்கள் வெளிவருகிறதா என்பதை பாருங்கள்.

மனிதஉரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கைக்கும் ஐநாவின் அறிக்கைக்கும் எந்த தொடர்புமில்லை. ஏனெனில் அது நாடுகள் எடுத்த முடிவு. இதற்காக நாம் சோர்ந்துவிட முடியாது. அணை கட்டுவதற்கு அணில் தன்னால் முடிந்த மண்ணை சுமந்துகொண்டு வந்ததைபோல, நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும்.

**தீபம்: காணாமல் போனவர்களின் உறவுகளால் ஏற்கனவே பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பொழுது நீங்களும் புதிதாக ஒன்றை ஆரம்பித்துள்ளீர்கள். காணாமல் போனவர்களின் உறவுகள் இந்த சமூகத்தில் சிறிய அணியாக இருக்கிறார்கள். அவர்கள் குரல் வெகுஜன அளவில் சென்றடையவில்லை. இந்தநிலையில் புதிது புதிதாக அமைப்புகளை உருவாக்குவது, அவர்கள் குரலை சிதைக்காதா?**

அனந்தி: 2011 இல் சரணடைந்த காணாமல் போனோர் அமைப்பு என ஒன்றை தொடங்கினோம். கோத்தபாய ராஜபக்ச அதை தடைசெய்தார். ஆனாலும் அந்த அமைப்பு இயங்கியது. அதன்பின்னர்தான் மன்னார் பிரஜைகள் குழுவால் காணாமல் போனோர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதையும் பதிவுசெய்யமுடியவில்லை. 2011 இல் இருந்து ஐநாவுடன் இந்த அமைப்பின் ஊடாகத்தான் தொடர்பு கொண்டோம். சுவிஸ்தூதரகத்திற்கு வருடாந்தம் அறிக்கை கொடுத்தோம். சிலம்பு பெண்கள் அமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண்கள் அமைப்பு என பல அமைப்புக்கள் எம்மிடமுள்ளன. Vireed என்ற அமைப்பை நான் உருவாக்கியதற்கு காரணம், எல்லா அமைப்புக்களையும் ஒரேகுடையின் கீழ் கொண்டு வரவே.

**தீபம்: முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வில் ஒரு பெண்மணி ஆக்ரோசமாக பேசினார். அவர் உங்களுடன் நிற்கும் புகைப்படங்கள் வெளியாகி, அந்த குழப்பத்தின் பின்னணியில் நீங்களும் இருப்பதாக ஒரு கதை உலாவுகிறதே?**

அனந்தி: நான் ஒரு அரசியல்வாதி. எனக்கு பக்கத்தில் யாரும் நிற்கலாம். அப்போது யாரும் புகைப்படமும் எடுக்கலாம். இப்படியான படங்களை வைத்து பல கதைகள் வரும். நான் ஒரு விருந்து வைத்து, அதில் என்னுடன் யாராவது இருந்து ஒரு படம் வெளியாகியிருந்தால் யாரும் கேட்கலாம். கூட்டமொன்றில் எனக்கு பக்கத்தில் ஒரு பெண் நின்றார் என கூறி, இப்படி உருவாக்கப்படுபவை கட்டுக்கதைகள்.

**தீபம்: முள்ளிவாய்க்காலில் நடந்த குழப்பம் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

அனந்தி: எந்த இடமென்றாலும் பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு நாங்கள் செவிமடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் எதிர்பார்ப்பதைதான் நாங்கள் வழங்க வேண்டுமென ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் கூறியிருந்தார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறார்கள். இதில் சம்பந்தன் ஐயாவிற்கு வேதனைதான். நான் மறுக்கவில்லை. ஆனால் மக்கள் அபிப்பிராயத்தையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் தமது உணர்வுகளை கொட்டியிருக்கிறார்கள். அதற்கான தீர்வுகளைதான் தேட வேண்டுமே தவிர, அவர்கள் எப்படி பேசினார்கள் என்பதை அல்ல. ஏனெனில் அவர்கள்தான் தமது பிரதிநிதிகளை தேர்வுசெய்துள்ளனர்.

**தீபம்: சம்பந்தன் அங்கு செல்லக்கூடாதென்றால், வேறு யார் அங்கு செல்ல தகுதியானவர்கள்?**

அனந்தி: சம்பந்தன் ஐயா அங்கு செல்லக்கூடாதென நான் எந்தக்கூட்டத்திலும் சொல்லவில்லை.

**தீபம்: நீங்கள், கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் சம்பந்தரின் தலைமைத்துவத்தை கடுமையாக விமர்சிக்கிறீர்கள். சரி, ஒரு வாதத்திற்கு அவர் பிழையென வைத்து, அவரை நீக்கிவிடுவோம். விமர்சிப்பவர்களில் யாராவது தலைவரானால் எல்லாம் சரியாகிவிடுமா?**

அனந்தி: நான் இப்பொழுதும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்தான். சம்பந்தன் ஐயாவின் தலைமைத்துவத்தைதான் ஏற்றிருக்கிறேன். ஆனால் சில கருத்து முரண்பாடுகள் வரும்போது பேசுகிறேன். நீதியை பெற்றுத்தாருங்கள் என்று எல்லா இடமும் சொல்கிறேன். இது விமர்சனமல்ல. அடிமன வேதனை. சம்பந்தன் ஐயாவை பதவியைவிட்டு போகும்படி நான் கேட்டதில்லை. ஆனால், எங்கட பிரச்சனையை தீருங்கள் என ஐநாவுக்கு இடித்து சொல்வேன். அவருக்கு கீழ் உள்ள எனது பொறுப்பு அது!

சரணடைந்தவர்களை வெளியே விட்டிடும். நான் கட்சியைவிட்டு போய் விடுவேன்.

MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing


261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com
B.Mayuran
Managing Director

## தமிழில் விளையாட்டு சனல்!

தமிழில் ஏராளம் சனல்கள் வந்துவிட்டன. பொழுதுபோக்கு, சினிமா, செய்தி, நகைச்சுவை என பல சனல்கள். இதுதவிர மதம், கட்சிகளும் சனல் தொடங்கிவிட்டன. ஆனால் விளையாட்டுக்குத்தான் தமிழில் சனல் இல்லை. தற்போது இந்த குறையை நீக்கியுள்ளது ஸ்போர்ட்ஸ் ஸ்ரார். இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே ஸ்போர்ட்ஸ் ஸ்ரார் இருந்தது. முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் தலைமையிலான குழுவினர் சனலை வழிநடத்தவுள்ளனர். ஸ்போர்ட்ஸ் ஸ்ரார் நிகழ்ச்சிகளை இதன்மூலம் இனி தமிழிலும் பார்க்கலாம்.

## த்ரிஷாவின் தங்கையாகும் சங்கீதா!



மியூசிக் சனலின் நட்சத்திர தொகுப்பாளினி சங்கீதா. செந்தமிழ் பெண்ணே, 24 பிரேம் நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்குகிறார். 24 பிரேம் என்பது சினிமா தொடர்பான நிகழ்ச்சி. இதன்மூலம் நிறைய அறிமுகங்கள் வந்து, சினிமாவில் நடிக்கவும் அழைத்திருக்கிறார்கள். என்றாலும் சங்கீதாவின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. இப்பொழுது ஹீரோயினின் தங்கை, தோழி போன்ற வேடங்களில் நடிக்க சம்மதித்திருக்கிறார்களாம். முதல் படமே த்ரிஷாவுடன். த்ரிஷாவின் தங்கையாக நடித்தால் நிறைய வாய்ப்புக்கள் வருமென நம்புகிறார் சங்கீதா.

## விஜய்யின் தங்கையின் புதிய தொழில்!

கில்லி படத்தில் விஜய்யின் குறும்புக்கார தங்கையாக நடித்தவர் ஜெனிபர். பின்னர் சில படங்களில் ஹீரோயினாக நடித்தார். அது சரியாக வரவில்லை. சின்னத்திரை பக்கம் ஒதுங்கினார். பத்து வருடத்திற்கும் அதிகமாக சின்னத்திரை நடிகை, தொகுப்பாளினியாக இருக்கிறார். இடையிடையே படங்களிலும் நடிக்கிறார். லேடி கண்மணி தொடரில் தற்போது நடிக்கிறார். சில ரியாலிட்டி ஷோக்களிலும் பங்கேற்கிறார். அதுதவிர வெடிங் பிரைடல் என்ற நிறுவனத்தையும் ஆரம்பித்துள்ளார். பெண்களிற்கான திருமண ஆடைகளை வடிவமைக்கும் நிறுவனம் இது. பஷன் டிசைனிங்கில் ஆர்வமுள்ள ஜெனிபர் தனக்கான உடைகளை தானே வடிவமைக்கிறாராம்.

## மணிமேகலை நடிக்காததற்கு காரணம் இது!



மியூசிக் சனலின நட்சத்திர தொகுப்பாளினிகளில் ஒருவர் மணிமேகலை. பிளாக் ஷோ என்ற நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்குகிறார். சின்னத்திரைக்கு தொகுப்பாளினியாக வருவதே சினிமாவிற்கு போவதற்குதான் என நிலைமை இருக்க, மணிமேகலை வித்தியாசமானவராக இருக்கிறார். தன்னைத்தேடி வந்த சினிமா வாய்ப்புக்களை தவிர்த்திருக்கிறார். அவரை படிக்க வைக்கத்தான் வீட்டில் விரும்பியிருக்கிறார்கள். தொகுப்பாளினி ஆகும்போது சினிமா, சீரியலில் நடிக்க மாட்டேன் என வாக்களித்தே வந்திருக்கிறார். அதை கடைசிவரை காப்பாற்ற விரும்புகிறாராம்.



நதியா

## சுமங்கலியின் பிரச்சனை தீர்ந்தது!

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் தொடர் சுமங்கலி. முதன்மை வேடத்தில் திவ்யா நடிக்கிறார். பிரதீப் நாயகனாக நடித்தார். அவர் அண்மையில் தற்கொலை செய்து கொண்டார். மனைவியுடன் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக வீட்டில் தூக்குப்போட்டார் என கூறப்படுகிறது. இதையடுத்து கதாநாயகன் இல்லாத காட்சிகளே காட்டப்பட்டு வந்தன. பிரதீப்பிற்காக யாரை நடிக்க வைக்கலாமென்ற தீவிர தேடலின் முடிவில், கன்னட தொடர் நடிகர் சுஜித்தை ஒப்பந்தம் செய்துள்ளனர். அவர் நடிப்பில் உருவான காட்சிகள் தற்போது ஒளிபரப்பாக ஆரம்பித்துள்ளன.

## ஆலியாவின் கணவருக்கு சிங்கப்பூரில் காதலியாம்!

சமீபத்தில் திரைக்கு வந்த ஜூலியும் நான்குபேரும் படத்தில் நடித்தவர் ஆலியா மானசா. தொடர்ந்து சினிமாவில் இருப்பார் என பார்த்தால், அப்படியே ராஜா ராணி சீரியலுக்கு வந்துவிட்டார். விஜய் டிவியில் ஒளிபரப்பாகிறது. சரவணன் மீனாட்சி, கல்யாணம் முதல் காதல் வரை சீரியல்களை இயக்கிய பிரவீன் பென்னட் கேட்டதால்தான் சீரியலுக்கு நடிக்க வந்ததாக கூறுகிறார். தொடரில் செம்பருத்தி வேடத்தில் நடிக்கிறார். வீட்டு வேலைக்கார பெண்ணாம். வீட்டு முதலாளி அவரை தனது மகளாகவே நினைக்கிறார். அப்பொழுது முதலாளியின் மகனான ஹீரோ சிங்கப்பூரிலிருந்து வருகிறார். இருவரும் காதலாகி திருமணம் செய்கிறார்கள். பின்னர்தான் சிங்கப்பூரில் அவருக்கு சிங்கப்பூரில் காதல் இருப்பது தெரியவருகிறது. பின்னர் என்ன நடக்கிறதென்பதை சுவாரஸ்யமாக சொல்லியுள்ளனர் என்கிறார் அலியா.

சின்னத்திரை

# வண்ணத் திரை

## நடிகையின் முத்தத்திற்கு பயப்படும் ஹீரோக்கள்!

ராகுல் ப்ரீத் சிங் அண்மையில் ஒரு புரட்சிகர அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அதாவது படங்களில் லிப் டு லிப் முத்தக்காட்சிகளில் நடிக்க தனக்கு ஆட்சேபணையில்லையென அறிவித்தார். நடிகைகள் கவர்ச்சியாக நடித்தால்தான் ரசிகர்கள் பார்க்கிறார்கள், லிப் டு லிப் முத்தம் இளம் ரசிகர்களை ஈர்க்கும் என விளக்கம் வேறு கொடுத்தார். ஆனால் வில்லங்கம் அதுவல்ல. அவர் லிப் டு லிப் காட்சிக்கு தயாராக இருந்தாலும் ஹீரோக்கள் அலறியடித்து ஓடுகிறார்களாம். இப்பொழுது நடிக்கும் தீரன் அதிகாரம் ஒன்றிலும் முத்தக்காட்சிக்கு கார்த்தி மறுப்பு தெரிவித்து விட்டாராம். ஹீரோக்கள் அலறியடித்து ஓடுவதன் காரணம் அம்மணி லிப் டு லிப் காட்சியில் இதற்கு முன் இரண்டு படங்களில் நடித்தாரம். இரண்டும் ஊற்றிக்கொண்டு விட்டதாம்.

## பிரபாசுக்கு ஒரு ஹீரோயினும் இல்லையாம்!

உலக அளவில் வசூலில் கலக்கியது பாகுபலி 2. அது இந்தியில் டப் செய்யப்பட்டது. அங்கும் வசூல் மழை. இதை பார்த்து இந்தி நடிகர்கள் மிரண்டு போயுள்ளனர். இந்திய அளவில் பிரபாஸ் ஹீரோவாகிவிட்டார். அவர் அடுத்து சாஹூ படத்தில் நடிக்கிறார். இந்தி ரசிகர்களையும் குறிவைப்பதற்காக இந்தி நாயகிகளை ஒப்பந்தம் செய்ய முயன்றனர். கத்ரீனா கைப், தீபிகா படுகோன் போன்றவர்கள் மறுத்துவிட்டனர். இதையடுத்து திஷா பட்டானியிடம் பேசியுள்ளனர். இவர் டோனி வாழ்க்கை வரலாற்று படத்தில் நடித்தவர். தற்போது வாய்ப்பில்லாமல் ஈயோட்டிக் கொண்டிருக்கிறார். இவரும் நடிக்க கறாரான நிபந்தனைகள் போடுகிறார். 5 கோடி சம்பளம் என்றதும் தயாரிப்பாளர்கள் அதிர்ந்து போயுள்ளனர். அதைவிட பிரபாஸ் அதிர்ந்து போயுள்ளார் தனக்கு நாயகி கிடைக்கவில்லை என்பதால். இதையடுத்து, அனுஷ்காவையே நாயகியாக்குமாறு கூறியுள்ளாராம்.

## அனுஷ்காவின் திருமண பிரச்சனை!

திருமணம் செய்து கொள்ளும்படி வீட்டில் நெருக்கடி கொடுக்கிறார்கள் என கூறியுள்ளார் அனுஷ்கா. வயதாகிக் கொண்டிருப்பதால் உடனடியாக திருமணம் செய்யும்படி வீட்டில் வலியுறுத்தினாலும், ஒப்புக்கொண்ட படங்களை முடிக்கும்வரை திருமணம் பற்றி யோசிக்க முடியாதென கூறிவிட்டாராம். சினிமாவில் கவர்ச்சியை நம்பி இறங்க முடியாதென்றும் இளம் நடிகைகளிற்கு ஆலோசனை கூறியுள்ளார். வாழ்க்கை சந்தோசமாக இருந்தால், முகத்தில் அழகு கூடும் என்றுள்ளார். சினிமாவிற்கு வரும்போது நாயகிக்கு முக்கியத்துவமுள்ள வேடங்களில் நடிக்க வேண்டுமென்ற திட்டத்துடன் வரவில்லையென்றும், அருந்ததி படத்தில் நடித்த பின்னரே அதற்கான வாய்ப்பு கிடைத்ததாகவும் கூறியுள்ளார்.

## சல்மானில் ஈர்ப்பா கத்ரீனாவுக்கு?

ரன்வீர் கபூருடனான காதல் முறிந்த பின்னர் சல்மானுடன் நெருக்கம் காட்டி வருகிறார் கத்ரீனா கைப். ஏற்கனவே ஏக்தா டைகர் படத்தில் இருவரும் நடித்திருந்தனர். அதன் இரண்டாம் பாகமான டைகர் ஜிந்தா ஹே படத்தில் இருவரும் நடித்து வருகின்றனர். அண்மையில் ஜப்பா விருது தொடர்பான நிகழ்வில் சல்மான், கத்ரீனா, அலியா பட் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது பத்திரிகையாளர்கள் அலியாவிடம், "எப்போது சல்மானுடன் இணைந்து நடிப்பீர்கள்" என கேட்டனர். "எப்போது என தெரியவில்லை. ஆனால் விரைவில் நடக்குமென நினைக்கிறேன்" என்றார். அடுத்து பேசிய கத்ரீனா "எனக்காக சல்மான் மற்றும் வருண்தவானை விட்டு விலகுங்கள் அலியா" என கேட்டுள்ளார். கத்ரீனா விளையாட்டாக கேட்டாரா அல்லது சல்மானின் மீதான ஈர்ப்பால் கேட்டாரா என்ற விவாதம் பொலிவூட்டில் நடக்கிறது.

## 30 வயது குறைந்த பெண்ணுடன் மூன்றாவது புரட்சி திருமணம்!

நாளைய மனிதன், அதிசய மனிதன், கடவுள், புரட்சிக்காரன், காதல் அரங்கம் உள்ளிட்ட படங்களை இயக்கியவர் வேலு பிரபாகரன். இவர் தன்னைவிட 30 வயது குறைந்த ஷெர்லி தாஸை திருமணம் செய்துள்ளார். அவர் இயக்கிய "ஒரு இயக்குனரின் காதல் டைரி" படத்தின் முதல்காட்சி பத்திரிகையாளர்களிற்கு அண்மையில் காட்டப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. படத் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருவரும் பத்திரிகையாளர் முன்னிலையில் மோதிரம் மாற்றி திருமணம் செய்து கொண்டனர். அதன்பின் பத்திரிகையாளர்களுடன் இருவரும் பேசினர். தனது திரையுலக புரட்சிப்பாதைக்கு ஷெர்லி பொருத்தமானவர் என பிரபாகரன் சொன்னார். விரைவில் பதிவுத் திருமணம் செய்யவுள்ளனராம். ஏற்கனவே புரட்சித்திருமணம் என இரு திருமணங்கள் வேலு பிரபாகரன் செய்து விவாகரத்தானவர்.



அனுஸ்ரீ

## கீர்த்திக்கு கூடவேயில்லையாம்!

சாவித்திரியின் வாழ்க்கை வரலாறு மகாநதி என்ற பெயரில் தயாராகிறது. சாவித்திரியாக கீர்த்தி சுரேசும், யமுனா என்ற பாத்திரத்தில் சமந்தாவும் நடிக்கிறார்கள். சாவித்திரி சற்று பூசியதை போலிருப்பார். அதனால் கீர்த்தியின் உடல்எடையை கூட்டுமாறு இயக்குனர் கூறியிருக்கிறார். ஆனால் கீர்த்தியின் உடல் எடை கூடவேயில்லையாம். படப்பிடிப்பு நெருங்கிவிட்ட நிலையில், வேறு நடிகைகளை தேட முடியாதென்பதால் கீர்த்தியை கிராபிக்சில் குண்டாக்குகிறார்களாம். பாகுபலி 2 படத்தில் அனுஷ்காவின் குண்டான தோற்றத்தை மெல்லிதாக மாற்றியதைபோல, மெல்லிய கீர்த்தியை குண்டாக்கப் போகிறார்களாம்.




# ஏன் கட்டாரை தனிமைப்படுத்தப் பார்க்கிறார்கள்?

அஷ்கர் தஸ்லீம்

அரபுலக மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க அரசியலில் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து ஆகிய நாடுகளை எந்த இடத்தில் வைத்து நோக்குவது என்பது அவ்வளவு சிக்கலான ஒரு காரியமல்ல.

அரபு வசந்தத்தை தொடர்ந்து எழுந்து வந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினதும், துருக்கி கட்டார் கூட்டணியினதும் செல்வாக்கை முடக்குவதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் இந்த அறிவிக்கப்படாத கூட்டமைப்பு மிகச் கச்சிதமாக நடாத்தி வந்தமையானது, இந்நாடுகளின் பிராந்திய அரசியலைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த ஆதாரங்களாகும்.

எகிப்து மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியான முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை சேர்ந்த கலாநிதி முஹம்மத் முர்ஸியை சதிப்புரட்சி மூலம் கவிழ்ப்பதற்கு பல்வேறு தளங்களிலும் அனுசரணை வழங்கியது முதல் சில வருடங்களுக்கு முன்னர், வளைகுடா நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் கட்டார் தலையிடுவதாகச் சொல்லி கட்டாருடனான தூதரக உற்வுகளை முறித்துக் கொண்டது மற்றும் திரைமறைவில் கட்டாரின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்துவதற்காக சியோனிஸ மதியுரையகங்களுடன் (Think Tank) இணைந்து வேலைகளைச் செய்தது வரையிலும் இதனைப் பட்டியலிடலாம். ஆக மொத்தத்தில், இந்த நாடுகளின் உள்நாட்டுக் கொள்கையும் வெளியுறவுக் கொள்கையும் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புக்கும், துருக்கி கட்டார் கூட்டணிக்கும் எதிரானதாகவே அமைந்துள்ளன.

இவ்வாறிருக்கையில் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர தொடர்புகளை மீண்டும் முறித்துக்கொள்வதாக கடந்த 05ம் திகதி அறிவித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை (03), குளோபல் லீக்ஸ் என்ற ஹேக்கர்கள், அமெரிக்காவுக்கான எமிரேட்ஸ் தூதுவர் யூசுப் அல்உதைபாவின் ஈமெயிலில் ஊடுருவி, எமிரேட்ஸ் மற்றும் இஸ்ரேலிய ஆதரவு மதியுரையகமான எஃப்.டி.டி. (Foundation for Defense of Democracies) இற்கும் இடையிலான இரகசிய உறவு குறித்த தகவல்களை வெளியிட்டிருக்கின்ற நிலையிலேயே, எமிரேட்ஸ் உள்ளிட்ட இந்த நாடுகளின் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இந்த எஃப்.டி.டி. மதியுரையகத்துடன் இணைந்து கட்டாரை குறைமதிப்பிடு செய்து, கட்டாரை தாழ்த்துவதற்கான வேலைகளை எமிரேட்ஸ் செய்து வந்துள்ளமை இந்த ஊடுருவலின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அதே நேரம் யூசுப் அல்உதைபா, கட்டாரை குறைமதிப்பீடு செய்து எழுதும் ஊடகவியலாளர்களுக்கு சன்மானங்கள் வழங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அதுவல்லாது, இந்த மதியுரையகத்தின் உயர் பதவியில் உள்ள ஒருவர், அர்துகானை இரர்ணுவ அதிகாரத்தின் மூலம் பதவிகவிப்பது குறித்த கட்டுரையொன்றையும் எழுதியுள்ளார். எனவே, கடந்த வருடம் துருக்கியில் மேற்கொள்ளப்பட்டு, தோற்றுப்போன சதிப்புரட்சியில் எமிரேட்ஸின் திருவிளையாடலும் உள்ளதா என்ற சந்தேகமும் இப்போது வலுப்பெற்றுள்ளது என்பது மேலதிக தகவல்.

சவூதி அரேபியா கட்டாருடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொள்வது குறித்த செய்தியை, சவூதி அரேபியாவின் அரச செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. சவூதி அரேபியாவின் தேசிய பாதுகாப்பு கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டார் நாடானது பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற தீவிரவாதிகளுக்கும், குழுவாதிகளுக்கும் புகலிடம் வழங்குவதாகவும் சவூதி அரேபியா குற்றம் சாட்டியுள்ளது. அத்தோடு, கட்டாருடனான எல்லையை மூடியுள்ள சவூதி அரேபியா, கட்டாருடனான வான், கடல்வழிப் போக்குவரத்தையும் இடைநிறுத்தியுள்ளது.

அத்தோடு, சவூதி அரேபியாவின் மிக நெருங்கிய கூட்டாளியான பஹ்ரைனும், கட்டாருடனான வான், கடல்வழி தொடர்புகளை துண்டித்துக்கொள்வதாக, அதன் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. பஹ்ரைனின் உள்ளக விவகாரங்களில் கட்டார் தலையிடுவதாக பஹ்ரைனும் குற்றம் சாட்டியுள்ளது. மறுபுறம், எகிப்தின் வான் பரப்பு மற்றும் துறைமுகங்களை கட்டார் பயன்படுத்த முடியாது என்று எகிப்தும் 05ம் திகதி அறிவித்துள்ளது.

மேலும், பயங்கரவாத, தீவிரவாத, குழுவாத அமைப்புக்களுக்கு கட்டார் ஒத்துழைப்பு மற்றும் நிதியுதவி வழங்குவதனால், கட்டாருடனான உறவுகளை முறித்துக்கொள்வதாக எமிரேட்ஸும், அதன் அரச செய்தி நிறுவனத்தின் ஊடாக 05ம் திகதி அறிவித்துள்ளது. இந்த நாடுகள் அனைத்தும், கட்டார் இராஜதந்திரிகள் 48 மணித்தியாலங்களில் தமது நாடுகளை விட்டு வெளியேற வேண்டும் என்றும், கட்டார் பிரஜைகள் 2 வாரங்களுக்குள் வெளியேற வேண்டும் என்றும் அறிவித்துள்ளன.

இந்த நாடுகளின் முடிவு குறித்து கட்டார் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், இந்த முடிவானது நியாயமற்றது என்று குறிப்பிட்டுள்ளது. அத்தோடு, இந்த நாடுகள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவொரு அடிப்படையும் இல்லை. இந்த முடிவால் கட்டார் பிரஜைகளதும், கட்டாரில் வாழ்வோரதும் சாதாரண வாழ்வுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. இந்த முடிவின் இலக்கும் தெளிவாக உள்ளது. கட்டாரின் மீது அதிகாரம் செலுத்தவே இவர்கள் முயல்கின்றனர். இது கட்டாரின் இறையாண்மைக்கு எதிரானதாகும் என்றும் கட்டார் வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரபுலகில் நிகழ்ந்து வரும் அரசியல் மாற்றங்களின் பின்னணியில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பும், துருக்கி கட்டார் கூட்டணியும் இருக்கின்றமையினாலேயே, இந்த வளைகுடா நாடுகளும், எகிப்தும் இணைந்து கட்டாரை தனிமைப்படுத்துவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளன. ஒட்டுமொத்தமாக கட்டாரை தனிமைப்படுத்தும்போது, வேறு வழியில்லாமல், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புக்கு கட்டார் வழங்குவதாகச் சொல்லப்படும் ஒத்துழைப்பும் ஆதரவும் நிறுத்தப்படலாம் என்று இந்த நாடுகள் கனவு காண்கின்றன.

ஆனால், இந்த தனிமைப்படுத்தல் முயற்சியை கட்டார் வெற்றிகரமாக முறியடிக்க வேண்டும் என்ற பரவலான எதிர்பார்ப்பு மத்திய கிழக்கு மக்களின் சமூக வலைதள பதிவுகளைப் பார்க்கையில் தெரிகின்றது.

இதேவேளை, யெமனில் ஈரானின் ஆதரவுடன் இயங்குகின்ற ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிடுகின்ற சவூதி அரேபியா தலைமையிலான இராணுவ கூட்டமைப்பில், இனிமேலும் கட்டாருக்கு எந்தவொரு வரவேற்பும் கிடையாது என்று, இந்த இராணுவக் கூட்டமைப்பும் அறிவித்துள்ளது. அத்தோடு, கட்டாரானது தமது எதிரிகளான ஹூதிகளுடன் இணைந்து செயற்படுவதானல், தாமும் கட்டாருடனான உறவை முறித்துக்கொள்வதாக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள யெமனின் அரசாங்கமும் அறிவித்துள்ளது.


சவூதி அரேபியா, எமிரேட்ஸ், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் கட்டாருடனான உறவை முறித்துக் கொள்ளும் இந்த முடிவுக்கான உடனடிக் காரணம், சமீபத்தில் கட்டாரின் அரச செய்தி நிறுவனம் ஊடுருவப்பட்டு, வெளியிடப்பட்ட சில போலியான செய்திகளாகும் என்றும் நம்பப்படுகின்றது. கடந்த செவ்வாயன்று, கட்டாரின் அரச செய்தி நிறுவனம் ஊடுருவப்பட்டு, இந்த நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் எதிரான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அதனைத் தொடர்ந்து, உடனடியாக அறிக்கை வெளியிட்ட கட்டார் அரசு, அரச செய்தி நிறுவனம் ஊடுருவப்பட்டு, இந்த செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்று அறிவித்தது. ஆனால், இந்த நாடுகளோ, மீண்டும் மீண்டும் அந்தப் போலியான செய்திகளை மீள்ஒளிபரப்பு செய்து, மக்கள் மனதை மாற்ற முனைந்தன.

அரபுலகில் பலம்வாய்ந்த நாடாக விளங்கிய ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவின் அடுத்த இலக்கு கட்டாராக இருக்குமோ என்ற அச்சம் அரபுலகில் நிலவி வந்த நிலையில், சமீபத்தில் அமெரிக்க ஜானதிபதி டொனல்ட் ட்ரம்ப் சவூதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்ட சில வாரங்களிலேயே, கட்டாருடனான இராஜதந்திர முறிவை சவூதியும் அதன் கூட்டாளிகளும் அறிவித்துள்ளமையானது, இந்த சந்தேகத்தை மீண்டுமொரு முறை வலுவூட்டிச் செய்துள்ளது.



கவித்துவம் என்ற உணர்ச்சி மேலிடும் போது கவிதையின் வடிவம் அவசியம் இல்லாமல் போகிறது. கண்ணீரும் மௌனமும் புன்னகையும் உணர்த்தாத கவித்துவத் தருணங்களை எந்த கவிதை உணர்த்திவிட முடியும்?

ரவிசங்கர்




பா.சிவாந்தினி
பொற்பதி, குடத்தனை.

புட்களின் மீது
பனித்துளிகள் கொண்ட காதல்
கதிரவனைக் கண்டால்
காணாமல் போய் விடும்
இருப்பினும் இரவு முழுவதும்
இடைவிடாத அன்போடு
இணைந்தே இருக்கும்

அளவில்லாத ஆர்ப்பரிப்பு
ஆசை நாயகனோடு
ஆனந்தமான நிமிடங்களை
நினைத்துப் பார்க்கையில்
நீண்டகாலம் வாழ்ந்த திருப்தியில்
மன மகிழ்ச்சியோடு
மரணித்துப் போகின்றது.



# அதே தினம்


த.ஜெயசீலன்

மீண்டும் அதேதினம் போல் பெருகிற்றுச் சனவெள்ளம்.
மீண்டும் அதேதினம் போல் எழுந்தது அவலஒலம்.
மீண்டும் அதேதினம் போல் வெடித்தன கதறல்கள்.
மீண்டும் அதேதினம்போல் விளைந்தன அடிபிடிகள்.
மீண்டும் அதேதினம்போல் வெந்தது நம் கோபமனம்.
மீண்டும் அதேதினம் போல் வறுத்தெடுத்தது வெய்யில்.
மீண்டும் அதேதினம் போல் விசும்பிற்றுக் கடலினலை.
மீண்டும் அதேதினம் போல் மிரண்டது துடித்த உயிர்.
மீண்டும் அதேதினம் போல் துவண்டது இடிந்த உடல்.
மீண்டும் அதேதினம் போல் விலைபோச்சு மெய் நேர்மை.
மீண்டும் அதேதினம் போல் விழலாச்சுதே யதார்த்தம்.
மீண்டும் அதேதினம் போல் மேவிற்று மௌனவலி.
மீண்டும் அதேதினம் போல் மிகுந்தது எதிர்காலஅச்சம்!
மீண்டும் அதேதினம் போல் மிஞ்சிற்று ஆற்றாமை.
மீண்டும் அதேதினம் போல் விலகிற்று நம்பிக்கை.
மீண்டும் அதேதினம் போல் நடப்பதெல்லாம் கண்டு வெம்பி
தான் துவண்டு கைபிசைந்து காத்திருக்குதே நீதி.
மீண்டும் அதேதினம் போல் இறுதியில் எமைக் கவிந்து
வீழ்த்திற்று உயிரேக்கம்!
விலகவில்லை உடற்தாகம்!


# காதல் கலவரம்

யாழ்ப்பாவாணன்

காதல் அது
ஒரு உணர்வு தான்
தூய்மையான (புனிதமான) ஒன்று தான்
அதனை மதிப்பவர்களுக்கு...
காதல் அது
பிறஉயிர்களையும்
விரும்ப(நேசிக்க)க் கற்றுத் தரும்
அதனைப் புரிந்தவர்களுக்கு...
காதல் அது
வெட்டி வேலைதான்
அதனைப் பொழுது போக்காக
எண்ணுபவர்களுக்கு...
காதல் அது
சாவை(மரணத்தை)த் தேடும் வழி தான்
அது தான் பாருங்கோ
விருப்புகளை அடையும் வரை
விரும்புபவர்களாக
நடிப்பவர்களை நம்பியோருக்கு...
காதல் அது
அருமையான மருந்து தான்
அதாவது
ஒருவரை ஒருவர்
விரும்புபவர்களாக நடிக்காது
உள்ளத் தூய்மையுடன்
ஒருவரை ஒருவர் நம்பி
காதலிப்போருக்கு மட்டுமே



நெற்கொழு தாசன்




எரிதலுக்கும் அனைதலுக்கும்
இடைப்பட்டதொரு அரியகணத்தை
இரசிக்க முயல்கையில்,
காலங்கள் மீதான என்னிருப்பு
கேள்விக் குறியானது.
அக்கணத்தில்,

பிரபஞ்ச ரகசியமொன்றை
உச்சரித்தபடி வந்த
யுகாந்திரங்களை கடந்த தென்றலின்
தடவுதலில் கேட்கத் தொடங்கியது
முன்னோர்களின் ஒப்பாரி!!


ஆதியொருவனின் ஆசைகளின்
குறியீடுகள் பற்றியும்,
முரண் பெருமூச்சுக்களின்
வெப்ப விளைவுகளையும்,
நாளைகாய் இன்றையை
இழந்தவனின் காயாத கண் ஈரத்தையும்,
முகத்திலறைந்து போனது அது !

காலக் கயிற்றின்
மலர்க்கட்டுக்கள்
வெலிக்கத் தொடங்கின



# ‘தங்குவதற்கு இடமில்லாதபோது டக்ளசின் வீட்டில் அடைக்கலம் கிடைத்தது’

## வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தவராசா அனுபவங்களை எழுதுகிறார்




(கடந்தவார தொடர்ச்சி)

தரப்படுத்தலிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் இளைஞர்களிடையே வலுவடையத் தொடங்கின. ஏற்கனவே ஈழவிடுதலை இயக்கத்தில் செயற்பட்ட நண்பர்களை இணைத்து ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. யாழ் மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் நடைபெற்றது. சத்தியசீலன், மாவை சேனாதிராஜா, லோரன்ஸ், மகா உத்தமன், சந்திரசேகரம், அரியரட்ணம் (புன்னாலைகட்டுவன்), தேசிய இலங்கை மன்னன், முத்துக்குமார், சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், பாலநடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். மாணவர் பேரவையென்ற பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டு, தரப்படுத்தலுக்கு எதிராகப் போராட்டம் செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பாடசாலை நிறைவடையும் நேரங்களில் பாடசாலை வாசலுக்குச் சென்று தரப்படுத்தலுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்ததோடு எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கு கொள்ள கோரிக்கை விடுத்தோம். எமது

> மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.

பிரசாரத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்தது. திட்டமிட்டபடி கொக்குவில் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. ஏராளம் மாணவர்கள் கலந்து கொண்டனர். முற்ற வெளியில் கூட்டம் நடந்தது. அக்கால கட்டத்தில் மாணவர்களை மிகப்பெரியளவில் ஒன்றுதிரட்டிய சம்பவம் இது. கூட்டத்தின் முடிவில் அரியரட்ணத்திற்கு பல இளைஞர்கள் இரத்தத் திலகமிட்டார்கள். சிவகுமாரன் என்ற தனிமனிதன் ஆரம்பித்து வைத்த ஆயுதவழிமுறையை இளைஞர்கள் பெருமளவில் ஏற்றுக் கொண்ட நிகழ்வாக இதனைக் கருதலாம்.

இதேகாலத்தில் அரசியல் வன்முறை செயற்பாட்டாளர்கள் இன்னொரு பக்கத்திலும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் ஞானசுந்தரம் சட்டங்களிலிருந்து தப்பிக்கக் கூடிய வகையில் எவ்வாறு அரசியல் வன்முறைகளைக் கையாள முடியுமென்று இளைஞர்களிற்கு போதித்து வந்தார். சிறிய குற்றங்கள், பெரிய விளைவுகள்தான் அவரது எண்ணக்கரு. உம் குண்டுகளை வைக்காமல் சத்தவெடிகளை வீட்டுக்குள் போட்டாலே போதும், அவர்கள் பயந்துவிடுவார்கள், இது பிடிபட்டாலும் பெரிய குற்றமாகாது.

இக்காலத்தில் பரவலாக வன்முறைகள் ஆரம்பித்தன. மார்டின் வீதியிலிருந்த துரையப்பாவின் அலுவலகத்திற்குக் குண்டு வைத்தோம். ஆனால் அதில் சம்பந்தப்பட்டதாக பிடிபட்டது தமிழரசுக்கட்சியின் பேச்சாளர்.

வன்முறைகள் அதிகரிக்க அதிகரிக்கக் கைதுகளும் அதிகரித்ததால், எமக்கு சட்ட உதவி தேவைப்பட்டது. எங்களில் சிலர் வட்டுக்கோட்டையிலிருந்த அமிர்தலிங்கத்தின் வீட்டிற்குச் சென்று எமக்குச் சட்ட உதவி வழங்கும்படி கோரினோம். அமிர்தலிங்கம் வன்முறைச் செயற்பாட்டினை ஏற்கத் தயங்கிப் பல காரணங்களைக் கூறிக்கொண்டிருந்தார். இதனை வீட்டின் மையப் பகுதியிலிருந்த திரைச்சீலையின் பின்னிருந்து செவிமடுத்துக் கொண்டிருந்த அவரின் மனைவி, “வன்முறைப் பாதையில் அவர்கள் செல்ல விரும்பினால் நீங்கள் ஏன் அதனைத் தடுக்கிறீர்கள்” எனக் கேட்டார். அதன்பின்னர்; அமிர்தலிங்கம் உதவி செய்வதாக வாக்களித்திருந்தார்.

அரசியல் வன்முறைச் செயற்பாடுகள் நாளிற்குநாள் அதிகரித்துக் கொண்டிருந்த நிலையில் அரியரட்ணமும் (புன்னாலைக் கட்டுவன்) வேறு சில இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன் சத்தியசீலனை பொலிசார் தீவிரமாக தேடினர். அவர் தலைமறைவாகியிருந்து கொண்டு இளைஞர்களை அரசியல் வன்முறைச் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

மட்டக்களப்பில் வைத்து சத்தியசீலன் கைதாகியதைத் தொடர்ந்து காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா உள்ளிட்ட நாற்பத்தியிரண்டு பேர்கள் கைதானார்கள். விசாரணையில் சத்தியசீலன் கொடுத்த பெயர்ப் பட்டியலில் எனது பெயரும் இருப்பதாக சில பொலிஸ் உள்ளகத தகவல்கள் தெரிவித்ததை அடுத்து நானும் தலைமறைவானேன். ஆனால் பொலிசார் என்னைத் தீவிரமாகத் தேடவில்லை. மீண்டும் படிப்படியாக வெளியில் நடமாடத் தொடங்கினேன்.

இக்காலகட்டத்தில் தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கான முனைப்புகளில் வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி ஐயா உள்ளிட்ட பலர் ஈடுபட்டிருந்தனர். தமிழ் காங்கிரசிற்கு அதில் முழுமையான சம்மதமிருக்கவில்லை. தமிழரசுக்கட்சியின் தீவிர செயற்பாட்டாளர் வடிவேற்கரசனின் தம்பி பேபி போன்றவர்கள் ஒரு திட்டம் தீட்டினர். கொழும்பு செட்டித்தெருவில் உள்ள வீட்டிற்கு சிவசிதம்பரம் ஐயாவை அழைத்தார்கள். இயக்கங்கள் ஐக்கியத்தை விரும்புகின்றன எனக் கூறி, இயக்கங்களின் சார்பில் என்னை அறிமுகப்படுத்தினார். அதன்பின்தான் தமிழ் காங்கிரஸ் ஐக்கிய முன்னணியில் இணைவதற்குத் தனது சம்மதத்தைத் தெரிவித்தது. அன்றைய கூட்டத்தில் வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி ஐயாவும் கலந்துகொண்டிருந்தார்.

இக்காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அமைப்பிலிருந்து பிரிந்து முத்துகுமார், வரதராஜப்பெருமாள், புஸ்பராசா, பிரான்சிஸ் (கி.பி.அரவிந்தன்), சந்திரமோகன், அன்னிலிங்கம், மண்டூர் மகேந்திரன், பத்மநாபா, புஸ்பராணி ஆகியோர் இணைந்து தமிழீழ விடுதலை இயக்கத்தை (இன்றைய ரெலோ அமைப்பு அல்ல) ஆரம்பித்தார்கள். நான், பாலகுமார் ஆகியோரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டோம்.


பின்னர் முத்துகுமார், வரதராஜப் பெருமாள்,புஸ்பராசா போன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நான், சந்திரமோகன், தங்கமகேந்திரன், ஜெயக்கொடி, புஸ்பராணி ஆகியோர் அந்த அமைப்பை செயற்படுத்தினோம்.

> **1977 தேர்தலின் முன்னர் அவசரகால நிலைமை நீக்கப்பட்டதை தொடர்ந்து, நாம் எல்லோரும் படிப்படியாக விடுதலையானோம். தடுப்புக்காவலில் வைப்பதற்கு முன்னர் கொழும்பில் கணக்கியல் துறையில் படித்துக் கொண்டிருந்ததனால் விடுதலையின் பின் அதனைத் தொடர்ந்தேன்.**

எமது செலவிற்கு பணமிருக்கவில்லை. பெரிய வர்த்தகர்களிடம் சென்று பண உதவி செய்யுமாறு கெஞ்சிக் கேட்டோம். பெரியளவில் உதவி கிடைக்கவில்லை. புலோலி கிராமிய வங்கியில் முகாமையாளராக பாலகுமாரன் இருந்தார். பழைய வாகனமொன்றை கடத்தி அதன் சாரதியை டிக்கியில் கட்டிப் போட்டு, புலோலிக்கு சென்றோம். அடகுவைக்கப்பட்ட நகைகளை பாலகுமாரனின் அனுசரணையுடன் கொள்ளையடித்தோம். நகையுடன் அந்த வாகனத்தில் அதியுத்த வேகத்தில் யாழ்ப்பாணத்திற்கு பறந்தோம். அந்த வேகத்தை வாகனம் தாங்க முடியாமல்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...
































இணைய பன்னல்



இடைவழியில் இயந்திரகோளாறாகி நின்றுவிட்டது. வீதியிலேயே வாகனத்தைக் கைவிட்டு ஆளுக்கொரு திசையாகத் தப்பியோடினோம். நகைகள் உருக்கப்பட்டு புஸ்பராணி, கல்யாணி ஆகியோரின் உதவியுடன் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, கொழும்பில் விற்கப்பட்டு எங்களிற் பலர் நீர்கொழும்பில் தலைமறைவாகி இருந்தோம். எனினும், எம்மையே பின்தொடர்ந்த பொலிசார் குறுகிய கால இடைவேளையில் இதில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் கைது செய்தனர்.

நாம் எல்லோரும் கோட்டை கிங்ஸ் ஹவுசில் வைக்கப்பட்ட நிலையில் புஸ்பராணி, தங்கமகேந்திரன், ஜெயக்கொடி ஆகியோர் பொலிசாரினால் மிகமோசமாகத் தாக்கப்பட்டனர். சத்தியசீலன் கைதானதைத் தொடர்ந்து தடுப்புக் காவலிற்குச் சென்றவர்களுடன் நாங்களும் மகசின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டோம்.

1977 தேர்தலின் முன்னர் அவசரகால நிலைமை நீக்கப்பட்டதை தொடர்ந்து, நாம் எல்லோரும் படிப்படியாக விடுதலையானோம். தடுப்புக் காவலில் வைப்பதற்கு முன்னர் கொழும்பில் கணக்கியல் துறையில் படித்துக் கொண்டிருந்ததனால் விடுதலையின் பின் அதனைத் தொடர்ந்தேன். இக் காலகட்டத்தில் பத்மநாபா லண்டன் சென்றார்.

ஏழெட்டு மாதங்களின் பின் ஒருநாள் நான் கொழும்பில் தங்கியிருந்த அறைக் கதவை யாரோ தட்டினார்கள். திறந்து பார்க்க, பத்மநாபா நின்றார். ஈழ மாணவர்கள் அமைப்பு (Eelam Unions of Students) என்ற அமைப்பொன்றில் தான் இலண்டனில் இணைந்துள்ளதாகவும், அவ்வமைப்பின் செற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு வந்துள்ளதாகவும் கூறினார்.

1977இல் பாரிய சூறாவளி கிழக்கு மாகாணத்தைத் தாக்கியது. அதில் மோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பிற்கு பத்மநாபா, நித்தியானந்தன்(பிரான்ஸ்), நான் மூவரும் சென்றிருந்தோம். பத்மநாபா ஒருவருடம் வரை அங்கே தங்கியிருந்து பாதிக்கப்பட்ட மக்களிற்காகப் பணியாற்றினார். இன்றும் ஈரோஸ் அமைப்பிற்கு மட்டக்களப்பில் இருக்கும் ஆதரவுத்தளம், பத்மநாபா அன்று போட்ட விதைதான்.


அதன்பின் நான் கல்வி, தொழில் எனத் தனிப்பட்ட வாழ்வில் கவனம் செலுத்தினேன். அமைப்புகளின் செயற்பாட்டாளனாக அல்லாமல் அவர்களுடனான தொடர்புகளைப் பேணி வந்தேன். 1987 இந்திய இலங்கை உடன்படிக்கை வரை நான் தீவிர இயக்க செயற்பாட்டாளராக இருக்கவில்லை.

கொழும்பில் என்னுடன் மிக நெருக்கமாக இருந்தவர்களுள் ஒருவர் ஒப்ரோய் தேவன். அவரும் நானும் ஒரே அறையில் இருந்தோம். அவர் அப்போது ஒப்ரோய் ஹோட்டலில் பணியாற்றிக் கொண்டிருந்தார். வன்முறை அரசியற் செயற்பாடுகளில் தீவிர நாட்டங் கொண்டிருந்தார். ஒருநாள் கொழும்பில் பாதாளக் கோஷ்டியுடன் தொடர்புடையவர்களிடமிருந்து பணத்திற்கு பிஸ்டலொன்றை வாங்கி வந்து அறைக்குள் வைத்துப் பரிசோதித்திருக்கின்றார். வீட்டு உரிமையாளர் கதவு ஓட்டைகளினூடே இதனை அவதானித்து பொலிசிற்கு அறிவித்துவிட்டார். பொலிஸ் வரும்போது தேவன் வேலைக்குச் சென்று விட்டார். நான் மட்டுமே அறையிலிருந்தேன். தேவனின் பெட்டிகளை அவரது அனுமதியின்றித் திறக்க முடியாதெனப் பொலிசாரிற்கு நான் கூறியதனையடுத்து அவர்கள் மீண்டும் வருவதாகக் கூறிச் சென்றுவிட்டனர். தேவனிற்கு உடனடியாகவே தகவல் கொடுக்கப்பட்டு பிஸ்டல் அறையிலிருந்து அகற்றப்பட்டது.

அக்காலகட்டத்தில் கொழும்பில் எனது அறை நண்பராக இருந்தவர் ராம் ராஜகாரியர் (பின்னர் வடக்கு கிழக்குமாகாண சபையின் அவைத்தலைவராக இருந்தவர்). அறையை விடும்படி வீட்டுக்காரர் கேட்டுக் கொண்டிருந்த நிலையில், எங்கு போவதெனத் தெரியாமல் திண்டாடியபோது, றோயல் கல்லூரியில் தன்னுடன் படித்த ஒரு நண்பர் இருக்கிறார். அவர்களின் வீட்டில் தங்கலாம்; என ராம் கூறினார்.

அப்படித்தான் கே.சி.நித்தியானந்தாவின் (டக்ளஸ் தேவானந்தாவின் மாமா) வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அந்த வீட்டில் தங்குவதற்கு எனக்கும் ஒரு இடம் ஒதுக்கித்தரப்பட்டது. அதிலிருந்துதான் டக்ளஸ் தேவானந்தா குடும்பத்துடனான எனது உறவு ஆரம்பித்தது. அதுதான் காலப்போக்கில் அரசியல் உறவாக மாறியது. நித்தியானந்தா அப்போது பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக இருந்தார். அவரது செயலாளராக டக்ளஸ் இருந்தார்.

(தொடரும்)



# இடையில் வந்த நவக்கிரக வழிபாடு!

ஆதியில் ஆலயங்களை எழுப்பும்போது நவக்ரஹங்களுக்கு என தனியாக உருவ வழிபாடோ சந்நிதிகளோ அமைக்கப்படவில்லை. கடந்த 200 ஆண்டுகளாகத்தான் சிவாலயங்களில் நவக்ரஹங்களை பிரதிஷ்டை செய்து வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சூழலில் எல்லோரும் நவக்ரஹங்களின் தாக்கத்திற்கு பயந்து கொண்டிருக்கிறோம், நவக்ரஹங்களுக்கு பரிகாரம் செய்வதற்காக அந்தந்த கிரஹங்களுக்குரிய திருத்தலங்களை நாடி சென்று கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவும் ஒரு நல்ல நிலைதான்.

சனிக்கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும் ஆலயங்களில் விசேஷ அர்ச்சனைகள் நடைபெற்று கொண்டிருப்பதும், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் துர்க்கையின் சந்நதியில் ராகுகால பூஜைகள் நடப்பதும், சனிப்பெயர்ச்சி, குருபெயர்ச்சி நாட்களில் ஆலயங்களை நோக்கி பெருந்திரளாக மக்கள் செல்வதும் நவக்ரஹங்களின் தாக்கத்தினை உணர்ந்துகொண்டதன் வெளிப்பாடு எனத் தோன்றுகிறது. இந்த வகையில் நவக்ரஹங்களின் சந்நதிகள் தனியாக அமைக்கப்பட்டது, ஆன்மிக வளர்ச்சிக்கு துணை நிற்பதோடு மக்களையும் சரியான பாதையில் பயணிக்க வைக்கிறது.

# பரிகாரங்கள் உடனே பலன் தருமா?

கிரக தோஷங்களுக்குப் பரிகாரம் செய்தபின் அந்தத் தோஷங்கள் நிவர்த்தி ஆகிவிட்டன என்பதை எதை வைத்து முடிவு செய்வது? இப்படி பட்ட சந்தேகம் பலருக்கு உண்டு

தீராத வயிற்றுவலி வருகிறது. அதற்கு நாம் மருந்து சாப்பிடுகிறோம். சாப்பிடும் மருந்து வேலை செய்கிறதா இல்லையா என்பதை நோய் குணமாகும்

அனுபவத்திலிருந்து தான் தெரிந்து கொள்ள முடியும். அதே போன்று தான் தோஷங்களுக்கான பரிகாரங்களும் ஆகும். குறிப்பிட்ட தோஷ நிவாரணத்திற்காகச் செய்யப்படும் பரிகாரம் காலச்சூழலில் பலன் தருவதை வைத்து தான் உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் உடனடியாகப் பலன்கள் ஏற்பட்டு விடும் என்று பலர் நம்புகிறார்கள். இது தவறான எதிர்பார்ப்பாகும். எந்தத் துயரமும் உடனடியாக நம்மைத் தாக்குவதில்லை. நிதானமாகத் தான் நம்மை கஷ்டத்திற்கு உள்ளாக்கும்.



நிதானமாகத் தான் விடுதலையும் செய்யும். 10 வருடப் பிரச்சினை ஒரே நாளில் எந்தப் பரிகாரத்தாலும் தீராது. சற்று காலம் பிடித்து தான் தீரும். எனவேகிரக பரிகாரங்கள் பலன் தருவதற்குக் குறைந்த பட்சம் 3 மாதங்களாவது ஆகலாம். 3லிருந்து 6 மாதத்திற்குள் பிரச்சினையின் வேகம் குறைய அரம்பிக்கவில்லை என்றால் பரிகாரம் பலன்தரவில்லை அல்லது சரியான பரிகாரம் செய்யப்படவில்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

# கோவில்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்?

கோவிலுக்குச்சென்றால் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று சில விதிமுறைகளை நம் முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். அவற்றில் சில:

1. நீராடாமல் கை கால்களை சுத்தம் செய்யாமல் செல்லக்கூடாது.
2. பகவானுக்கு நேர் எதிர் வழியில் செல்லாது பக்கத்து வழியில் செல்ல வேண்டும்.
3. விளக்கேற்றும் போதும், விளக்கில்லாத போதும், செல்லக்கூடாது.
4. புனித நீர்க்குடத்தை மூடாமலும், இறைவனின் நைவேத்தியத்தை மூடாமலும் வைக்கக்கூடாது.
5. வேறு காரியங்களுக்கு வாங்கிய பொருளை இறைவனுக்கு அர்பணிக்கக் கூடாது.
6. இறைவனின் மந்திர உபதேசம் பெறாமல் ஆராதனை செய்யக்கூடாது.
7. மணமில்லாத மலர்களை சமர்ப்பிக்க கூடாது.
8. கோவிலுள் குப்பை கொட்ட கூடாது.
9. கோவிலுள் ஓடுதல், சிரித்தல், அதிர்ந்து நடத்தல், சினந்து பேசுதல், தற்பெருமை பேசுதல், சமய ஏற்றத்தாழ்வு பேசுதல் கூடாது.
10. துளசியையும் மற்றைய பூக்களையும் நீர்கொண்டு அலம்பாமல் கோவிலுள் எடுத்துச் செல்ல கூடாது.
11. கோவிலுள் தீர்த்தம், சடாரி, துளசி, பிரசாதம் இவை பெறாமல் திரும்பக்கூடாது.
12. அர்ச்சகர்கள் தரும் குங்குமம் பிரசாதம் போன்றவற்றை கீழே சிந்தக் கூடாது. இறைவன் பிரசாதத்தை பிறர் கால்களில் படுமாறு கீழே போடுவது நல்லதல்ல.
13. ஆமணக்கு எண்ணையை திரியிட்டு கோவில்களில் விளக்கு ஏற்றக் கூடாது.

# இந்தவார ராசி பலன்கள்

## 11.06.2016 – 17 .06.2016

**மேஷம்:** சுக்கிரன் ராசியில் இருந்து சுப பலம் பெறுவதால் சொல்வாக்கு உயரும். மனைவி வகையில் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்துடன் இன்பச் சுற்றுலா சென்று வருவீர்கள். வாக்கு ஸ்தானத்தில் சூரியன், புதன் சேர்ந்து இருப்பதால், நிறை, குறைகள் உண்டு. பிள்ளைகள் மூலம் பெருமையும், உதவிகளும் கிடைக்கும். உறவினர்களின் குடும்ப விஷயங்களில் கருத்து சொல்லாமல் இருப்பது நலம் தரும். விருந்தினர்கள் மூலம் பெண்களுக்கு வேலைச் சுமை, செலவுகள் இருக்கும். உயர திகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**ரிஷபம்:** சூரியன், புதன் இருவரும் ராசியில் சேர்ந்து இருப்பது நல்ல யோகமாகும். நடக்குமா, நடக்காதா என்று குழப்பத்தில் இருந்த விஷயங்கள் எல்லாம் சாதகமாக கூடி வரும். தந்தையின் கருத்துக்கு செவி சாய்ப்பது நல்லது. வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் அலைச்சல், செலவுகள் இருக்கும். பெண்கள் விரும்பிய ஆடை, அணிகலன்கள் வாங்கி மகிழ்வார்கள். பண விஷயமாக நண்பர்களிடையே மன வருத்தங்கள் வரலாம். வெளியூரில் வேலை பார்ப்பவர்களுக்கு சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும். வியாபாரம் கைகொடுக்கும், கொடுக்கல், வாங்கல் சாதகமாக நடக்கும்.

**மிதுனம்:** யோகாதிபதி சுக்கிரன் தன் சொந்த வீட்டை பார்ப்பதால் சுபயோக நேரம். உங்கள் எண்ணங்கள், ஏக்கங்கள் நிறைவேறும். குடும்பத்துடன் ஆன்மிக சுற்றுலா சென்று வருவீர்கள். செவ்வாய் ராசியில் இருப்பதால் கொடுக்கல், வாங்கலில் நிதானம் தேவை. பெண்கள் நகைகளை இரவல் கொடுப்பது, வாங்குவது வேண்டாம். புதன் 12ல் இருப்பதால் கல்வி வகையில் செலவுகள் இருக்கும். வீடு மாறுவதற்கான கால நேரம் வந்துள்ளது. வெளியூர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் அதிர்ஷ்டகாற்று உங்கள் பக்கம் வீசும்.




**கடகம்:** சுக்கிரன் சுக ஸ்தானத்தைப் பார்ப்பதால் மகிழ்ச்சி இருக்கும். வீடு, சொத்து வாங்க இடம் பார்த்தவர்களுக்கு நல்ல இடம் அமையும். தாயாரிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். சூரியன், புதன் பார்வை காரணமாக மகன், மாப்பிள்ளையால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. அலுவலகத்தில் மனக் குறை நீங்கும். ராகு 2ல் தொடர்வதால் இடம், சூழ்நிலை அறிந்து பேசவும், கைமாற்றாக கொடுத்த பணம் வசூலாகும். பெண்கள் விரும்பிய வைர நவரத்தின ஆபரணங்கள் வாங்குவார்கள். கிரக, பரிகார பூஜைள் நிறைவேறும்.

**சிம்மம்:** ராசிநாதன் சூரியனின் பார்வை காரணமாக எண்ணங்கள், ஏக்கங்கள் நிறைவேறும். இதோ அதோ என்று இழுத்துக் கொண்டிருந்த வேலைகள் எல்லாம் சாதகமாக முடியும். எதிர்பார்த்த நிறுவனத்தில் இருந்து வேலைக்கான அழைப்பு வரும். சுக்கிரன் தன் சொந்த வீட்டை பார்ப்பதால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் கிடைக்கும். அடமானத்தில் இருக்கும் பொருட்களை மீட்பீர்கள். புதனின் பார்வை காரணமாக வீட்டில் மழலை குரல் கேட்கும் நேரம் வந்துள்ளது. தொழில் வியாபாரம் சீராக இருக்கும். எதிர்பார்த்த ஓர்டர் கைக்கு வந்து சேரும்.

**கன்னி:** புதன் பாக்ய ஸ்தானத்தில் இருப்பதால் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். வரன் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல சம்பந்தம் கூடி வரும் சுக்கிரன் தன, வாக்கு ஸ்தானத்தைப் பார்ப்பதால் சொத்து சம்மந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும். காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர்கள் வருவார்கள். சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக உத்யோக விஷயமாக பயணங்கள் இருக்கும். தொழில், வியாபாரம் கைகொடுக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய தொழிலில் கால் பதிக்கும் நேரம் வந்துள்ளது.

**துலாம்:** சுக்கிரனின் அருளால் சுபம் உண்டு. இல்லறம் இனிக்கும். எதிர்பார்த்த விஷயங்கள் சாதகமாக முடியும். தன, லாபஸ்தான தொடர்பு காரணமாக பொன், பொருள் சேர்க்கை உண்டு. கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு வந்து சேரும். புதபகவானின் பார்வை காரணமாக சொத்து பரிமாற்றம் நல்ல வகையில் முடியும். சமையலறையில் பெண்கள் கவனமாக இருப்பது அவசியம். உங்களின் அன்பான கோரிக்கையை பிள்ளைகள் நிறைவேற்றுவார்கள். இடமாற்றம் சற்று தாமதமாகும்.

**விருச்சிகம்:** ராசிநாதன் செவ்வாயின் பார்வை பலம் காரணமாக எண்ணங்கள், முயற்சிகள் வெற்றியடையும். திருமண விஷயமாக சுப செய்தி கிடைக்கும். சூரியன், புதன் இருவரும் தங்கள் ராசியை பார்ப்பதால் விருப்பு, வெறுப்பு, நிறை, குறைகள் இருக்கும். வீட்டில் பெரியவர்கள் மூலம் மருத்துவ செலவுகள் வந்து நீங்கும். பணியில் இருக்கும் பெண்களுக்கு சில இடையூறுகள் வர வாய்ப்புள்ளது. எதிர்பார்த்த கொண்ட்ராக்ட், ஓர்டர் கிடைக்கும். வேலையாட்களை அனுசரித்துச் செல்லவும்.

**தனுசு:** யோகாதிபதி செவ்வாய் நல்ல அமைப்பில் இருப்பதால் மதில் மேல் பூனையாக இருந்த நிலை மாறி ஸ்திரமாக முடிவு எடுப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செய்தி வியாழக்கிழமை வரும். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் வேண்டாம். சுக்கிரன் 5ல் இருப்பதால் கடன், கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. 3ல் கேது தொடர்வதால் குலதெய்வ தரிசனம், நேர்த்திக் கடன்கள் இனிதே நிறைவேறும். உத்யோகத்தில் இடமாற்றத்திற்கான முயற்சிகள் வெற்றியடையும். காலியாக இருக்கும் உங்கள் இடத்திற்கு புதிய வாடகைதாரர் வருவார்.

**மகரம்:** சுக்கிரன் சுகஸ்தானத்தில் இருப்பதால் உங்கள் ஆசைகள், கனவுகள் நிறைவேறும். பெண்கள் விரும்பிய பொன், வெள்ளி ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். செவ்வாயின் பார்வை காரணமாக நல்ல மாற்றங்கள் உண்டு. தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். சூரியன், புதன் 5ல் இருப்பதால் எதையும் வெளிப்படையாக பேச வேண்டாம். அலுவலகத்தில் வேலைச் சுமை, அலைச்சல் இருந்தாலும் சலுகைகள் கிடைக்கும். வசதியான பெரிய வீட்டிற்கு குடிபோகும் நேரம் வந்துள்ளது.

**கும்பம்:** கேது ராசியில் தொடர்வதாலும், சந்திரனின் சஞ்சாரம் காரணமாகவும் தடுமாற்றம், மனக் குழப்பம் வந்து நிற்கும். புதன் கேந்திரத்தில் இருப்பதால் மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் உண்டு. கடல் கடந்து செல்வதற்கு விசா கிடைக்கும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. சனிபகவானின் அமைப்பு காரணமாக உத்யோகத்தில் சாதகமான சூழ்நிலை இருக்கும். குழந்தைகள் மூலம் திடீர் மருத்துவ செலவுகள் வர வாய்ப்புள்ளது. புதிய வண்டி வாங்கும் யோகம் உள்ளது.

**மீனம்:** சுக்கிரன் வாக்கு ஸ்தானத்தில் இருப்பதால் சாதக, பாதகம் உண்டு. பேச்சில் கவனம் தேவை. பெண்கள் மூலம் மன வருத்தங்கள் வரலாம். கண் சம்பந்தமான கோளாறுகளை அலட்சியம் செய்ய வேண்டாம். செவ்வாய் 4ல் வலுவாக இருப்பதால் சொத்து சம்மந்தமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். சகோதர உறவுகளால் மகிழ்ச்சி, உதவி உண்டு. குடும்பத்தில் சுப விசேஷங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள். தொழில், வியாபாரம் லாபகரமாக நடக்கும். பணப் புழக்கம் இருக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

பீஷ்மர்

யுத்தம் இறுக்கமடைந்து சென்றுகொண்டிருந்த சமயத்தில் களமுனையில் ஏற்பட்ட ஆளணி பற்றாக்குறையை புலிகளால் நிவர்த்தி செய்ய முடியவில்லை. அரசியல், காவல், புலனாய்வுதுறையினர் கடுமையான ஆட்சேர்ப்பில் ஈடுபட்டும் வெற்றிடத்தை ஈடுசெய்ய முடியவில்லை.

தொடர் இடப்பெயர்வுகளால் மூத்த போராளிகளே கணிசமானவர்கள் வீடுகளிற்கு சென்றுவிட்டார்கள். குடும்பங்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்க, பொருட்களை எடுத்து செல்லல், குடிசை அமைத்தல், பதுங்குகுழி வெட்டுதல் என குடும்பத்தலைவர்களிற்கு பணிகள் இருந்தன. இருந்தவர்களும் வீட்டுக்கு போக, புதியவர்களையும் இணைக்க முடியாமல் புலிகள் திண்டாடினர். களமுனைகளிற்கு ஒருநாள்கூட பிரபாகரன் அவருடன் கதைத்ததில்லை. எப்படியிருக்கிறார் என விசாரித்து பார்க்கவுமில்லை.

2009 ஜனவரியில் தமிழேந்தி தனது பொறுப்பிலிருந்து விலகினார். மார்ச் மாதம் மரணமடைந்தார். இடைப்பட்ட மூன்று மாதங்களில் யாராலும் கவனிக்கப்படாத ஒருவராக இருந்தார்.

தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பிலிருந்த தமிழேந்தி விலகியதும், ஓரிரண்டு போராளிகளுடன் தங்கியிருந்தார். இறுதியாக 2009 மார்ச் மாதத்தில் இரணைப்பாலை பகுதியில் இருந்த நிதித்துறை தொலைத்தொடர்பு அணியொன்றின் நிலையில் தங்கியிருந்தார். மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் இரணைப்பாலையும் சனநடமாற்ற பகுதியாகிவிட்டது. அப்பொழுது யுத்த முனை புதுக்குடியிருப்பில் இருந்தது. உள்ளன. இராணுவமும் அவற்றை வைத்திருந்தன. இதன்மூலம் அந்த பகுதி மீது எறிகணை தாக்குதல் நடத்துவார்கள். அப்படித்தான் தமிழேந்தி நின்ற பகுதி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தமிழேந்தியின் பதுக்குகுழிக்கு அண்மையில் மிக உயரமாக வோக்கிடோக்கி குறஸ் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழேந்தி மரணமானதும் புலிகள் அவருக்கு தரநிலை வழங்கினார்கள். அப்பொழுதே புலிகள் பிரிகேடியர் தரநிலை வழங்கத் தொடங்கிவிட்டனர். பால்ராஜ், தமிழ்ச்செல்வன் போன்றவர்கள் பிரிகேடியர்களாக தரநிலைப் படுத்தப்பட்டிருந்தனர். தமிழேந்தியும் பிரிகேடியராக தரநிலைப்படுத்தப்படுவார் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் கேணலாகவே தரநிலைப் அவர் ஒறுத்துக்கொண்ட அளவிற்கு போராளிகள் தங்களைதாங்கள் ஒறுத்துக் கொள்ள வேண்டும் என அவரும் நினைக்கவில்லை. அமைப்பும் நினைக்கவில்லை. யுத்த நெருக்கடி அதிகரித்த காலப்பகுதியில் ஒரு போராளிக்கு நாளொன்றிற்கு ஒதுக்கப்பட்ட அரசி, மா, சீனியைதான்




# தமிழேந்தி பிரிகேடியர் அல்ல; கேணல்!


நிதித்துறை பணிகளை பார்வையிடும் தமிழேந்தி



புலிகளின் நிதித்துறை இயக்கிய பேருந்துசேவை

ஆட்களை திரட்ட தமிழேந்தி பொருத்தமானவர் என பிரபாகரன் நினைத்தார். பிரபாகரன் ஆட்களை கணக்கிடுவதில் வல்லவர். புலனாய்வுதுறை பொறுப்பாளராக பொட்டம்மானை நியமித்தார். நிதித்துறை பொறுப்பாளராக தமிழேந்தியை நியமித்தார். இன்னும் ஏராளம் நியமனங்கள். எல்லாம் அச்சொட்டாக பொருந்தின.

நிதி விவகாரங்களை கையாள, நிதியை பெருக்க பொருத்தமானவர் என தமிழேந்தியை நினைத்தார். பிரபாகரனின் கணக்கு சரியாக அமைந்தது. நிதித்துறை செயற்பாட்டில் வல்லவராக இருந்தார் தமிழேந்தி. ஆனால், ஆளணியை ஒருங்கிணைப்பதை சரியாக செய்ய அவரால் முடியவில்லை. அதற்கு காரணம், ஆளணி இல்லாமை. தனது கணிப்பு பிழைத்துவிட்டதென்ற அல்லது கொடுத்த பணியை தமிழேந்தி செய்யவில்லையென்ற கோபம் பிரபாகரனிற்கு ஏற்பட்டது. ஏனெனில் தமிழேந்தி விவகாரத்தில் பிரபாகரனின் கணக்கு முதன்முறையாக பிழைத்தது.

களமுனைகளில் இருந்து அவசர ஆளணி தேவையென தமிழேந்தியை தளபதிகள் தொடர்பு கொள்வார்கள். ஆளணி தேவையென பிரபாகரனிடம் போனாலும் தமிழேந்தியைதான் கைகாட்டி விடுவார். முழு அதிகாரமும் கொடுத்து தமிழேந்தியை அந்த பொறுப்பில் நியமித்தார். ஆளணி இல்லாத நிலையில், தளபதிகள் தமிழேந்தியுடன் முரண்பட தொடங்கினார்கள்.

வீணான முரண்பாடு எதற்கென நினைத்த தமிழேந்தி, தன்னால் அந்த பொறுப்பை செய்ய முடியவில்லையென ஒதுங்கிக் கொண்டார். தான் வழங்கிய பணியை செய்யவில்லை, இயக்கம் நெருக்கடியில் நிற்கும் சமயத்தில் இப்படி முடிவெடுத்தார் என தமிழேந்தியின் மீது, பிரபாகரனிற்கு பயங்கர கோபம். இந்த பொறுப்பிலிருந்து விலகிய பின்னர்


இறுதியுத்த சமயத்தில் முள்ளிவாய்க்காலில் இயங்கிய தமிழீழ வைப்பகம்

தேவிபுரத்தின் பின்பகுதி காட்டோரங்கள், கடற்கரையாலும் 58வது டிவிசன் வந்து கொண்டிருந்தது.

இரணைப்பாலையில் நிதித்துறை செயற்பாடுகள் இயங்கிக்கொண்டிருந்தன. 2009 மார்ச் 10ம் திகதி. காலை 10 மணி கடந்திருந்தது. தமிழேந்தியின் பதுங்குகுழி இருந்த பகுதி மீது திடீரென இராணுவத்தின் செல் தாக்குதல் நடத்தப்பட்டது. பதுங்குகுழியிலிருந்து வெளியில் வந்து நின்ற தமிழேந்தி, செல் வரும் சத்தம் கேட்டு பதுங்குகுழிக்குள் நுழைய எத்தனிக்க முயன்றபோது சிதறலொன்று பின்தலையில் தாக்கி மரணமானார்.

மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என சிறிய நிலப்பரப்பில் மக்கள் அடைபட்டிருந்த நேரமது. மக்களிற்குள் புலிகளின் தொலைத்தொடர்பு மையங்களை அமைக்காமல் மக்கள் இல்லாத இடங்களில் அமைத்திருந்தனர். இப்படித்தான், இரணைப்பாலையில் மக்கள் வெளியேறிய பின்னர் அங்கு தொலைத்தொடர்பு மையங்கள் இயங்கின.

தொலைத்தொடர்பு மையம் இயங்கிக் கொண்டிருந்தால், அதன் அமைவிடத்தை துல்லியமாக கணிக்கும் கருவிகள் பல படுத்தப்பட்டார். இன்று கூகிளில் தமிழேந்தியை தேடினால் பிரிகேடியர் என தரநிலைப்படுத்தப்பட்ட அஞ்சலிகளை அவதானிக்கலாம். உண்மையில் அவை தவறானவை.

அதிக அஞ்சலிகள் இல்லாமல் பச்சைப்புல்மோட்டையில் இருந்த மாவீரர் துயிலுமில்லத்தில் புதைக்கப்பட்டார்.

அவர் மரணித்த பின்னர் அவரது உடமைகளை பரிசோதிக்கும் வாய்ப்பு பல போராளிகளிற்கு கிடைத்தது. ஆட்லறி செல்களை விற்பனை செய்யும்போது ஒரு மரப்பெட்டிக்குள்தான் அடைத்து விற்பனை செய்வார்கள். தனித்தனியாகவும் வரும். இரண்டாகவும் வரும். இதற்கேற்ப பெட்டிகள் வித்தியாசப்படும்.

தமிழேந்தியின் மொத்த சொத்துமே ஒரு சிறிய ஆட்லறி பெட்டி மற்றும் ஒரு அளவான பயணப்பையில் அடைக்கத்தக்கவைதான். இரண்டு சோடி சீருடை, மற்றும் சில உடைகள்தான் வைத்திருந்தார். மிக எளிமையாக வாழ்ந்த மனிதன் அவர். போராளிகள் இப்படியான எளிமையான வாழ்க்கை வாழலாம் என்பதற்கு முன்னுதாரணம்.

இதில் கவனிக்க வேண்டியது, தன்னை அவர் தனக்கும் எடுத்து கொண்டார். மாதாந்தம் போராளிகளிற்கு ஒதுக்கப்பட்ட சவர்க்கார அளவைத்தான் அவரும் பாவித்தார். இப்படியான அமைப்பிற்கும், போராட்டத்திற்கும் விசுவாசமாக அவர் வாழ்ந்தார்.

அவருக்கு இராணுவ அறிவு கிடையாது. அவர் போர்வீரன் அல்ல. ஆனால் மிகச் சிறந்த நிர்வாகி. அதனை புலிகள் பயன்படுத்திக் கொண்டார். அவருக்கு கீழ் அன்பு (அம்மா), பாலதாஸ், குட்டி போன்றவர்கள் வளர்ந்தார்கள். இதில் அன்பு முக்கியமானவர்கள். வழங்கல் பொறுப்பாளராக செயற்பட்டவர். அமைப்பு நெருக்கடியான காலத்தில் இருந்தபோது அவரது செயற்பாடுகள் தமிழேந்திக்கு மிக உதவியாக இருந்தது. எனினும், துரதிஸ்டவசமாக 1998 இல் சுதந்திரபுரத்தில் கிபிர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவர் மரணமானார்.

இதற்கு பின்னர் பாலதாஸ், குட்டி என்ற இருவர் தமிழேந்திக்கு அடுத்த நிலையில் இருந்தனர். பின்னாளில் பாலதாஸ் நிதித்துறை பொறுப்பாளராக இருந்தார். குட்டியின் கீழ் பாண்டியன் வாணிபம் இருந்தது. குட்டி ஒரு ஆடம்பர பிரியர். கொழும்பு, வெளிநாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்கள் பலர் அவரது பினாமியாக இயங்கியவர்கள்தான். சமாதான உடன்படிக்கையின் பின் வருமானத்தில் ஒரு பகுதியை தனது கணக்கில் மாற்றுகிறார் என்ற ஒரு அபிப்பிராயம் அமைப்பின் உயர் மட்டத்தில் இருந்தது. எனினும், அவர் நன்றாக வர்த்தகம் செய்து, இலாபமீட்டியதால் அதை கண்டுகொள்ளாமல் விட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பை சேர்ந்தவர் குட்டி. 1994 இல் மாத்தையா கைதின் போது கைதாகியவர். விசாரணை, சித்திரவதையின் பின் விடுதலையானவர்.

(தொடரும்)




# மாதவிடாய் வராவிட்டால்?

வந்தாலும் இம்சை... வராவிட்டாலும் இம்சை. மாதவிலக்கு இப்படி இரண்டு விதங்களிலும் பெண்களுக்கு இன்னல் தரக்கூடியது. அதிக ரத்தப் போக்கு எப்படி ஆபத்தானதோ, அதைவிட மோசமானது மாதவிடாய் வராத 'அமெனோரியா' எனப்படுகிற நிலை.

தொடர்ந்து 3 மாதவிடாயைத் தவற விட்டவர்களுக்கும், 15 வயதுக்கு மேலாகியும் பூப்பெய்தாத பெண்களுக்கும் அமெனோரியா பிரச்சனை இருக்கலாம்.

பல்வேறு காரணங்களினால் இந்தப் பிரச்சனை வரலாம். பெண்களின் வாழ்க்கையில் ஏதோ ஒரு தருணத்தில் இயல்பாக நடக்கும் நிகழ்வாகவும் இருக்கலாம் அல்லது வேறு ஏதேனும் பிரச்சனைக்காக அவர்கள் எடுத்துக் கொள்கிற மருந்துகளின் பக்க விளைவாலும் நிகழலாம். கர்ப்பகாலம், தாய்ப்பால் ஊட்டும் காலம் மற்றும் மெனோபாஸ் காலங்கள் போன்றவை இயல்பானவை.

கருத்தடை மாத்திரைகள் எடுத்துக் கொள்வோருக்கும் மாதவிடாய் வராமல் போகலாம். மாத்திரைகளை நிறுத்திய பிறகும், அந்த சுழற்சி முறைப்பட சில நாட்கள் ஆகும். உடலுக்குள் பொருத்தப்பட்ட கருத்தடை சாதனங்களும் இதற்கு ஒரு வகையில் காரணமாகலாம். மனநல சிகிச்சைக்கான மருந்துகள், புற்றுநோய்க்கான கீமோதெரபி மருந்துகள், ரத்த அழுத்த மருந்துகள், அலர்ஜி மருந்துகள் போன்றவற்றை எடுத்துக் கொள்கிறவர்களுக்கும் மாதவிடாய் தற்காலிகமாக வராமல் இருக்கலாம்.

சிலர் பருமனைக் குறைக்கிறேன் என்கிற பெயரில் சராசரியை விடவும் மிகக் குறைவான எடைக்கு வருவார்கள். அது அவர்களது ஹோமோன் அளவுகளைப் பெரிதும் பாதித்து, அதன் விளைவாக மாதவிடாய் வராமல் செய்யும். அதே போல அளவுக்கதிமாக உடற்பயிற்சி செய்கிறவர்களும் இந்த நிலையை சந்திக்கலாம். மிகக் குறைவான உடல் கொழுப்பு, அளவுகடந்த உடல் உழைப்பு, மன அழுத்தம் போன்ற காரணங்களால்தான் விளையாட்டுத் துறையில் ஈடுபடுகிற பெரும்பாலான பெண்கள் இந்தப் பிரச்சனையை சந்திக்கிறார்கள்.

மன அழுத்தத்துக்கும் மாதவிடாய்க்கும் கூட மிக நெருங்கிய தொடர்புண்டு. மூளையில் உள்ள ஹைப்போதலாமஸ் பகுதிதான் மாதவிடாய்க்குக் காரணமான ஹோமோன்களை கட்டுப்படுத்துகிறது. அதித மன அழுத்தம் ஏற்படுகிற போது, மாதவிடாயும் கரு உருவாதலும் தற்காலிகமாக தடைப்படலாம்.

பிசிஓஎஸ் எனப்படுகிற பொலிசிஸ்டிக் ஓவரியன் சிண்ட்ரோம் (சினைப்பை நீர்க்கட்டிகள்) பிரச்சனை உள்ளவர்களுக்கும், அளவுக்கதிகமாகவோ அல்லது குறைவாகவோ சுரக்கும் தைராய்டு சுரப்பிக் கோளாறு உள்ளவர்களுக்கும், பிட்யூட்டரி சுரப்பியில் கட்டிகள் உள்ளவர்களுக்கும் கூட மாதவிடாய் நின்று போகலாம்.

திருமணமான பெண்களுக்கு இந்தப் பிரச்சனை இருந்தால், அது அவர்களது கருத்தரிப்பைப் பாதிக்கும். ஈஸ்ட்ரோஜென் சுரப்புக் குறைபாட்டினால் மாதவிடாய் வராமலிருந்தால், அது ஒஸ்டியோபொரோசிஸ் எனப்படுகிற எலும்புகள் மென்மையாகிற பிரச்சனைக்கு வழி வகுக்கலாம்.

**என்னென்ன சோதனைகள்?**

மாதவிடாய் வராமலிருக்க, கர்ப்பம் தரித்திருப்பது காரணமா என்பதை உறுதிப்படுத்துகிற சோதனை. தைரோய்ட் சுரப்பிகள் சரியாக இயங்குகின்றனவா என்பதற்கான ரத்தப் பரிசோதனை. சினைப்பைகள் சரியாக இயங்குகின்றனவா என்பதை அறிய ரத்தத்தில் திஷிபி, புரோலாக்டின் என்கிற ஹோமோன் அளவுக்கான சோதனை போன்றவை அவசியம். கூடவே மருத்துவர் அவசியம் என நினைத்தால், ஸ்கான் சோதனையையும் வலியுறுத்துவார்.

**தீர்வுகள்:**

அதற்கான மருந்துகள் உண்டு. சிலருக்கு ஹோமோன் சிகிச்சைகள் உதவும். தைரோய்ட் அல்லது பிட்யூட்டரி சுரப்பிகள் தொடர்பான பிரச்சனைகள் என்றால், அதற்கான மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கட்டி போன்ற அரிதான காரணங்களுக்கு அறுவை சிகிச்சையும் தேவைப்படலாம். பிரச்சனையின் தீவிரம் பொறுத்து மருத்துவர் அதைப் பரிந்துரைப்பார்.



# இடுப்பை பகுதி கொழுப்பை கரைக்க அர்த்தகடி சக்ராசனம்

**செய்முறை :** விரிப்பின் மீது நின்று கொண்டு உடலை வலது பக்கமாக வளைத்து ஒரு கை வலது முழங்கால் தொடும்படி மற்றொரு கை தலையின் காதை ஒட்டி படத்தில் காட்டியவாறு இருபுறமும் 1 நிமிடம் செய்யவும்.

கைகளை மேலே உயர்த்தும் போது உள்மூச்சு, சாயும் போது வெளிமூச்சு, ஆசனத்தின் போது இயல்பான மூச்சு, நிமிரும்போது உள்மூச்சு.

**பலன்கள்:** முதுகுத்தண்டின் வளையும் தன்மை அதிகரிக்கிறது. பக்கவாட்டு மார்புத்தசைகள் நன்கு நீட்டப்பட்டு இரத்தஓட்டம் அதிகரிக்கிறது. இடுப்பு மூட்டுக்கள் வளையும் தன்மை பெறுகின்றன. நுரையீரல்கள் கொள்ளளவு அதிகரித்து இடுப்பைச் சுற்றியுள்ள அதிகப்படியான கொழுப்பு கரைகின்றது. பாதத்திற்கு நல்லது.

# நுளம்புத்திரியின் ஆபத்துக்கள்!



நுளம்புகளை விரட்ட பெரும்பாலான மக்கள் நுளம்புத்திரி பயன்படுத்துகிறார்கள். நுளம்புத்திரி அலெத்ரின், ஈஸ்பயோத்ரின் போன்ற செயற்கையான வேதிப்பொருட்களால் செய்யப்படுகிறது. இவற்றை மணிக்கணக்காக பூட்டிய அறைக்குள் எரியவிடும்போது தலைவலி, கண் எரிச்சல் போன்றவை ஏற்படும். இது ஒரு எச்சரிக்கை மணி. இந்த நிலையிலே நுளம்புத்திரி கொளுத்துவதை தவிர்த்து விடுவது நல்லது.

தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் மூக்கிலும் கண்களிலும் நீர் ஒழுகுதல், மூச்சிரைப்பு போன்றவை ஏற்படும். தொண்டையில் வலி, அலர்ஜி, எரிச்சல், நோய்த்தொற்று ஏற்படும். வறட்டு இருமல் அதிகமாக வரும். 'சைனசிடிஸ்' ஏற்பட்டு மூக்கு அடைத்துக்கொள்ளும். சில நேரம் மூக்கின் உள்ளே தொற்றுக்கிருமிகள் அதிகமாகி சீழ் கூட பிடிக்கலாம். ஆரம்ப அறிகுறிகளின் போதே அலர்ஜி உள்ளவர்கள் நுளம்புத்திரி பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு மருத்துவரைப் பார்த்து உரிய சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நுளம்புத்திரியில் இருந்து வரும் புகையால் நுரையீரலும் பாதிப்படைகிறது. நுரையீரலை அழற்சி அடையச் செய்து ஆஸ்துமா நோயை ஏற்படுத்துகிறது. இதனால் சிலருக்கு 'ஆஸ்த் மாடிக் அட்டாக்' கூட ஏற்படும். நுளம்புத்திரி புகையை சுவாசிப்பது என்பது 100 சிகரெட் குடிப்பதற்குச் சமமான விளைவுகளை ஏற்படுத்தும். சிலர் ஏசி செய்யப்பட்ட அறையில் நுளம்புத்திரியை கொளுத்துவார்கள். இதனால் புகை அறையைவிட்டு வெளியே செல்லாமல் உள்ளேயே சுற்றும். தொடர்ந்து இதை சுவாசித்தால் நுரையீரலில் ஏற்படும் பாதிப்புகள் கான்சராக கூட மாறலாம்.

சிலர் கொசுக்களை விரட்ட மின்சாரத்தில் இயங்கும் திரவங்களைப் பயன்படுத்துவார்கள். இதுவும் முற்றிலும் பாதுகாப்பானது என்று சொல்ல முடியாது. இவற்றை உபயோகித்தால் அறை மற்றும் ஜன்னல் கதவை கொஞ்சமாக திறந்து வைக்க வேண்டும். அறையில் காற்றோட்டம் இல்லையென்றால், கொசு விரட்டித் திரவங்களும் தும்மல், கண் எரிச்சல், மூச்சுவிடுவதில் சிரமம் போன்ற பிரச்னைகளை ஏற்படுத்தும். கொசுவை விரட்டும் க்ரீம்களை தடவிக் கொள்வது கூட சிலருக்கு தோலில் ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடும்.

பைப்புகள் மூலம் அடிக்கப்படும் கொசு மருந்துகளால் ஏற்படும் புகைமண்டலமே சிலருக்கு மூச்சுத்திணறலை உண்டாக்கும். சைனஸ் உள்ளவர்களுக்கு இடைவிடாத தும்மல் ஏற்படும். இப்படி புகை போடும் போது துணியால் மூக்கையும் வாயையும் மறைத்து கட்டிக்கொள்ள வேண்டும். கொசுக்களை விரட்ட சிலர் ஸ்பிரே அடிக்கிறார்கள். இது மூச்சுத்திணறல், தலைசுற்றல் ஆகிய பின்விளைவுகளை கொண்டுவரும்.

அதனால் கொசுவை விரட்ட நல்ல தரமான துணிகளில் தயாரிக்கப்பட்ட கொசு வலைகளை பயன்படுத்தலாம். விலை மலிவான கொசுவலைகளை பயன்படுத்தினால் போதிய காற்றோட்டம் இல்லாமல் மூச்சுவிடுவதில் பிரச்சனை ஏற்பட்டு தூக்கம் பாதிக்கும். மட்டமான நிறமூட்டிகளை பயன்படுத்தி தயாரிக்கும் கொசு வலைகளை பயன்படுத்தினால் அதில் இருந்து வரும் ஒருவித துர்நாற்றம் தலைசுற்றல், வாந்தி, மயக்கத்தை ஏற்படுத்தும்.

# ஸ்பைஸி காளான் பிரியாணி செய்வது எப்படி?

அசைவத்திற்கு இணையான மாற்று காளான். காளான் வைத்து ஸ்பைஸியான பிரியாணியை எளிய முறையில் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள்:** பாசுமதி அரிசி ஒரு கப், நறுக்கிய பட்டன் காளான் ஒரு கப், தக்காளி, வெங்காயம் தலா 2, ரெட் சில்லி சோஸ், சோயா சோஸ் தலா ஒரு டேபிள்ஸ்பூன், மிளகு சீரகத்தூள் ஒரு டீஸ்பூன், இஞ்சி சிறிய துண்டு, உடைத்த முந்திரி ஒரு டேபிள்ஸ்பூன், எண்ணெய் நெய் கலவை, உப்பு தேவையான அளவு.

***செய்முறை:*** இஞ்சி, தக்காளி, வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். அரிசியைக் கழுவி, 10 நிமிடங்கள் ஊறவைத்து, நீரை வடிக்கவும். சட்டியில் சிறிதளவு நெய் விட்டு அரிசியை சில நிமிடங்கள் வறுத்துக்கொள்ளவும்.

தக்காளியைச் சுடுநீரில் சிறிது நேரம் போட்டு எடுத்து, தோலை உரித்து விட்டு மிக்ஸியில் போட்டு அரைத்து கொள்ளவும். குக்கரில் எண்ணெய் நெய் கலவையைச் சேர்த்து, சூடானதும் பட்டன் காளான் சேர்த்து... இஞ்சி, வெங்காயம், முந்திரி சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் இதனுடன் சில்லி சோஸ், சோயா சோஸ், உப்பு, மிளகு சீரகத்தூள் சேர்த்துக் கிளறவும். அடுத்து அதில் தக்காளிச் சாறு ஊற்றி பச்சை வாசனை போன வதக்கவும்.

அடுத்து தேவையான நீர் சேர்த்துக் கொதி வந்ததும் அரிசியைப் போட்டுக் கிளறி, குக்கரை வெயிட்' போட்டு மூடி, 2 விசில் வந்த உடன் நிறுத்தவும். ஆவி விட்டதும் குக்கரைத் திறந்து, கிளறி சூடாகப் பரிமாறவும். சூப்பரான ஸ்பைஸி மஷ்ரூம் பிரியாணி ரெடி.



# கூந்தலை சீவும் போது யோசிக்க வேண்டியவை

தலைக்கு குளித்தவுடன் கூந்தலை சீவ வேண்டாம். ஏனெனில் கூந்தலானது ஈரமாக இருக்கும் போது சீவினால் முடியில் முடிச்சுகள் மற்றும் சிக்குகள்

அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சீப்பை கொண்டு சீவினால் முடியானது கொத்தாக வேரோடு தான் வரும்.

- கூந்தலை சீவும் போது மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி நன்கு சீவ வேண்டும். கூந்தலும், தலைச்சருமமும் ஒன்றல்ல. ஆகவே கூந்தலை சீவும் போது தலைச்சருமத்தில் நன்குபடும்படி சீவினால் தலைச்சருமத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து மயிர்க்கால் நன்கு வளரும். இவ்வாறு தினமும் செய்தால் கூந்தலானது நன்கு ஆரோக்கியமாக வளரும்.
- கூந்தலை முதலில் சீவ ஆரம்பிக்கும் போது கூந்தலின் முனையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஏனென்றால் கூந்தலில் முடிச்சுகளானது முனையிலேயே அதிகமாக இருக்கும். ஆகவே அப்போது முதலில் இந்த முடிச்சுகளை அகற்றிப் பின் ஆரம்பித்தால் கூந்தல் உதிராமல் இருக்கும். இல்லையென்றால் கூந்தல் வேரோடு தான் வரும்.
- மேலும் கூந்தலை இறுக்கமாக கட்டக் கூடாது. நிறையபேர் இந்த மாதிரியே கூந்தலை கட்டுகின்றனர். கூந்தலை போனிடைல் போடக்கூடாது. அப்படி போட்டால் முடியானது இடையில் கட் ஆகி உதிரும்.



# அலுவலகத்தில் ஆண்களுடன் பழகுவது எப்படி?

இன்றைய காலகட்டத்தில் அலுவலக பணிகளில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வேலை பார்ப்பது தவிர்க்க இயலாத விஷயமாக இருக்கிறது. அத்தகைய சூழலில் பெண்கள் பல்வேறு விதமான சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. சக ஆண் ஊழியர்களை எப்படி அணுகுவது, எப்படி பழகுவது, பழக்கத்தின் எல்லை எதுவரை இருக்கலாம்? என்பது போன்ற விஷயங்களில் விழிப்புடன் இருப்பது பிரச்சினைகள் வராமல் தங்களை தற்காத்து கொள்ள உதவும்.



- ஆண் ஊழியர்களிடம் பணி சார்ந்த விஷயங்களை பகிர்ந்து கொண்டிருக்கும்போது பேச்சு வேறு எதிலும் திசை திரும்பாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். தேவையில்லாத பேச்சுக்களின் தொடக்கமே பிரச்சினைகள் உருவாக அடித்தளமாக அமையும்.
- முக்கியமாக உங்களுடைய குடும்ப விஷயங்களை பகிர்ந்து கொள்ள ஆர்வம் காட்டாதீர்கள். அவர்கள் அனுதாபத்தோடு கேட்பதாக தோன்றினாலும், மனம் திறந்து பேசிவிட முயற்சிக்காதீர்கள். ஆழ்மனதில் அது போன்ற எண்ணம் தோன்றும்போதே உங்களின் உள்ளுணர்வுகளை நீங்களே கட்டுப்படுத்தி தடை போட்டு விடுங்கள்.
- பொதுவாகவே நட்புரீதியாக யாராவது பழக தொடங்கிவிட்டாலே தங்களை பற்றிய விஷயங்களை பகிர்ந்து கொள்ளும் எண்ணங்கள் உதயமாவது இயல்புதான். அது உங்களுடைய சுய கவுரவத்திற்கு எந்தவகையிலும் பங்கம் விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- குடும்பத்தில் எத்தகைய பிரச்சினைகள் எழுந்தாலும் அதன் தாக்கம் அலுவலகத்தில் பிரதிபலித்துவிடக் கூடாது. உங்களின் முகமே பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாக இருந்துவிடக்கூடாது. ஒருபோதும் குடும்ப பிரச்சினைகளுக்கு தீர்வு காண உடன் பணிபுரியும் ஆண் ஊழியர்களிடம் ஆலோசனை கேட்க முயலாதீர்கள். அதனை அவர்கள் தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு உங்களுடன் உரிமையுடன் பழக ஆரம்பித்துவிடக் கூடும்.
- அலுவலகம் என்பது பணிபுரிவதற்கான இடம் மட்டுமே, உங்களது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளையோ, குடும்ப விஷயங்களையோ அசைபோட ஏற்ற இடம் அல்ல.
- உங்களுடைய பொருளாதார நிலைமையையும் உடன் பணிபுரியும் ஆண் ஊழியர்களிடம் கூறாதீர்கள். அவர்கள் உதவி செய்ய முன்வந்து உங்களுடன் நட்பை வலுப்படுத்த முயற்சிக்கக்கூடும். அது நீங்களே உங்கள் குடும்ப விஷயத்தில் மற்றவரை மூக்கை நுழைக்கவிட்ட கதையாகிவிடும்.
- அலுவலக பணியில் நெருக்கடி ஏற்படும்போது அதனை நிதானமாக கையாளுங்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசரப்படாமல் பிரச்சினையின் வீரியத்தை குறைக்கும் வகையில் எச்சரிக்கையுடன் நடப்பது அவசியம்.
- சக ஆண் ஊழியர்களுடன் கை குலுக்குதல், வெளி இடங்களில் சகஜமாக பழகுதல், வாகனத்தில் ஒன்றாக செல்லுதல் போன்ற விஷயங்கள் மற்றவர்களால் கண்காணிக்கப்படுபவை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். ஆண் ஊழியர்களுடன் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எதற்கெடுத்தாலும் கைகொடுப்பது, தொட்டுப்பேசுவது கூடாது.
- வெளி இடங்களில் எதேச்சையாக சந்திக்க நேரும்போது புன்னகைப்பது, நலம் விசாரிப்பது தவறல்ல. தேவையில்லாத விஷயங்களை பற்றி பேசி அரட்டை அடிப்பது, மற்றவர்கள் கவனத்தில்படும் அளவிற்கு உங்கள் பேச்சு, செயல், நடவடிக்கை அமைவது கூடாது.
- சக ஆண் ஊழியர்களிடமோ, மற்ற ஆண்களிடமோ பேசும்போது கண்ணைப் பார்த்துப் பேசுங்கள். அவர்களும் உங்கள் கண்ணை பார்த்துதான் பேசுகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.
- உங்களின் திறமைகள் குறித்தோ, உடுத்தும் ஆடை பற்றியோ பாராட்டும் போது நன்றி தெரிவியுங்கள். தேவையில்லாமல் முக பாவனைகளை வெளிப்படுத்தாதீர்கள். வெட்கப்படுவதையோ, பெருமிதம் கொள்வதையோ, தொடர்ந்து அவர்களிடம் பாராட்டுகளை எதிர்பார்ப்பதையோ தவிருங்கள்.
- சக ஊழியர்கள் தங்களது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது மட்டம் தட்டி பேசுவதையோ அனுமதிக்காதீர்கள். அவர்களின் பேச்சில் வெளிப்படும் வார்த்தைகள், கண்களில் தெரியும் மாற்றங்கள் இவை இரண்டையும் வைத்தே அவர்களின் மதிப்பை எடை போட்டு பார்த்து அதற்கேற்ப பழகுங்கள்.
- சக ஆண் ஊழியரின் பேச்சிலோ, நடத்தையிலோ தவறான அணுகுமுறை தென்பட்டால் உடனே எதிர்ப்பு தெரிவித்துவிடுங்கள். இல்லையென்றால் அதனை சம்மதமாக எடுத்துக்கொண்டு உங்களிடம் உரிமையுடன் பழக தொடங்கிவிடக்கூடும்.
- பணி இடத்தில் பெண்களுக்கு சாதகமான சட்டங்களை பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அது அதிக பாதுகாப்பை ஏற்படுத்தி தரும்.

# விதைத்தது இராணுவம்... அறுப்பது மக்கள்!

அதிர்ச்சி ரிப்போர்ட்





வன்னிமது

முப்பது வருட கால யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் முடிவடைந்து விட்டது. இன்னும் அதன் எச்சங்கள் தமிழர் பிரதேசங்களிலும், தமிழ் மக்கள் உடலிலும் மனங்களிலும் காணப்படுகின்றது. இவ் போரின் எச்சங்களாக செல்களும், துப்பபாக்கி ரவைகள், காவலரன்கள், என பல எச்சங்கள் தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் சிதறிக்கிடந்தாலும் கால மாற்றங்களில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் மாற்றமடைந்து அச்சமற்ற வாழ்விடங்களாக மாற்றமடைந்துள்ளன.

ஆனால் வவுனியா வடக்கே மகிழங்குளம் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட விளக்கு வைத்தகுளம் கிராமத்தின் நிலை அவ்வாறில்லை. இங்கு காணப்படும் ஒரு வித புல்லினால் சிறுவர் முதல் பெரியவர் வரை அச்சநிலையிலேயே காணப்படுகின்றனர்.

இந்தியாவை தாயகமாக கொண்ட ஒருவகை புல்லினமான கினிப்புல். 2002ம் ஆண்டுக்கு முன்னர் இக்கிராமத்தில் இப்புல்லினத்தின் சுவடே இல்லாத போது தற்போது இப்புற்கள் இக்கிரமத்தை ஆட்கொல்லி போல் சூழ்ந்துவிட்டது. 1997ம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக இங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடத்தினை விட்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு இடம் பெயர்ந்தனர்.


இதன் பின்னர் இப்பகுதி சூனிய பிரதேச பகுதிகளாகவும் இலங்கை இராணு வத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான எல்லைப் பகுதிகளாகவும் மாற்றமடைந்தன. அக்காலப்பகுதியில் இலங்கை இராணு வத்தினால் தமது எல்லைப்பகுதியான தள்ளாடி முதல் சிலோன் தியேட்டர் (மணல் ஆறு) வரையான 240 கிலோ மீற்றர் வரை காற்றின் மூலம் அதிகமாக பரவக்கூடிய இவ் புல்விதையினை விதைத்தனர். இப்புல்லினை விதைத்து சிறு காலத்தின் பின் பற்றைக்காடுகளாக வளர்ந்த இப்புற்களினை வடக்கு நோக்கி வீசும் சோளக்காற்று காலமான ஆறாம், ஒன்பதாம் மாதங்களில் எரியூட்டுகின்றனர். இதனால் விடுதலைப்புலிகளின் எல்லைப்பகுதிகள் வரை இவ் நெருப்பு காற்றின் மூலம் பரவி விடுதலைப்புலிகளினால் இராணுவம் முன்னேறாமல் தடுப்பதற்காக விதைக்கப்பட்ட மிதி வெடிகளும், கிளை மோர்களும் இவ் நெருப்பு மற்றும் வெப்பத்தினால் வெடிக்கின்றன.

மேலும் நெருப்பினால் விடுதலைப் புலிகளின் அரணின் இயற்கை பாதுகாப்பு மற்றும் ஏனைய பாதுகாப்பு இல்லாமல் போகின்றது. இதனால் இராணுவ நிலைகளில் இருந்து விடுதலைப்புலிகளின் நிலைகளின் நடமாட்டங்களை இலகுவாக அவதானிக்க ஏதுவாகின்றது. அத்துடன் இதன் பின்னர் ஒரு கிலோ மீற்றருக்கு ஆறு பேர் என எல்லைப்பதுகாப்பில் இடுபடும் போராளிகள் நடமாட்டங்களை துள்ளியமாக அவதானித்து சினைப்பர் தாக்குதல் மேற்கொள்கின்றனர். இதனால் இப்பகுதி மூலமாக இராணுவம் சுலபமாக விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுக்குள் நுழைய முடியும். இந்நோக்கிற்காக விதைக்கப்பட்ட இப்புல் தற்போது இக்கிராமம் முழுவதும் பரவி காணப்படுகின்றது.

1997ம் ஆண்டு யுத்தத்தினால் இடம் பெயர்ந்த இக்கிராம மக்கள் 2011ம் ஆண்டு மீள்குடியேறினார்கள். தற்போது அறுபது குடும்பங்கள் வரை வாழும் மக்களிற்கு பெரும் பிரச்சனை இப்புல். இப்புல்லினை களைநாசி விசிறி அழிக்க முயற்சித்து பலனில்லை அத்துடன் எரித்தும் இதற்கு பலன் கிடைக்கவில்லை. நாளாந்தம் ஆயிரம் ரூபா கூலித்தொழில் மூலம் ஈட்டும் பணத்திலேயே இக்கிராம மக்கள் வாழ்கின்றனர். இதனை தாண்டி தங்களது வயல்களை செய்து முன்னேறலாம் என்ற நோக்கில் நெற்களை விதைத்தால் நெல் வளரும் முன்னே இப்புல் செழித்து வளர்ந்து காணப்படுகின்றது. இதுதான் இவ்வாறென்றால் இப்புற்களிற்குள் வாழும் எலிகள் பல்கிப்பெருகி தோட்டம் செய்பவர்களிற்கு பெரும் தலைவலியாக இருக்கின்றது. தானியங்களை காலையில் விதைத்தால் விடியும் போது ஒன்று கூட இருப்பதில்லை. குறிப்பாக கடந்த சில மாதங்களிற்கு முன்னர் 2500 கெக்கறி விதைகள் விதைக்கப்பட்டு இரவிரவாக காவல் இருந்த போதும் விடிய காலை ஒரு விதையும் இல்லாமல் இருப்பதை கண்டு அதிர்ந்துள்ளனர்.

அத்துடன் வீதிகள் உட்பட ஊரில் ஓர் இடம் இல்லாமல் பரவி காணப்படும் இப்புல்லினால் பல சமூக விரோத நடவடிக்கைகளுக்கு ஏதுவாக கூடியதாக இருக்கின்றது. ஒயந்தை மற்றும் பன்றிகெய்தகுளம் போன்ற பாடசாலைகளிற்கு சென்று விட்டு வீடு வரும் தமது பிள்ளைகள் வீடு வரும் வரை வயிற்றில் நெருப்பை கட்டிக்கொண்டு பெற்றோர் இருக்க வேண்டியுள்ளது. நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற புங்குடு தீவு வித்தியா உட்பட பல துஸ்பிரயோக சம்பவங்கள் போல் தமது பிள்ளைக்கும் ஏற்பட்டு விடுமோ என்று எண்ணுகின்றனர். ஏன் எனில் வீதி இரு பக்கம் உட்பட ஊர் முழுவதும் புற்களின் ஆக்கிரமிப்பு இவ்வாறான செயற்பாட்டை செய்ய ஏதுவாக்கிறது. அத்துடன் மழை காலங்களில் வீதியை இப்புல் மூடி வளர்ந்து விடும். இவ்வாறு இருக்கிறது இவர்களின் நிலை. இப்புல்லின் தாக்கம் ஒருபுறம் என்றால் மறுபுறம் காட்டு யானைகளின் தாக்கம். இக்கிராமம் எங்கும் ஒய்யாரமாக திரியும் காட்டு யானைகளால் மக்கள் அதிகாலை மற்றும் மாலை ஆகிவிட்டால் வெளியே வருவதற்கு அஞ்சுகின்றனர்.









எனது மைத்துனியை 3 வருடமாகக் காதலிக்கின்றேன். அவரும் என்னைக் காதலிக்கின்றார். இப்போது அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கின்றார்கள். அவளும் என்னை உடனடியாகத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துகிறாள். வீட்டிற்குத் தெரியாமல் ஓடிப்போய் திருமணம் செய்வது பற்றிப் பேசுகின்றாள். இந்த விடயத்தை எப்படிக் கையாள்வது?

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

**க.விதுர்ஸன் (வயது 25)**
**வட்டக்கச்சி**

**நான் பட்டப்படிப்பை முடித்து தற்போது வேலை தேடிக்கொண்டிருக்கின்றேன். எனது மைத்துனியை 3 வருடமாகக் காதலிக்கின்றேன். அவரும் என்னைக் காதலிக்கின்றார். நமக்குள் இரு தடவை உடல் ரீதியான உறவு நிகழ்ந்துள்ளது. ஆனால் எம் இரு வீட்டாரும் தற்போது சண்டை போட்டுப் பிரிந்திருக்கின்றனர். இப்போது அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கின்றார்கள். அவளும் என்னை உடனடியாகத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துகிறாள். வீட்டிற்குத் தெரியாமல் ஓடிப்போய் திருமணம் செய்வது பற்றிப் பேசுகின்றாள். இந்த விடயத்தை எப்படிக் கையாள்வது? என்ன முடிவெடுப்பது?**


பதில்: அன்புத் தம்பி! ஐந்து சந்தியில் நின்று பாதை தெரியாமல் திக்கு முக்காடுகிறீர் போலும். இது ஒரு சின்னப் பிரச்சினை. உறவுகளுக்குள் சண்டை வருவதும் பின் சமரசம் வருவதும் கோடை, மாரி போன்று மாறிமாறி வருவது. இன்று பிரிந்திருக்கும் உங்கள் உறவுகள் நாளை ஒரு மண வீட்டிலோ அல்லது மரண வீட்டிலோ ஆரத் தழுவிக் கொள்வார்கள். அதற்கான காலம் எப்பொழுதும் கனியலாம். அதை விடுங்கள். இப்பொழுது உங்கள் காதல் திருமண பந்தமாகி வாழ்க்கையைத் தொடர்வதற்கு உசிதமான வழிகளை ஆராய்வதுதான் பொருத்தமான வழி. உங்கள் காதல் உறுதியானது எனின் எந்த புறக் காரணிகளும் அதை உடைத்திட முடியாது.

எனவே நீங்கள் இருவரும் தீர்க்கமான முடிவுடன் தொடர்ந்து காதல் செய்யுங்கள். உங்கள் காதலி மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும். ‘மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கப் பாயும்’ என்பது போல் உங்கள் இருவரினதும் நேர்முகமான நடத்தைக் கோலங்கள் உங்கள் இரு வீட்டாரினதும் உங்கள் தொடர்பான பார்வையில் அல்லது பங்களிப்பில் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும். உங்கள் வயது மற்றும் உங்கள் இருவரினது சமூக நிலை, உங்கள் குடும்ப நிலை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது திருமணம் என்பது உங்களுக்கு இப்போது அவசியமான ஒன்று அல்ல என்றே தோன்றுகின்றது.

உமது காதலியின் சொல்லைக் கேட்டு ஓடிப்போய் திருமணம் செய்வது ஒரு பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டு ஒன்பது பிரச்சினையை உருவாக்கிய கதையாகி விடும். குறிப்பாகப் பிரிந்திருக்கும் உங்கள் குடும்பத்தின் பிரிவை இன்னும் நீண்ட காலத்திற்கு நீட்டி விடலாம். ஏன் வன்முறைகள் கூட இடம்பெறலாம். எனவே பொறுப்புடன் பொறுமையாக அழகிய காதல் காலத்தை ரசித்து திருமண பந்தத்தை நோக்கி ஆறுதலாக அடி எடுத்து வைப்பதே உங்கள் பிரச்சினைக்கான பொருத்தமான தீர்வாக அமையும். எனவே அமைதியாக முடிவெடுத்து அதைச் செயற்படுத்துங்கள். வெற்றி நிச்சயம்.

**பிரசாந்த் (வயது 24)**
**பருத்தித்துறை**

**நான் க.பொ.த உஷ்த படித்துள்ளேன். கடந்த 4 வருடங்களாக நான் ஆன்மீக வழிகாட்டல் நிறுவனம் ஒன்றுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வருகின்றேன். அங்கு நான் தியானம் செய்யப் பழகி இப்போது அதிக நேரத்தை தியானம் செய்வதற்காக இந் நிறுவனத்திலேயே செலவிடுகின்றேன். அப்படியான நேரங்களில் நான் மிக மன மகிழ்வுடன் இருப்பதாக உணர்கிறேன். இப்போது எனது குடும்பத்தாருடன் அதிகளவு தொடர்புகளைக் குறைத்து தனிமையில் மகிழ்வாய் இருக்கின்றேன். எனது எதிர்காலத்தை இவ்வாறே ஆன்மீக வழியில்தொடர முடிவெடுத்துவிட்டேன். ஆனால் எனது குடும்பத்தினர் இதற்குச் சம்மதிக்கவில்லை. இடையிடையே மனம் குழம்பிப் போனது போலும் மனம் வெறுமையானது போலும் உணர்கிறேன். எனது குடும்பத்தினர் சாதாரண இளைஞனைப்போல் திருமணம் முடித்து தொழில் செய்து குடும்பம் நடத்துமாறு வற்புறுத்துகின்றனர். ஆனால் நான் தனிமையில் இறை தியானம் செய்யவே**



**விரும்புகின்றேன். எது சரி, எது பிழை என்று தெரியாமல் குழம்பிப் போயுள்ளேன். என்னைக் கொஞ்சம் தெளிவுறுத்துங்கள்?**

பதில்: பெருமதிப்புக்குரிய தம்பி! உங்கள் கேள்வி மடலைப் பார்த்தபோது என்னை அறியாமலேயே உங்கள் மீது பக்தி கலந்த மரியாதை உணர்வு எழுகின்றது. உங்களின் நிலையை நான் பூரணமாக விளங்கிக் கொள்கின்றேன். உண்மையில் மனித வாழ்வு என்பது ஒரு வட்டம். தொடங்கிய இடத்திலேயே வந்து முடியும். ஏன்? எதற்கு? எதற்காக? என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் அம்மாவிடம் இருந்து புவியில் விழுந்து, அதன் பிறகு கிரிக்கெட் விளையாட்டில் ஏன் பந்தை எறிகிறார்கள்? அதை ஏன் மறித்து அடிக்கின்றார்கள்? பிறகு ஏன் அதைக் கலைத்துப் பிடித்து மீண்டும் எறிந்தவரிடமே எறிகின்றார்கள்? விடை தெரியாமலே உலகம் எல்லாம் கோடி கொடுத்து விளையாட ஆவென வாய் பிளந்து கை கொட்டி மக்கள் மகிழ்கிறார்களே. கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் மனநோயாளிகளின் செயலுக்கும் இதற்கும் பெரிதாக எந்த வேறுபாடும் இல்லை. இதேபோல் தான் எமது வாழ்வும். ஏன் பிறந்தோம்? ஏன் படிக்கிறோம்? ஏன் உழைக்கிறோம்? ஏன் திருமணம் முடிக்கிறோம்? ஏன் பிள்ளைகள் பெறுகிறோம்? இவ்வளவு வேலைத் திட்டங்களுடன் வயதும் தன் பாட்டிற்கு உயர்ந்து சென்று முதுமை, நோய், மருந்துகள் இறுதியில் திடீரென ஒருநாள் நெஞ்சுருகி மூச்சுத் திணறி கண் சொருகி என்னென்னவோ எல்லாம் சொல்ல வேண்டும் என மனது துடிக்க, வாய் சொல்ல முடியாமல் தவிக்க, கையால் சைகை காட்ட முயற்சிக்க, கையும் உதவிட மறுக்க, கண்கள் மட்டுமே ஏதேதோ எல்லாம் பார்வையால் உணர்த்த உயிர் பிரிகின்றது. நான்கு நாள் எல்லோரும் துன்பம் கொண்டாடி ஐந்தாம் நாள் எல்லாம் மறந்துபோய் விடுவர். இதைத்தான் சித்தர் பாடல் ஒன்று ‘பேரினை நீக்கி பிணமென்று பெயரிட்டு சூறையம் காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு நீரிலே மூழ்கி நினைப்பொழிந்தாரே’ என்று கூறுகின்றது.

உண்மையில் பிறந்து வாழ்வில் மகிழ்வுக்காக நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் போனஸாக அதைவிடப் பெரிய துன்பம் பின் தொடர்கின்றது. ஆனால் நாம் அதை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. வாழ்வின் உச்சத்தை பிரம்மப்பிரயத்தனம் செய்து தொட்டவன் கூட முடிவில் அனைத்தையும் விட்டுத்தான் போகின்றான். தொட்டதெல்லாம் விட்டுத்தான் போகும் என்ற வாழ்க்கையில் தொடுவது அறிவார்ந்த செயலாகுமா என்பது கேள்விக்குறிதான். எனவே சாதாரண சம்சாரியம் செய்பவனும் சரி, வாழ்வு முழுதும் அதர்ம வழியில் செல்பவனும் சரி, கடவுளெனும் பெயரால் களவு செய்பவனும் சரி, உண்மையான ஆன்மீக வழியில் செல்பவனும் சரி, இறப்பெனும் இடத்தை அடைவது நிச்சயம். அதற்கிடையில் அவர்கள் செல்லும் பாதைகள்தான் வேறு வேறு. உங்களைப் பொறுத்த வரை நீங்கள் தெரிவு செய்த பாதை சரியானதே. இடையில் மனம் மாறி எல்லாவற்றையும் குழப்பி விடாதிருப்பீர்களாயின் தொடர்ந்து செல்லுங்கள்.

# பங்குபெற்றாத பாடசாலை வெற்றிபெற்றது!

## சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ் தினப் போட்டி

கரிகாலன்

வடமாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் மற்றும் அதிகாரக் குற்றச் சாட்டுக்கள் சூடு பிடித்துள்ள நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் நடைபெற்ற வடமாகாண தமிழ் தினப் போட்டியும் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது. வடமாகாணம் கல்வித் துறையில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதற்கு இவ்வாறான செயற்பாடுகளும் காரணம் என்கின்றனர் சிலர். அந்த வகையில் வடமாகாண தமிழ் தினப் போட்டியில் உண்மையில் என்ன தான் நடந்தது என தீபம் அலசிய போது கிடைத்த அதிர்ச்சி தகவல்களே இவை.

ஆண்டுதோறும் நடைபெறும் அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டிகள் இந்த ஆண்டும் நடைபெற்று வருகின்றன. 2017ஆம் ஆண்டிற்கான போட்டிகள் வடமாகாண மட்டத்தில் கடந்த 03, 04ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.


தமிழ் மொழியின் தொன்மையையும், அதன் அழகையும், இலக்கிய நயத்தையும், முத்தமிழின் சிறப்பையும், நாட்டுப்புறக் கலையின் நயத்தையும் தொன்றுதொட்டு தமிழர் பரப்பில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கூத்து, வில்லுப் பாட்டு, நாட்டார் பாடல்கள், தனி நடனம், குழு நடனம், தனிஇசை, குழு இசை, நாடகம் போன்ற பல பிரிவுகளாக தமிழ்தினப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். பாடசாலை மாணவர்களை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடவைப்பதற்கும் துறைசார்ந்த ஆசிரியர்களின் ஆக்கத் திறனை மாணவர்களோடு பகிர்ந்துகொள்வதற்கும் இத்தகைய நிகழ்வுகளும் இதற்காக நடாத்தப்படும் போட்டிகளும் மிகவும் பயனுள்ளவை என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

வடமாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலிருந்தும் குறிப்பாக போரின் உச்சகட்ட இழப்புக்களைச் சந்தித்த வன்னிப் பிராந்தியத்திலிருந்தும் ஏராளமான நிகழ்ச்சிகள் போட்டிக்காகத் தயார்படுத்தப்பட்டிருந்தன. இதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் முதலில் பாராட்ட வேண்டும்.

தலைப்புகளின் உட்பொருளை சரியாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப முத்தமிழிலும் நிகழ்ச்சிகளை ஆக்கி, வடிவமைத்து, மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து, வலய மட்டத்தில் வெற்றியீட்டி, மாகாண மட்டம்வரை சென்ற அனைவரையும் பாராட்டவேண்டும். இதில் ஆசிரியப் பெருமக்களின் பங்களிப்பு மிகவும் மகத்தானது. தங்களது கற்பித்தல் நடவடிக்கையுடன், இதனையும் சேர்த்து அவர்கள் கடந்த சிலமாதங்களாக ஓய்வின்றி உழைத்து வருகின்றனர்.

2017ஆம் ஆண்டிற்கான மாகாண மட்டப் போட்டிகள் தமிழர்களின் கலாசார தலைநகரமான யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதும் சிறப்பிற்குரியது. ஆனால் அந்த கலாசார தலைநகரம் தனது கலாசார மரபுகளையும் மாண்புகளையும் சிதைத்துவிட்டதாக போட்டியில் பங்குபற்றிய மாணவர்களும் ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர். தமது பிள்ளைகளின் திறமையையும், ஆசிரியர்களின் முயற்சியையும் அதற்குக் கிடைத்த அங்கீகாரத்தையும் அறிவதற்காகக் காத்திருந்த பெற்றோர்களும் விசனமடைந்துள்ளனர். இவர்கள் பொறாமையினாலோ அல்லது தோல்விக்கான சமாளிப்பாகவோ தமது விசனத்தை வெளிப்படுத்தவில்லை என்பதும் அவர்களுடன் உரையாடியபோது தெரியவருகிறது.

உதாரணமாக போட்டிக்கான நடுவர்கள் போட்டி நடைபெற்றவேளையில் நித்திரை கொண்டதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். போட்டி நடுவர்களிடம் மதிப்பெண்களை மட்டும் குறிப்பிட்டுக் கொடுக்கும்படி மாகாண கல்விப்பணிமனை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. வழமையாக போட்டி நடுவர்களே போட்டிகளை மதிப்பீடு செய்து மதிப்பிட்டு, புள்ளிகளை வழங்கி, சராசரி மதிப்பெண்ணையும் வழங்குவர். ஆனால் இங்கு அந்த முறை மீறப்பட்டுள்ளது.




வலய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற போட்டிகள் அனைத்தும் மாகாணத்திற்குச் சிறந்த படைப்புகளையே அனுப்ப வேண்டும் என்பதில் குறியாக இருந்து மிகுந்த அவதானத்துடன் ஆக்கங்களைத் தெரிவுசெய்வதை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படுகின்றன. வலய மட்டத்தில் நடைபெறுகின்ற போட்டிகளின் பெறுபேறுகளில் இன்றுவரை பாரிய குழப்பங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளுக்கு என்று சில நிகழ்ச்சிகள் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டு அவையே கடந்த சில ஆண்டுகளாக தேசிய மட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன என்ற குற்றச் சாட்டும் நிலவுகிறது.

நாடகத்தைப் பொறுத்தவரையில் கடந்த நான்கு ஆண்டுகளாக யாழ் ஸ்கந்தவரோதயா பாடசாலையே தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. வில்லுப் பாட்டைப் பொறுத்தவரையில், வட்டுக் கோட்டை இந்து கல்லூரியே கடந்த நான்கு ஆண்டுகளாக தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. இந்த ஆண்டு நடைபெற்ற நாட்டார் பாடல் மற்றும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

வில்லுப்பாட்டைப் பொறுத்தவரையில், பத்து குழுக்கள் கலந்துகொண்டன. இவை நண்பகல் 12மணிக்கே முடிந்துவிட்டன. ஆனால் இதற்கான பெறுபேறுகள் மாலை 5மணிக்கே வெளியிடப்பட்டன. இதற்குப் பின்னர் நடைபெற்ற ஏனைய போட்டிகளின் பெறுபேறுகள் இதற்கு முன்னரே வெளியிடப்பட்டுவிட்டன என்பது கவனிக்கத்தக்கது.

வில்லுப்பாட்டிற்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டபோது இந்த ஆண்டும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி முதலிடம் பிடித்துள்ளதாக அறிவிக்கப் பட்டது. இரண்டாவது இடத்தைப் பொறுத்தவரை யாழ் இந்துக்கல்லூரியின் குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிட்டு ஹாட்லி கல்லூரியின் பெயர் பதிவு செய்யபட்டிருந்தது. இதில் இரண்டாவது இடத்தை வென்றதாக அறிவிக்கப்பட்ட ஹாட்லி கல்லூரி போட்டியில் கலந்துகொள்ளவே இல்லை என்பதுதான் இங்கு விசேடம். இந்துக்கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து இந்துக் கல்லூரி இரண்டாம் இடம் பிடித்ததாக அறிவித்து வேறொரு பாடசாலையின் குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிட்டிருந்தனர். இந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய இந்துக் கல்லூரியினர் தாம் இந்த போட்டியின் பெறுபேறுகளை ஏற்கமாட்டோம் என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் தமக்கான சான்றிதழ்களையும் ஏற்க மறுத்துவிட்டனர்.

அவர்களைச் சமாதானப் படுத்தும் விதமாக மீண்டும் ஒருமுறை போட்டியை நடத்தலாமா என்றுகூட மாகாண கல்விப்பணிமனை யோசித்ததாகவும் ஒரு தகவல். இந்நிலையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு மூன்றாம் இடம் கிடைத்தது.

யாழ் வட்டுக்கோட்டை மாணவர்கள், ஏனைய மாணவர்களிடம் எப்படியும் எங்களுக்குத்தான் முதலிடம். நீங்கள் உங்கள்பாட்டிற்கு பாடிட்டுப் போங்கள் என்று போட்டி தொடங்கும் முன்பே கூறியுள்ளனர். யாழ் இந்து கல்லூரி ஆசிரியர்கள் இம்முறை தமக்கு முதலிடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்ததாகவும் முடிவு தமக்கு ஏமாற்றமளிப்பதாகவும் கூறினர். மொத்தத்தில் ஏனைய மாவட்ட படைப்புக்களை யாரும் அங்கீகரிக்கத் தயாராகவே இல்லை என்பதும் வேறு வழியின்றியே ஏனைய மாவட்டங்களின் சில நிகழ்ச்சிகளுக்கு முதலிடம் வழங்கப் பட்டுள்ளது என்றும் போட்டிக்கான ஆயத்த வேலைகளைச் செய்து இரவு பகலாக உழைத்தவர்கள் அங்கலாய்த்ததைக் காணமுடிந்தது.

மாகாணமட்டப் போட்டிகளின் நடுவர்களாக வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்களையும் கலந்து நியமித்து அவர்களை சுயமாக இயங்கவிட்டிருந்தால் இத்தகைய குழப்பங்களைத் தவிர்த்திருக்கலாம் என்பது பொதுவான கருத்தாக இருந்தது.

தேசிய ரீதியில் நடைபெறுகின்ற தமிழ் தினப் போட்டியில் வடக்கு மாகாணத்தில் இருந்து செல்பவர்களே அதிகம் வெற்றியீட்டியது கடந்த கால வரலாறு. இதனால் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளிளுடன் போட்டியிட்டு வென்று விட்டால் தேசியத்தில் ஒரு இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் திட்டமிட்டு சில பாடசாலைகளை முன்னுறுத்த முயல்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும், நேர்மையையும், நீதிதவறாமையையும் சமூக பண்பாட்டு விழுமியங்களையும் கட்டிக் காக்க வேண்டிய கல்விச் சமூகம் இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக எதைச் சாதிக்க நினைக்கிறது? எதிர்கால சந்ததிக்கு என்ன செய்தியை சொல்ல நினைக்கிறது? யாழ்ப் பாணத்திற்குத்தான் முன்னுரிமை. யாழ்ப்பாணத்தினர் தான் பெரிய நிகழ்ச்சிகளில் தேசியரீதியில் பங்கெடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால் பின் எதற்கு ஏனைய மாவட்டங்களை அழைக்க வேண்டும்? நேர்மையான திறமையின் மூலம் தேசிய மட்டத்திற்குச் செல்லாமல் பின்கதவு மூலம் செல்வதனால் இவர்கள் எதைச் சாதிக்க நினைக்கின்றனர்?

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும், நேர்மையையும், நீதிதவறாமையையும் சமூக பண்பாட்டு விழுமியங்களையும் கட்டிக்காக்க வேண்டிய கல்விச் சமூகம் இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக எதைச் சாதிக்க நினைக்கிறது?**

பாடசாலை மத்தியில் தமிழ் இலக்கிய உணர்வை ஊட்டி வளர்ப்பதற்காகவும் தமிழின் தொன்மையையும், அதன் அழகையும் பெருமையையும் தேசிய மட்டத்தில் எடுத்தியம்புவதற்காக நடத்தப்படும் இத்தகைய போட்டியில் அதனைத் தூக்கி நிறுத்துவதற்கான ஆக்கங்கள் அவசியமா? அல்லது குறுக்குவழி மூலம் பரிசைப்பெறுவது அவசியமா? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. இவை உண்மை எனில், மாணவர்களைத் தெரிவு செய்த ஆசிரியர்களின் ஆக்கத்திறன் அவ்வளவு வலிமை அற்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

மொத்தத்தில் தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை எடுத்துச் சொல்வதற்காக பாடசாலை மட்டத்தில் நடத்தப்படுகின்ற இந்தப் போட்டிகள் நெறிதவறி நடப்பதன் மூலம் நாம் தவறான பாதையில் பயணிக்கிறோம் என்பது மட்டும் நிச்சயம்.







# HOME DECOR

உங்கள் வீடுகள், அலுவலகங்கள் என்பவற்றுக்கான அதி உயர் தர மற்றும் மிகவும் அழகான கேட்டின் வகைகள், சோபா உறைகள் மிக குறுகிய காலத்தில் தைத்து பெற்றுகொள்ள இன்றே நாடுங்கள்.



தற்போது புதிதாக விரிவுபடுத்தப்பட்ட அலுவலகம் ஊடாக எமது உயர் தர சேவையினை உங்களுக்கு வழங்குகிறோம்.

எமது அலுவலகத்துக்கு வருகை தந்து எமது டிசைன்களை பார்வை இடலாம்.

வெளிநாடு ஓடர்களும் குறித்த நேரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் மனதுக்கு பிடித்த டிசைன்களை நியாயமான விலைகளில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் தெரிவு Home Decor


No 18/1B, Jumma Mosque Lane,
Grand Bazzar Jaffna
Phone : 077 944 0000
Email : nasserrajeem@gmail.com

# Ciszlei

## guest house and restaurant

WIFI / TV / AC / Non AC / Double Bed rooms / Single rooms / Parking / restaurant என சகல வசதிகளுடனும் அமைந்துள்ளது.

மிகவும் இனிமையான சூழலில் உங்கள் இனிமையான உறவுகள் உடன் அதித சுவையான உணவுகளை உண்டு மகிழ இன்றே நாடுங்கள்.



வசதிகள்

1. சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்.
2. யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துஉள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக்க முடியும்
3. மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
4. உங்கள் தேவைக்கு ஏற்ப அனைத்து வகை உணவுகளும் ஓடர் செய்து பெற்று கொள்ளலாம்.

337/4B K.K.S Road maruthanarmadam
Chunnagam jaffna (near hanuman temple)
Phone : 021 224 1555 , 077 4713 319 , 076 3046 429

# LONDON METROPOLITAN COLLEGE

7ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு
தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பம்

DIPLOMA IN BEAUTY CARE — DIPLOMA IN CAKE ICING

சுயதொழில் மூலம் மற்றும் திருமணமாகி வெளிநாடு செல்வோர் தமது அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான கற்கைநெறிகள் .

நீண்டகால துறைசார் அனுபவம் மிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும்

**BEAUTICIAN COURSE CONTENTS**

- கண் புருவம் சீராக்குதல்.
- 4 விதமான தலைமுடி வெட்டுதல்.
- 20 விதமான தலைமுடி அலங்கரிப்பு. பிறைடல் மேக்கப்.
- 7 விதமான சாறி உடுத்தும் முறை. 4 விதமான பேசியல்.
- கண்ணின் மேலான கருமைக்கான தீர்வு.

Duration 3 month

**CAKE ICING COURSE CONTENTS**

- பட்டர் ஐசிங்.
- பாச்மென்ற் ஐசிங் .
- றோயல் ஐசிங் .
- பொண்டன்ஐசிங்.
- புறொஸ்டிங் ஐசிங்.
- வோட்டர் ஐசிங்.
- 10 விதமான கேக் கட்டிங் வகைகள்.
- கையினால் றோஸ் செய்தல்.

Duration 4 month

முற்றுமுழுதான பயிற்சியின் உடன் கூடிய வகுப்புகள்
ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 10-12 மாணவர் வரை மட்டுமே உள்வாங்கப்படுவர் .

குறிப்பு:- இக் கற்கைநெறியில் இணையும் மாணவர்கள் Spoken English கற்கைநெறியினையும் ... IELTS A1 (LIFE SKILL) இற்கு 50% கட்டண சலுகை வழங்கப்படும்.
( திருமணம் ஆகி வெளிநாடு செல்வோருக்கான கற்கைநெறி ).

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு 076 419 0327

LMC
LONDON METROPOLITAN COLLEGE

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்
PH NUMBER : 021 753 8395



# சூரியன்
## திருமண சேவை




பிறக்கும் மங்களகரமான
புது வருடத்தில்
அனைவருக்கும் சுபம் உண்டாகட்டும்

இல: 561, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் தொடர்பு: 077 470 1430

# Immediate vacancy

கடந்த 7 வருடகாலமாக யாழ் மாணவர்களின் ஆங்கில புலமைக்கு தன்னிகரில்லா பங்களிப்பு செய்து வரும் எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் மாதம் dutch, french, deutsch மொழி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.



சர்வதேச மொழி கற்கைநெறிகளை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.


dutch, french, deutsch மொழிகளை கற்பிக்க கூடிய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

தங்கள் CV இனை expojaffna@yahoo.comதிற்கு அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2017.06.17

உறுதிப்படுத்தல் மற்றும் மேலதிக தகவல்களுக்கு
077 13 633 89

**LONDON METROPOLITAN COLLEGE**
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்
**PH NUMBER : 021 753 8395**



(available lunch time )
price 250


# ADSHAYA BOMBAI SWEETS




No. 347 kasthuriyar Road,
Jaffna.
(near uthayan paper)

S.I. Suresh
Tel: 077 175 1495

# பண்டாரவன்னியன் பதிப்பகம்



**வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றார்கள்.**

**நாவல்கள், கவிதை நூல்கள், சிறுகதை நூல்களை பதிப்பித்துக் கொள்ளவும், மற்றும் அனைத்து அச்சு வேலைகளை செய்து கொள்ளவும் நாடுங்கள்.**



பண்டாரவன்னியன் பதிப்பகம்
ஒட்டுசுட்டான்
செந்தணல் பதிப்பகம்
வவுனியா



தொடர்புகளுக்கு - வன்னியூர் செந்தூரன் 0094779717662

10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

# BRIGHT INN
## பிறையிட் இன் ஹோட்டல்



**அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....**

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

**BRIGHT INN**

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்..

**தொடர்புகளுக்கு**
**0112 329664, 0117 242233, 0117 242244**
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com






No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 11.06.2017 அன்று வெளியிடப்பட்டது.